உ

கடவுள் துணை.

—*—

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளி

சித்திரபுத்திர நயினார்கதை.

இஃது

மைலம்

சுப்பிரமணிய சுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

—*—

சென்னை-இட்டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1906

சென்னை, ஆச்சாரப்பன் தெரு 84-வது நெம்பர்.

உ

கடவுள் துணை.

சித்திரபுத்திரநயினார்கதை.

காப்பு.

அத்தனுமரனுமாலு மானநல்ரிஷிகள்தேவர்
நித்தமும்பலாபலங்கள் நெரியுடன்தெரிவதற்கு
சித்திரபுத்திரனார் செனித்ததோர்கதையைப்பாட
மத்தகமுகமுந்தொந்தி வயிறுளான்காப்புத்தானே.

வெண்பா.

சீர்கொண்டபூதலத்திற் சித்திரபுத்திரன்கதையைப்
பார்கொண்டசெந்தமிழாற் பாடவே—யேர்கொண்ட
வார்பூத்தகோலமுலை மாதுமையாளீன்றெடுத்த
கார்பூத்தகுஞ்சரமே காப்பு.

விருத்தம்.

ஆனைமுகமுமொருகொம்பும் அகன்றமார்புஞ்சிறுகண்ணும்
பானைபோலப்பெருவயிறும் பாங்கார்பூணுநூலழகுந்
தானேதோன்றியெனதுளத்தில் தயவாய்வாழும்விநாயகனே
நானேயுனதுபதந்தொழுதே னவிலுதிப்பாய்கணபதியே.

நூல்.

திருமகிழ்ந்துவாழுமந்தச் சித்ரபுத்திரர்கதையை
விருப்பமுடன்பாட விநாயகனேமுன்னுதவாய்
விக்கினவிநாயகனே வேழமுகத்தைங்கரனே
தொந்திக்கணபதியே தூயவனேமுன்னுதவாய்
கர்த்தனருள்பெற்ற கணபதியேகாத்தருள்வாய்
சத்திக்கணபதியே தையலுமைபுத்திரனே
எத்திசையும்போற்றும் மிறையோன்திருமகனே
பத்தியுடன்தொழுவோர்க்குப் பாவங்கள்தீர்ப்பவனே
சித்திரபுத்திரர்கதையைச் செப்பவருள்செய்வாயே
சீராகவாழுஞ் சித்திரபுத்திரர்கதைக்கு
நேராகவந்துதவும் நீலமயில்வாகனனே
அந்தரியேதாயே அயனாரிடத்திருக்குஞ்
சுந்தரியேவெள்ளைநிறச் சோதியேமுன்னுதவாய்
பத்தியுடனெப்பொழுதும் பாங்காகவந்துதவாய்
புத்திமிகவுண்டாகப் பொற்கொடியேவந்துதவாய்

பத்தியுடன்யானும் பாடுகிறேனிக்கதையை
ஆதியரனும் அச்சுதனும்வேதாவும்
தீதில்லாமுப்பத்து முக்கோடிதேவர்களும்
எல்லோருமாக யிருக்குமோர்நாளையிலே
சித்தமிகமகிழ்ந்து செப்புவாரீஸ்வரரும்
நன்றுதீதுதெரிய நடுவெழுதவோர்கணக்கர்
ஈசனருள்பெற்ற யெமதர்மர்தன்னிடத்தில்
நேசமுடன்கணக்கு நிச்சயமாய்த்தானெழுத
புண்ணியஞ்செய்தவரைப் பூதலத்தில்வாழ்பவரை
எண்ணியபாவ மியற்றுவோர்தங்களையும்
ஒன்றுந்தவறும லுள்ளபடிவைத்தெழுத
வென்றிபுனைநற்கணக்காய் விரைந்தேயெழுதிவர
அத்திரிநாட்டுக்கான அதிகாரியாங்கணக்கர்
முத்திபுரநாட்டுக் கெங்குமுதற்கணக்கர்
நாட்டுக்கணக்கும் நமனார்பெருங்கணக்கும்
ஏட்டுப்புறத்தில் எழுதுமெழிற்கணக்கர்
நல்லோர்குணத்தை நடுவெழுதுநாயகனார்
பொல்லார்குணத்தைப் புறத்தெழுதும்புண்ணியனார்
தன்னைநினைத்தவர்க்கும் தன்னியமஞ்செய்தவர்க்கும்
இந்நிலத்திற்செல்வம் யிசைவாகத்தந்தருள்வார்
நல்லதிருக்கதை நானிலத்திற்பாடுகிறேன்
எல்லோருநீங்க ளியல்பாகத்தான்கேளும்
உத்தமனார்தன்கதையை யுண்மையாய்த்தான்கேளும்
அத்தன்திருக்கதையை யன்பாகத்தான்கேளும்
மன்னவர்தன்கதையை மகிழ்ந்திருந்துகேட்டவர்கள்
தென்னவனார்தன்கதையை தினமுவந்துக்கொண்டாடி
பரமனார்தன்கதையைப் பக்தியுடன்கேட்டவர்கள்
பார்வேந்தன்தன்கதையைப் பண்புடனேகேட்டவர்கள்
சித்திரபுத்திரர்கதையைச் சிந்தையுடன்கேட்டவர்கள்
உத்திரங்கள்சொல்லாம லுண்மையாய்க்கேட்டவர்கள்
புத்திரநற்பாக்கியங்கள் பொருந்தியேதான்வாழ்க
வேணுமென்றயீஸ்வரனார் விஸ்தாரஞ்செய்தகதை
இனிமேல்நடத்துகிறோம் யிப்போதசெய்யும்வகை
சித்திரைக்குச்சித்திரையிற் சீரார்பௌரணையில்
விரதமதுதானிருந்து வெண்பட்டுதானுடுத்தி
புண்ணியமான பூகானந்த ன்கொடுத்து
அடைக்காயும்வெள்ளிலையு மன்பாகத்தான்கொடுத்து
பந்தல்விதானம் பாங்காகத்தான்கேட்டு

தோரணங்கள்கட்டித் துலங்குமேற்றட்டிகட்டி
விக்நைதவிநாயகரை விரைந்துமே தான்போற்றி
செய்யும்வகையவர்க்குச் சிறக்கவேவைத்தபின்பு
பூரணகும்பம் பொன்னின்குடத்தில்வைத்து
வஸ்திராபரணங்கள் வகையுடனே தான்சாற்றி
தெட்சணைகள்வைத்து திருமாலைகள்சாற்றி
சந்தனமுங்குங்குமமுஞ் சங்கையுடனே சாற்றி
வாழைக்கமுகுடனே வான்கரும்புதானிறுத்தி
பொன்னின்விளக்குவைத்துப் பூமலர்கள்தான்சாற்றி
வாழையிலைபரப்பி வைக்கும்வகைக்கனிகள்
வாழைப்பழமும் வருக்கைப்பலாச்சுளையும்
மாங்கனியுந்தேங்கனியும் மற்றுமுள்ளகாய்கனியும்
தேமாங்கனியுடனே செழுங்கதலிநற்பழமும்
விளாங்கனியுஞ்சர்க்கரையும் விரவிமிகப்படைத்து
கடலைசிறுபயறுங் காராமணிப்பயறும்
விடலைபொரியவலும் வேண்டும்பணியாரம்
தேனுந்தினைமாவுந் திரமாகத்தான்படைத்து
கரும்பொடிளநீருங் கற்கண்டுநற்கனியும்
பொரிவிளாங்காயுடனே பிட்டமுதுமெள்ளுருண்டை
கொழுக்கட்டைதேங்காயுங் கொண்டுவந்துதான்படைத்து
தோசைவடையிட்டலியுந் தோன்றிமிகப்படைத்து
அப்பமதிரசமும் ஆனதொருதேன்குழலும்
பாயசம்பாணக்கம பரிவாகத்தானும்வைத்து
அன்னமிகச்சமைத்து அரன்போலேயமுதுவைத்து
புத்துருக்குநெய்யும் பொறிக்கறிகளெல்லாம்
அடைக்காயும்வெள்ளிலையும் அன்பாகத்தான்படைத்து
அத்தனார்தம்மருளா லமுதுசெய்யப்பண்ணுவித்து
நைவேதனஞ்செய்து நியமமுடன்பூசித்து
தோத்திரங்கள்செய்து தொழுதுமிகப்பணிந்து

விருத்தம்.

கங்கையைத்தரித்தோன்பாலா கரிமுகாவுந்தன்பாதம்
சங்கையாய்த்தரணிமேயோர்கள் தயவுடன்போற்றிசெய்ய
மங்களமாகவாழ்ந்து வந்தெனக்கருளுநாதா
எங்குமாய்நிறைந்தாய்நீயு மிறைவாபோற்றிபோற்றி.

வசனம்.

இந்தவிதமாய்க்கணபதியைத்தோத்திரஞ் செய்து அர்ச்சனை நைவேதனமுதலானதுஞ்செய்ய தூபதீபங்கொடுத்து அப்பால்மேற்கதையைநடத்தவேண்டியது.

சங்கரனார்மெச்சுந் தானெழுதுமெய்க்கணக்கர்
சித்திரபுத்திரனாரைச் சீருடனே தானிருத்தி
பீதாம்பரஞ்சாற்றிப் பெரும்பறிவட்டஞ்சாற்றி
சீதளங்களான சண்பகமுந்தான்சாற்றி
சுகந்தாதியுள்ளதெல்லாந் தோன்றிமிகச்சாற்றி
அறிவாய்முறைப்படியே அர்ச்சனைகள்செய்தபின்பு
வெள்ளிலையினோடு விளங்குமடைக்காயும்
உள்ளமகிழ்நைவேத்திய முவந்துமிகப்படைத்து
புத்தசத்தினோடிலங்கும் பொன்னினெழுத்தாணியுடன்
பூதலத்திலுள்ள புதுப்பள்ளமுள்ளதெல்லாம்
இஷ்டமுடனேபடைத்து யெல்லோருமிக்கதையை
தெண்டனிட்டஇக்கதையைச் செப்பவேவேணுமென்று
பத்தியுடன்கேட்கப் பகரலுற்றாரிக்கதையை
ஓங்குபுகழ்மாதர்மைந்தர் உண்மையுடன்கேட்கச்
சொல்லுமையாவென்று துன்பமறக்கேழ்க்கலுற்றார்
கல்லுமுருகக் கருத்துடனேகேட்கலுற்றார்
மன்னுபுகழுங்கள் மங்கிலியந்தான்வாழ்க
மலரடிகளெல்லோரும் மனமுருகித்தான்கேட்க
மன்னமன்னரெல்லோரும் வாய்புதைத்துக்கேட்கலுற்றார்
அகம்பாவம்விட்டு அன்புடனேகேட்டவர்கள்
புண்ணியங்கள்செய்து புதுமையுடன்கேட்டவர்கள்
நல்லநினைவுவைத்து நன்றாகக்கேட்டவர்கள்
கதைமுழுதுங்கேட்டவர்கள் கைலைபதம்பெறுவார்
வந்தவகைக்குறைவு நீங்குமென்றாரீசரனார்
பிச்சையிடாத பெரும்பாவியானவரும்
கள்ளிகளாயுள்ளவர்கள் கணவனுரைதப்பினவர்
பிச்சையிட்டுண்ணாத பெரும்பாவியானவர்கள்
நச்சுவாய்பல்லியர்கள் நடுக்கேடுசெய்தவர்கள்
குண்டுணிகள்சொல்லும் கொடும்பாவியானவர்கள்
உற்றுநின்றுகேட்டு உறவைமுறித்தவர்கள்
பலநினைவுவைத்துப் பாவிகளானவர்கள்
கொற்றவனைவிட்டகன்ற கொடும்பாவியானவர்கள்
மற்றொருவனைத்தேடி வாழ்ந்திருக்கும்பாவையர்கள்
பிள்ளைகரைக்கும் பெரும்பாவியானவர்கள்
சண்டையிட்டுத்தந் தன்பேச்சுமேலிடவே
கொண்டவனைப்பேணாத கொடும்பாவியானவர்கள்
தன்வீட்டைச்சாற்றி அசல்வீட்டிற்போயிருந்து

பின்னங்கள்பேசும் பெரும்பாவியானவர்கள்
பசித்தோரிருக்கப் பார்த்துண்ணபாவியர்கள்
இத்பாதிபேர்களெல்லா மிக்கதையைகேளாமல்
நடக்கவேயில்லுமென்று கணக்கருரைத்தமொழி
பூமிதனில்விளைந்த புதுப்பண்டம்வந்துதென்றால்
பெரியோர்முதலானவற்குப் பிசகாமல்தானீந்து
வேதியற்குமீந்துயிந்த விரதமதைக்கொண்டாடி
கேட்டவரங்களெல்லாங் கிளைசுற்றிவாழ்ந்திருப்பார்
காரணமாய்நடந்த கதையைநடத்துகிறோம்
பதிவிரதையாயிருந்து பாங்குடனேகேளுமென்றார்
ப்த்தியுடனேகேடடால் பாடுகிறேனினிகேளும்
பக்தியுடனேகேட்டால் பாடுகிறேனிக்கதையை
உத்தமனார்தன்கதையை யுரைக்கிறேனினிகேளும்
ஈசனருளால் யெமதருமர்தன்னருகே
நேசமுடன்கணக்கு நிச்சயமாய்தானெழுத
புண்ணியஞ்செய்தவரை பூகலத்தில்வாழ்பவரை
பாவங்கள்செய்தவரை பகுந்துகணக்கெழுத
வேணுமென்றுசொல்லி விமலனார்செய்தகதை
கைலாயமீதில் காரணமானகதை
இப்படியேதானுமங்கே நடக்குந்தருவாயில்
தெய்வலோகபட்டணத்தில் திறமாய்நடந்தகதை
நன்றாகச்சொல்லுகிறேன் நாடெல்லாந்தானறிய
இந்திரனிந்திராணியும் யிருந்துமிகவாழ்கையிலே
புத்திரஆசை பிடித்துமிகப்புலம்பி
எல்லாபவிசு மிறையோன் கொடுத்திருக்க
பிள்ளையில்லாவாழ்வு பெருமையடையாதென்று
இந்திராணியம்மை யேங்கிமிகவாடி
சொன்னவசனத்தை சொல்லுகிறேன்கேளுமென்றார்
படிப்பணுகாது பாவங்கள்தீராது
ஆளடிமைகன்று ஆகாயம்போய்விடுங்காண்
ஆபரணாதியெல்லாம் அழித்திடுங்காண்மன்னவரே
சிந்திக்குங்காரியங்கள் சிதறியேபோய்விடுங்காண்
தருமங்கள்செய்யவென்று தானினைந்தாரிந்திரரும்
கன்னிகாதனங் கருத்தாகச்செய் தார்காண்
மாதானங்கோதானம் வஸ்திரதானங்களுமே
விமரிசையாய்த்தருமங்கள் வேணபடிச்செய்தபின்
தவசுசெய்யவேணுமென்று தானினைத்தாருத்தமனார்
உத்தமருமூல குண்டோன் றனைநினைந்து

தவசுகள்செய்ததை சாற்றுகிறேனினிகேளும்
இந்தக்கதையை யெள்ளளவுந்தப்பாமல்
கேட்டவர்களெல்லாங் கிளைசுற்றம்வாழ்ந்திருப்பார்

விருத்தம்.

சித்திரர்கதையைச் சிறப்புடனேகேட்டுநோன்பு
பத்தியாயிருந்தோரெல்லாம் பழவினைநீங்கிநல்ல
அத்தர்தன்பதியைச்சேர்ந்து யரனுடன்சேர்ந்துவாழ்வார்
பத்தியாய்முந்நூல்சொல்லப் பகர்ந்தனர்நூல்வல்லோரே

(வ-ம்-) அதுளப்படியென்று கேட்பீர்களானால் அனேகமான திரவியங்கள் பூமிகள் முதலான சகலபாக்கியங்களிருந்தாலும் மைந்தனில்லாதவாழ்வு வாழ்வல்லவென்று இந்திரனு மிந்திராணியும் வெகுமனஸ்தாபமாய்க் கிலேசப்பட்டு தங்கள் பொக்கிஷக் களஞ்சியத்திலுண்டான திரவியமுதலானதை யெல்லாங்கொண்டு அனேக தருமங்களைச்செய்து பின்பு பார்வதிசமேதராகிய ஈஸ்வரனைநினைத்துத் தவசுசெய்ய சித்திரபுத்திரநயினார்வந்துபிறந்துஅவதாரச்சித்தாய்நடந்த கதையானதால் இக்கதையைமனம்வைத்து அன்பாகப் பக்தியுடனே கேட்டவர்களுக்கு வரும்பலத்தை யினிமேல் விபரமாகச் சொல்லுகிறோம்கேட்பீர்களாக.

நடை.

உத்மருமாவார் உயர்ந்தகுடியாவார்
பத்தினிகளாவார் பலபிள்ளைதாயாவார்
சக்திசிவம்பொருந்தித் தாஷ்டீகராய்வாழ்ந்திருப்பார்
நீடூழிகாலாம் நேசமதாய்வாழ்ந்திருப்பார்
மங்கிலியம்வாழ்த்து மகிழ்ச்சிமிகவுண்டாகும்
செல்வமி வுண்டாகிச் சீராகத்தானிருப்பார்
ஆழ்கடல்வற்றிடினு மவர்புகழ்தான்குன்றாது
மாற்றில்லாச்செம்பொன் மதிக்குமவர்வசத்தில்
புண்ணியவானானாலும் போதமுள்ளாரானாலும்
மன்னுமதியுள்ளவும் வாழ்வுமிகவுண்டாகும்
சித்திரைமாதந் திருநோன்புவந்ததிலே
மைந்தர்களானாலும் மடந்தையர்களானாலும்
எந்தக்குலத்தி லெவர்களேயானாலும்
தந்தைகளைக்கொன்ற தரும்பாவியானாலும்
நித்தமதுவுண்ணும் நீச்சரேயானாலும்
இந்தக்கதையை யியல்பாய்கருததில்வைத்து
லோகத்தியற்கையொன்றும் யோசியாமலேயிருந்து
இளக்கும்படிமனதி லெந்நேரமும்நினைந்தால்

அங்கேதானேன்புக் கவரேவெளிப்படுவார்
இந்திரனைப்போல யினிதாகவாழ்வுமுண்டாம்
அந்தநெடுமால்பதத்தில் அழகுடனேவாழ்ந்திருப்பார்
சிவனருளுமுண்டாகுந் தீங்கொருநாள்வாராது
நம்முடையசெல்வங்கள் நாள்தோறுமுண்டாகும்
முன்னேன்பிராத மூடனேயானாலும்
இன்னேன்பிருந்தவர்க ளிகபரமுந்தான்பெருவார்
முத்தியருள்கொடுக்கு மோகங்கள்தானீங்கும்
வல்வினைகளானதெல்லாம் வழிவிலங்கித்தான்போகும்
நல்லதொருபுண்ணியங்கள் நாள்தோறுமுண்டாகும்
ஆராகிலுமிதனை யன்புடனேகேளுங்கள்
நயினார்பிறப்பையினி நன்றாகச்சொல்லுகிறேன்
கைலாசத்தில்நடந்த காரணத்தைச்சொல்லுகிறேன்
சிவனார்கைலேயினிற் சிறப்பாயிருக்கையிலே
ஆனார்மனமகிழ்ந்து ஆனபராசத்தியுடன்
கேளாயுமையவளே கிருபையுடன்சொல்லுகிறேன்
ஊழின்விதிப்படியே உள்ளபடியேயுலகில்
அவரவர்செய்தபுண்ணிய பாவங்கள்தானறியார்
நாமேயறிவமென்றால் ஞாயமல்லகண்டாயே
நம்மைநினையாமல் நாள்தோறும்வைத்தவர்கள்
சிவசிந்தையில்லாத சென்மங்களானவர்கள்
முன்வினையைவிட்டு மோட்சம்பெறுவதற்கு
வேணவரங்கொடுத்து மேதினியிற்றானவர்கள்
அசுரராக்கர் அனேகர்முதலானோர்
சத்திசிவமருந்து தானிடுக்கஞ்செய்தலால்
அப்படியேவாராமல் அதற்கானசெய்தியொன்று
ஒப்பில்லாப்பெண்ணே யுமையவளேநீகேட்டாய்
செப்பமுடன்கணக்கு சீராகத்தானெழுதி
திட்டமுடன்செய்து சிட்சைகள்தான்செய்வதற்கு
நாமேகணக்கெழுதல் நல்லதல்லகண்டாயே
கணக்கெழுதியொப்பிவிக்க கருணிகர்வேணுமென்றால்
மூத்தப்பிள்ளைகணபதிக்கு மொழிவதுநல்லதல்ல
மூலமாயிவ்விடத்தில் மூத்தமகன்தன்னைவைத்தோம்
கோலமயில்வாகனனுங் கொடுசூரன்கண்டாயே
சூரரைக்கொல்லவே சோதனைக்குவந்தோன்காண்
காலக்கணக்கெழுத ா தகப்பனகுருசாமி
கோலப்பிரமாவை கொண்டுசிறையும்வைத்தான்
அவனைத்துதித்தவற்கு அனேகவரங்கொடுப்பான
புவனக்கணக்கெழுதப் புகல்சொலவானுன்மகனும்

பாலனிருந்து பழிப்பார்க்கிடமானேம்
மக்களிருந்தும் மனுநீதிதானெழுத
இந்தவகைகணக்கு யெழுதிவரும்படிக்கு
நல்வினைகள் தீவினைகள் நன்றாயெழுதிவர
எந்தவினையானு மியல்பாகவுள்ளபடி
கணக்குப்படியே கருமங்கள் தான்பொருந்த
பிறர்சாட்சியால்கணக்குப் பிரபஞ்ச தானிருக்கும்
என்றரனார்சொல்ல வியல்பான பார்வதியும்
நல்லதுதான்சொல்லவந்தீர் நாயகரேயும்முடைய
திருவுளத்துக்கேத்தபடி செய்யுமென்றாள்பார்வதியும்
இருந்துமிகப்பேசி யீசருமேயேதுசொல்வார்
பூமாதைநோக்கிப் பொற்பலகைகொண்டுவா
என்றபொழுதே யியல்பானபொற்பலகை
நன்றெனவேபார்வதியும் நாதன்முன் வைத்தனளே
பார்வதிகொண்டுவரப் பரமனாரேதுசொல்வார்
சித்தமகிழ்ந்து சித்திரகோல்தந்திடென
அந்தப்படியே யம்மையுமைகொண்டுவர
சாதிலிங்கந்தாரம் தவளநிறப்பச்சையுடன்
நீலமணிவெள்ளையுடன் நெரியாகச்சேர்த்துடனே
பால்நிறமுமாகப் பாவித்தாற்பலகையின்மேல்
சாலவேதம்மைப்போ லாகவென்றுதபாநிதியும்
கோலமுட னிருக்கக் குறித்தாரேசித்திரத்தில்
பஞ்சவர்ணமாகப் பாகமதுகப்பாமல்
திருக்கரத்தாற்றானுஞ் சிறப்பாயெழுதினரே
தம்மைப்போலிருக்கவென்று தானேயெழுதலுற்றார்
உருவையெழுதி உருமையுடன்தான்பார்த்து
திரிபுராயேநீயுஞ் சித்திரத்தைப்பாரெனவே
இந்தப்புதல்வனைநீ யிப்போதழையுமென்றார்
அழையுமென்றபோதே யரனுபதைப்பார்க்க
ஆருமறியாத அரனார்தம்பேரருளால்
சித்திரத்திலேயுதித்த புத்திரனாகவர
வாராய்மகனேயென்று மலர்க்கரங்கள்நீட்டிடவும்
கைகாட்டிமுகங்காட்டிக் கருவுருவாய்நான்திரண்டு
கருணைவிழிநோக்கமதாற் கையிற்பிறந்தவரே
பிறந்தாரேயுத்தமனார் பேணுமறம்பெருக
பணிந்தவர்க்கேயருள்கொடுக்கும் பரமனதுசந்நிதியில்
தெண்டனிட்டுவாய்புதைத்துச் சென்னியின்மேற்கைகுவித்து
நிற்குமந்தவுத்தமரை நீலகண்டன்தான்பார்த்து
எக்கோடிகாலம் யியல்பாகவுள்ளமட்டு

அக்காலம்நீடூழி யாகவேதானிருப்பீர்
பல்லாயிரங்கோடி பகிரண்டமுள்ளமட்டும்
எள்ளுக்குளெண்ணெயைப்போ லெங்குநிறைந்திருப்பீர்
பூவுக்குவாசம்போல் பொருந்தியிருப்போம்நாம்
பறைக்குநமக்குமிது பண்புதான்கண்டீரோ
என்றுயிருக்குமிட மொருவருமேதானறியார்
அறிவார்தவமுடையார் அடையாளஞ்சொல்லுகிறேம்
நன்றுயுரைக்கிறேம் நன்மகனேகேளுமப்பா
மோட்சவழிசத்தியுன் மொழிந்ததாமதுபோல
மோட்சவழியுபதேச மொழிந்தோமேயுன்றனுக்கு
எங்களுடமனதி லிருக்குநினைவுகளும்
தேவவசுராள் ரிஷிமுனிவர்மாதவர்கள்
எறும்புகடையானைதலை யெண்பத்துநான்குனூ
ரூயிரம்யோனிபேத மாகுமுயிர்களெல்லாம்
செய்கின்றதெல்லாந் திறமாயெழுதுமென்றார்
கருவேல்நற்கணக்குங் கட்டாயெழுதுமென்றார்
கைலாயத்துள்ள கணக்கெல்லாமெழுதுமென்றார்
மகாமேருநற்கணக்கும் வைகுண்டநற்கணக்கும்
பிரம்மலோகக்கணக்கும் மெழுதவரங்கொடுத்து
உமையவளுந்தானு முண்மையாய்தானழைத்து
ஆபரணப்பெட்டகத்தை யழைப்பித்தானநேரம்
பூட்டுத்திறந்தும் புதுபூட்டைத்தான்கொடுத்து
காலிற்சிலம்பணிந்து கனகமணித்தண்டையிட்டு
முன்கைமுதாரி முன்கைவளைத்தான்சாற்றி
தங்கச்சரப்பளியுந் தரித்துவைடூரியமும்
அரனார்திருக்கரத்தா லாபரணந்தான்பூட்டி
காதிலேகுண்டலங்கள் கதிரொளிபோற்றான்சாத்தி
முப்புரிநூலு முழுவயிரப்பதக்கமுடன்
தும்பிப்பதக்கமுடன் சூடாமணிக்கவசம்
பில்லைச்சரப்பளியும் வேணபணியாபரணம்
பாதமுடிவரைக்கும் பலபணிகள்தான்பூண்டு
பார்வதியுமீஸ்வரரும் பார்த்தார்கள்கண்குளிர
அரனுடையதிருவுளத்தா லாண்டவனுமருகழைத்து
திருநீற்றுக்காப்புமிட்டுச் சித்திரபுத்திரனெனவே
உபதேசங்காதி லுரைத்தாரேயுத்தமற்கு
அதிகாரஞ்செய்கணக்கு மையனேதந்தோமென்றோர்
முத்திரைமோதிரத்தைச் சித்திரமாகக்கையிலிட்டு
நீடூழிகாலங் கணக்கெழுதுமீரெனவே

உத்தமருமங்கே யுடன்வணங்கிதெண்டனிட்டார்
அம்மையுமைபார்வதியை யப்போதேதெண்டனிட்டார்
தெண்டனிட்டுநின்றதொரு சித்திரபுத்திரரை
வாரியெடுத்து மகனேயெனமொழிந்து
ஆருமறியாதா ரரும்பொருளார்தன்மகனே
சீருடனேநீருஞ் சிவனாருட்படிக்குப்
பாரும்விசும்புமிந்தப் பரன்மொழிகள்தப்பாமல்
பல்லாயிரங்கோடி பரன்கணக்குத்தானெழுத
சொல்லர்கணக்கு சருணை யுதலுண்டாக்கி
கருமமிழல்வந்து கணக்கில்தினசரியும்
எழுதித்தொகைபடுத்தி யியற்றும்பயன்படியே
பழுதுகள்வாராமல் பார்த்தவுடனவ்வேடு
எடுத்தவர்வாசிக்க யிந்தவரம்தந்தோம்நாம்
தடுத்தவர்கள்பேசாமல் தன்னிழலேசாட்சிசொல்லும்
இச்சாட்சிவந்து யியல்பாய்கணக்கெழுதும்
உனக்குப்பிரயாசை யொன்றுமில்லையென்றுசொல்லி
கணக்கனாய்நீயிருந்து கருவேலங்கைக்கொள்ளும்
என் கருவேலம் வற்றிவித்த ரன்னேரம்
பண்டுமுன்னாருள்ள பழையகணக்குள்ளதெல்லாம்
ஆயிரம்பாக மசைக்கவொண்ணாபட்டோலை
தப்பாமேலேயெழுதத் தார்வேந்தர்தான்கொடுக்க
சித்திரபுத்திரனார் சீமானார்தன்னிடத்தில்
வாங்கினாருத்தமனார் வையகம்வாழவென்று
அன்றாடங்கணக்கு யெழுதுகிறாருத்தமனார்
இருந்துகணக்கு யெழுதுகிறார்ருத்தமனார்
சிவனார்தம்வாசலில் சிறப்பாயெழுதுகிறார்

விருத்தம்.

அய்யனுமுமையுங்கூடி யானநற்கணக்கராக
மெய்யராய்ச்சிருஷ்டித்தார்கள் மேதினியுள்ளமட்டும்
செய்பஅக்கணக்கைப்பார்த்துச் செய்திகள்தவறாவண்ணம்
தையலாள்பாகன்வாசல் தருங்கணக்கெழுதலுற்றார்.

வசனம்.

எப்படியென்றால் கைலாயத்திலே சுவாமியும் பரமேஸ்வரியும் முப்பத்துமுக்கோடி தேவர்களும நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் மற்றுமுள்ள தபோதனர்களும் இருந்திருக்கும்போது அண்டபுவனங்களெல்லாம்பாவபுண்ணியபலன் தெரியவேண்டியதற்கு நம்முடைய குமாரர்களிருபேருங் காரணமானகதைகள் சிலநடக்கவேண்டியதற்கு அவர்களாகவேண்டியதால் மற்றமுள்ளபேர்கள் இதற்குஆக்த்தக்கினவர்களாருமில்லையென்று சுவாமி பரமேஸ்வரர் தானே யோசித்து

உமையவளையழைத்துத் தங்கப்பலகையெடுத்து வரச்சொல்லி உருவ குக்க அதை உமையவள்கண் டதிசயப்பட்டு கருவுருவாய்ப் பேசும்படி கிருபைபாலிக்கவேணுமென்று அறிவிக்க அப்படியே கிருபைசெய்து விஞ்சைமந்திர முபதேசித்து சித்திரபுத்திரனென்று பேரும்வைத்து ஆடையாபரணமுதலானதும் பூட்டிமகனைக்கட்டி முகந்து அண்டபுவனங்களிலுண்டான முன்னாள் கணக்கும் கருவேலமும் விஷ்ணுமூர்த்தி பிர்மாமுதலானவர்களிடமுள்ள கருவேலமும் பொக்கிஷமுதலான தம்பாவபுண்ணியபலகணக்குங்கொடுக்க உமையவளாகியபரமேஸ்வரியும் வேண்டத்தக்கின வரங்களுங்கொடுத்து தினச்செய்திநடக்கிறபாவபுண்ணியமுதலான பலகணக்கும் நமக்கறிவியுமென்றுசுவாமிஉத்தரவுகொடுத்தபடியே சித்திரபுத்திரரும் கைலங்கிரிவாசரான பரமேஸ்வரர் சந்நிதானத்திலிருந்து கணக்கெழுதிவந்தார் இப்படிகைலாயத்தில்நடந்து வரும்போது தேவேந்திரன்மகாவாசைகொண்டுவேணத்தக்கின தருமங்களுஞ்செய்து ஈஸ்வரனைநோக்கி இந்திராணியுடனதவசுபண்ணுகிற் சவிஸ்தாரத்தை இனிமேற் சொல்லுகிறோ மன்புவைத்து ஓரமனதாகக் கேட்பீர்களாக.

நடை.

எண்ணத்தொலையாத ஏற்றசிவபூசைதனை
செய்யவேணுமென்று திறமாகவேநினைந்து
தேவாதிகளெல்லாஞ் சேரவேசூழ்ந்துவர
செம்பொன்மணித்தேரிற் சிறப்புடனேதானேறி
பசும்பொன்னுலகமான பதியைவிட்டுதேர்நடத்தி
விண்ணுலககன்னியர்கள் வேணபடிசூழ்ந்துவர
வருகிறவழிதனிலே வந்தாளகலிகைதான்
புண்ணியதீர்த்தமாடப் புறப்பட்டாளகலிகையும்
தந்திரமாயப்போது தான்கண்டாரிந்திரனார்
மெத்தமயலாகி மெய்சோர்ந்தறிவழிந்து
தேர்மேலேதான்விழுந்தான் தேவர்கள்சென்றெடுத்தார்
பார்மேலேநடந்து பகற்கண்ட ஆசையினால்
காதல்கொண்ட இந்திரனார் காமவினைநினைந்து
ஆதரவுபேசி அகலிகையைச்சேரவெண்ணி
தேரைமிகநிறுத்தி தேவர்களைத்தானிறுத்தி
மாயமாய்ச்சென்று மருத்துமாமலையிலுள்ள
காய்கனிகள்கொண்டுடனே காரிருளாமந்நேரம்
மாயபாசத்தால் அகலிகைவீட்டினிலே
சென்றாரேயிந்திரனார் தெய்வவுருமாறி

அன்றிரவுநல்லுரக்க மறிந்துநடுச்சாமத்தில்
வேளையிதுவெனவே விடியற்காலங்கூவும்
கோழியாய்நின்று கூவினாரிந்திரரும்
அப்போதுகௌதம ரானரிஷிதானும்
எப்போதும்போலவிடிந்ததேயென்றெழுந்து
தெண்டுகமண்டலமுந் திருநீற்றுப்பையுடனே
கங்கைகரையில்வந்து நின்றார்மகாரிஷியும்
கங்கையுறக்கமதைக் கண்டார்மகாரிஷியும்
மாயாவிதியோ மாயமோதெரியாது
நந்தவனஞ்சென்று நாமறிவோமென்றுவர
அந்தமலரும் அரும்பாயிருந்ததுபார்
இதுவென்னசோதனையோ யீஸ்வரரேதஞ்சமென்று
அர்த்தசாமநேரமறியாமல்வந்தோமென்று
மனக்கவலையாகரிஷி மனையிடத்தேமீண்டுவந்தார்
சென்றறிவோமென்று திரும்பிவருமந்நேரம்
இந்திரனுமவ்விருளில் ரிஷிரூபந்தானெடுத்து
வந்துஅகலிகையின் வர்னமுகம்நோக்கி
மனக்கவலைமையலொடு வந்தவரலாறெல்லாம்
கேளுமென்றுசொல்லிக் கெணிதமாய்சொன்னவுடன்
பாவிகெடுவாய் பத்தினிமார்தன்னிடத்தில்
தீவினையால்வந்தாயே சீசீயுன்மகிமையுடன்
நீதியழிந்திடுவாய் நிச்சயமேதப்பாதென்
றுசையில்லாமல் அகலிகைசொல்லிநிற்க
வாசவனுமன்னேரம் மயக்கத்தால்வீழ்ந்திறைஞ்சி
ஆசைத்துயர்தீர்ப்பாய் அகலிகையேயென்றுதொழும்
அப்போதுமகாரிஷியு மதிவேகமாகவந்தார்
மெய்யாகப்போனவரு மீண்டுவந்தாரந்நேரம்
கண்டுமிதுவென்ன காரணமோவென்றுசொல்லி
அண்டற்பதிகோனே ஆடாவென்றுகேட்க
பூனையுருவங்கொண்டு போனானேயிந்திரன்
ஆரடாயின்னேர மறிவுகெட்டுவந்ததென்ன
பேரும்பிரப்பும் பிழையாமற்சொல்லெனவே
இந்திரன்நானும் ரிஷியேநானும்மிடத்தில்
வந்ததுவேறில்லை வருஷப்பலனுள்ளதெல்லாம்
சாஸ்திரங்கேட்கத் தானவந்தேனென்றுரைத்தான்
இந்நேரம்நீயு மிடும்புசெய்யவந்தவன்காண்
அகலிகையையிச்சித்தே யடைந்தாய்நீயென்றுசொல்லி
ரிஷிக்குதானகண்சிவந்து நெருப்புபொறிபறக்க
இன்றெரித்தோமாகி லிந்திரலோகமழியும்

இச்சாபமிந்திரனை யின்றுயெரியாமல்
துற்சாபம்வேறு சொல்லுவாரப்போது
தன்தாரம்விட்டு பிறர்தாரம்வேண்டினதால்
இந்திரன்சரீரமெல்லாம் யோனியாய்ப்போகவெண்ணி
ஆயிரம்யோனி அங்கமெல்லாம்வெடிக்க
என்றுமகாரிஷியும் ஏற்றதொருசாபமிடத்
தப்பாமலன்னேரம் வெடித்ததேதான்குறியும்
கண்டானே இந்திரனுங் கண்கலக்கமுண்டாகித்
தொழுதானேரிஷியடியைத் தோற்றமுடனன்னேரம்
பெரியோரேநீர்பொறுப்பீர் பிழைசெய்தேனுன்தறியேன்
அறியவினைகளானேன் ஆசையாற்றூன்விரும்பி
வஞ்சகனுமானேன் மாபாவிநானுனேன்
வஞ்சகமாய்ச்செய்தகுற்றம் மகாரிஷியேநீர்பொருப்பீர
என்றுசொல்லிஇந்திரனும் ரிஷியையடிபணிந்து
இந்திரலோக மிழந்துநான்போகாமல்
இச்சாபந்தீர்த்து யிரட்சிக்கவேணுமென்று
அச்சாபத்தோடே யருகேதானிற்பளவில்
இந்திரனைப்பார்த்து ரிஷியுமேயேதுரைப்பார்
இருடிகள்சாப மிந்திரரேதீராது
ஆணவமாயையினுல் அழியவந்தவிந்திரரே
அரனுமாலயனுரை தாணியிலேபூசைசெய்தால்
ஆயிரம்யோனியு மாயிரங்கண்ணுகுமென்றார்
பூசைசெய்தேயிந்திரனும் போனன்காணன்னேரம்
அப்போதுமகாரிஷியும் அகலிகையைப்பார்த்துடனே
கருங்கல்லாய்ப்போகவென்று கடுஞ்சாபமிட்டனரே
அப்போதேயகலிகையை யடிதொழுதுதெண்டனிட்டு
வேர்த்துவிரித்து மெய்கலங்கியுள்நடுங்கி
இச்சாபந்தானும் எனக்கோவரவேணும்
ஈதென்னமாயமோ யெம்பெருமாள்சோதனையோ
சாபநிவர்த்தி தானருளவேண்டுமென்று
அகலிகைத்தான்பணிந்து அடிதொழுதுதெண்டனிட்டு
கேட்குமளவில் கிருபையுடன் மகரிஷியும்
அரக்கர்குலமறுக்க அன்பாகமாயவனுர்
ரகுகுலத்தில்வந்துதச ரதன்பாலனுய்ப்பிறப்பார்
நாலுபேராகவந்து பிறந்துவளர்நாளையிலே
விஸ்வாமித்திரர்செய்யும் வேள்விகெடும்படிக்குத்
தாடகைசிறுநீரால் தானிளைப்பானம்முனியும்
தசரதன்தன்னிடத்தில் சார்ந்துவிஸ்வாமித்திரர்

இராமலட்சுமண ரிருவரையுந்தானழைத்து
சங்காரஞ்செய்து தான்வேள்விமுடிந்தபின்பு
மிதிலையைநோக்கி விரைந்துவருகையிலே
கலியாணம்பண்ணவென்று கனமாய்வருகையிலே
ஸ்ரீராமன்பாதஞ் சிறப்பாகபட்டவுடன
பெண்ணாகநீவருவாய் பேர்ந்துவிடுமென்சாபம்
அப்போதுராமுன்னே யழைத்துமேகொள்வோமென
கருங்கல்பாரையாய்ப் போனாளேகன்னிகைதான்

விருத்தம்.

இந்திரலோகம்விட்டே யெழிலுருபுவனஞ்சுற்றி
சந்திரவானமெல்லாந் தயவுடன்வரும்போதந்த
மந்திரரிஷிப்பெண்வந்து மலர்கொய்யும்போதுகண்டு
இந்திரன்மயங்கிவாடி யேகினானிருப்பிடத்தில். க

இருப்பிடந்தேடிப்பார்த்து யிரவினிற்கோழியைப்போல்
உருக்கொண்டுகூவியந்த ரிஷியையுமுடனேபோக்கி
மருக்கிளர்கொடியாள்தன்பால் மயங்கியேசெல்லும்போது
செரிக்கிலாரிஷியுங்கண்டு சினத்துடன்சாபமிட்டார். உ

செய்ததோர்சாபங்காமத் திருடனாய்வந்ததாலே
வந்ததோர்பெண்மேல்மோகம் விருப்பமுமில்லையாகத்
துய்யதோர்மேனியெல்லாந் துற்குணயோனியாகும்
பொய்யல்லவென்றுசொல்லிப் போவெனவிடைகொடுத்தார். ந

இந்தநற்சாபத்தாலே யிந்திரன் தலைகவிழ்ந்து
அந்தநல்ரிஷியைத்தானு மடிபணிந்தவனைக்கேட்கத்
தந்திரவீசனாரைத் தானுமேபூசைசெய்தால்
சந்திரமேனியெல்லாந் துலங்குமாயிரங்கண்ணுமே. ச

வசனம்.

இதனுடையவிபரம் எப்படியென்றால் தேவேந்திரன்மகாவாசையா ய்தபசுசெய்யப்புறப்பட்டுவருகிறவழியிலே மருத்துமாமலைக்கௌதம ரிஷிபத்தினியான அகலிகைப்பெண்ரிஷிக்குமலர்கொய்யவந்தவிடத்தி லிந்திரன் அப்பெண்ணுடைய அழகு சௌந்தரியங்களைக்கண்டுதவனசு மறந்துபுத்திரனையும்விட்டுமையல்கொண்டு அப்பெண்வாழுகிறவிடத் துக்குப்போய்க்கோழியாய் நின்றுகூவிரிஷிவெளியிற்புறப்பட்டு ஸ்நா னஞ்செய்யப்போகப் பண்ணுவித்து தான்சேரலாமென்று யோசித்து ச்செய்தான் அப்படியேரிஷியும் விடிந்து போச்சுதென்று கங்கைக்க ரையில்வந்து கங்கை நித்திரைசெய்கிறதைப் பார்த்து நந்தவனஞ்செ ன்று புஷ்பவிரிவும் பார்ப்போமென்று பார்க்கும்போது புஷ்பங்களை ல்லாம் அரும்புமயமாயிருக்கிறதைக்கண்டு இதுஓர்காரணமா யிருக்கி ன்றதென்று தன்னுடைய இல்லிடமாகிய ஆச்சிரமத்திற்கு வரு

கையிடத்திற் றன்னுடையவிரகதாபத்தைச்சொன்னதில் அவள்மனம் நொந்து சிலகொடுமையான வார்த்தைகளைச்சொல்லுகிறநேரத்தில்ரிஷிவருகிறசாடையைஇந்திரன்தெரிந்துபூனைவேஷம்போட்டதைரிஷி ஞானதிருஷ்டியினாற்பார்த்து ஆரடா நீ உன்னுடையபேரும் வரும் வந்தவயணஞ் சொல்லென்றுகேட்க அடியேன்தேவேந்திரனென்று பெயரைச்சொல்லி இந்தவருஷத்திற் பஞ்சாங்கப் பலன் கேட்கவந்தேனென்றுதிருட்டுத்தனமாய்ச்சொன்னதைத்தெரிந்து இவன் அகலிகையைக் கபடுசெய்யவந்தவனாய்க்காணுதென்றுமகாகோபத்துடனேரிஷியானவர்கண்களிரண்டுநெருப்புப்பொறிபறக்கும்படிபார்த்துத் தன்தாரமிருக்க அசல்தாரத்துக்குஆசைப்பட்டதினால் உன்சரீரமெல்லாம்ஆயிரம்யோனிகளாகவெடிக்கக்கடவதென்றுசாபமிட்டார்உடனே இந்திரனும்பயந்துநடுநடுங்கி மகாரிஷியைத்தெண்டனிட்டுநமஸ்கரித்துஎளியேன் செய்தகுற்றம் பொறுக்கவேணுமென்றுவேண்டி நமஸ்காரஞ் செய்ததின்பேரில் ரிஷிக்குக்கொஞ்சந் தயவுவந்துதானும் மாயனாகிய சுவாமி கயிலங்கிரிவாசரைப்பூசைசெய்தால் இந்தச்சாபம் அவராலே தீர்ந்துஆயிரம்யோனியுமஆயிரங்கண்ணாகுமென்றுவிடைகொடுக்கஅப்படியேதேவேந்திரன் தன்னுடையபட்டணத்திற்குவந்துசுவாமிகைலங்கிரிவாசரைப் பூசைசெய்துவர முன்சொன்னபடியே ஆயிரங்கண்ணாகப் பெற்றுக்கொண்டான் அப்பால்நடக்கிறஅதிசயங்களைஇனிமேல்வெகு விஸ்தாரமாகச் சொல்லுகிறோமென்றவாறு அகலிகைப் பெண்ணுக்கு நடக்கிற விவரத்தை கேட்பீர்களாக.

விருத்தம்.

கவுதமரிஷியும்பெண்ணைக் கண்டகலிகையேயுன்னைச்
சவுமியமாகக்கண்டு இந்திரன்சார்ந்ததாலே
புவிதனிற்கருங்கல்லாகிப் பொற்பெலாங்குறைவாயென்று
தவமுனிமுனிந்துநின்று சற்றினார்சாபங்காணே. க
எந்தனுக்கிட்டசாப மெந்தநாட்போமென்றேங்க
அந்தநற்சாபந்தீர வானதோர்வகையுஞ்சொல்வார்
சுந்தரத்தசரதர்க்குத் தோன்றியராமன்பாதம்.
உந்தன்மேற்பட்டபோதே யொழிந்திடுஞ்சாபமென்றார். உ

வ-ம். அதெப்படியென்றால் அகலிகையானபெண்மற்றொருபுருஷாள் வாடைபடாதபெண்ணானதால் இந்திரன்கண்டு மோகித்ததினால்இந்ததேகம்விட்டுமறுதேகமாறவேண்டியதற்குக் கருங்கல்லாகப்போகக்கடவதென்றுசபித்ததினால் அகலிகையானவள்ரிஷியானவரைத்தோத்திரஞ்செய்துஎனக்கிட்டசாபம் எப்போதுநீங்குமென்றுகேட்கமகாவிஷ்ணுவானவர் அரக்கர்குலமறுக்கவேண்டியதற்காகதசரதர்புத்திரனாகச்ஜெனித்து ஸ்ரீராமனென்றநாமத்துட னிருக்குங்காலத்தில் விஸ்வாமித்திரரானவர்வேள்விசெய்கிறதைத்தாடகைசிறுநீராலழிக்கிறவேதனையைநீக்கவேண்டித் தசரதரிடத்திற்கேட்டு ஸ்ரீராமனையழைத்துக்கொண்டுபோய்தாடகையைச்சங்காரஞ்செய்து மிதிலையிற்சீதைக்குக்

கலியாணஞ்செய்ய வரும்போது அந்தராமனுடைய திருப்பாதம் உன்பேரில்பட்டவுடனேபெண்ணுருவாகிஎன்னிடம்வருவாய் அப்போது உன்னைச்சேர்த்துக்கொள்ளுகிறேனென்றுவிடைகொடுத்தபடியேசில நாட்சென்றுஸ்ரீராமர்வந்துதாடகையைக்கொன்று விசுவாமித்திரற்குச்சந்தோஷஞ்செய்துமிதிலையிற்சீதையைக்கலியாணஞ்செய்யவரும்வழியிற் ஸ்ரீராமனுடையபாதம்அகலிகைப்பெண்பேரில்பட்டுத்தன்சொரூபமானதை ஸ்ரீராமர்பார்த்து இதுவென்னவிதமென்று விஸ்வாமித்திரரைக்கேட்க அகலிகையானவள் நடந்தவிருத்தாந்தமெல்லாம் அவர்சொல்லஅப்பால்ஸ்ரீராமமூர்த்தியிடத்திற்குபோகும்படி யுத்தரவுகொடுக்க அப்படியேரிஷியினிடம்அகலிகைப்பெண்வந்து சேர்ந்துவாழ்ந்துக்கொண்டிருந்தாள் அப்பால்தேவேந்திரன்நடக்கிறவிர்த்தாந்தமும் அதன்மேல்நடக்கிறதையுஞ்சொல்லுகிறோம்கேட்பீர்களாக.

நடை-இந்திரன்கதையை யியம்புகிறேன்கேளுமினி
ஆயிரம்யோனியுங்கண்ணாகு மென்றமாமுனியை
தெண்டனிட்டுக்கொண்டு திரும்பினார்பூசைசெய்ய
தாணுவைமாலயனைத் தானேமன திலெண்ணி
ஆணவமாயைதன்னை யகலவிட்டுயோகமதாய்த்
தாணுவமாயைதன்னைத் தாரணியிலுண்டாக்கித்
தான்செய்தகுற்றமெல்லாந் தாணுவேதீருமென்று
வர்ணத்துரிஷிசாபமதை மாயவனேதீருமென்று
மெத்தவேபூசை விரும்பியேசெய்தனுற்றார்
பூசைதனைச்செய்த புதுமைதனைக்கண்டுமிகத்
தாணுவமாலயனுந தயவுடனேவந்துதித்து
ஆயிரம்யோனி யுனக்காயிரம்கண்ணாகுமென்றார்
ஆயிரங்கண்ணாகுமென்ற அம்மூவரைப்பணிந்து
ஆயிரங்கண்ணுடைய அயிராவததத்தோனும்
வரமதிகம்பெற்று வாழுகிறநாளையிலே
அகலிகைசாபம் பிடித்துதேயக்நோம்
தெய்வலோகபட்டணத்தில் வாழுகின்றதேவருக்கும்
எல்லார்க்குமாகப் பிடித்துதேசாபம்
தான்மலடாய்நின்று தவிக்கிறபுலியைப்போல்
வானுலகமெல்லா மடலாகப்போனதுவே
தான்மலடுமல்லாமல் தாரணியெல்லாந்தான்மலடாய்
பூமிவிளையாமல் பொன்மாரிபெய்யாமல்
காமனெரிந்ததுபோல் காடுகளெல்லாமெரிய
காய்க்குமரங்களெல்லாங் காயுதிர்ந்துபோனதுவே
பால்பசுக்களெல்லாம் பால்வற்றிநின்றதுகாண்
பட்சிபறவையெல்லாம் பாழ்மலடுதானாகி
காடிமிருகமெல்லாங் கடுமலடாய்போனதுவே
புல்லுங்கருவிழ்க பூக்களுமேயில்லாமல்
இந்திரலோகமெல்லா மீடழிந்துபோனதுவே

இந்திரனார்தேவி யிதுவெல்லாந்தான்தெரிந்து
இந்திராணியென்று இளங்கோதைதானிருக்க
அனர்த்தப்பிழைத்தீரே ஆனதொருயிந்திரரே
ரிஷியினதுசாபம் பலித்ததுவுங்கண்டீரோ
அவர்களுடசாபம் அவனியெல்லாஞ்சூழ்ந்ததுவோ
மதிகொண்டுவாழ்கையிலே மதிமயங்கி போனீரோ
தவசுமரந்து தட்டழிந்தகாரணத்தால்
மனதிற்றுயரமதாய் மலடாயிருந்தோமே
இடுவார்கள்பிச்சைதனைக் கெடுவார்கள்தடுத்தாற்போல்
படுவார்கள்பாடெல்லாம் பட்டோமேயிந்திரரே
அம்பலத்தில்நின்றலையும் அனியாயஞ்செய்தவர்போல்
ஊராருடைமைக்குப் பேராசைகொண்டாப்போல்
தேவர்களெல்லோருஞ் சேரமலடானோம்
இந்தப்படிசொல்லி இந்திராணிதான்புலம்ப
இந்திரனுங்கேட்டு இலச்சையுற்றுத்தான்வாடி
எந்தவிதியாலே எங்குமேயிந்தவினை
வந்ததேயென்று மனக்கவலைதான்கொண்டு
மானேகுயிலே மாருதமேநீகேளு
தேனேகனியே தெவிட்டாததெள்ளமுதே
அந்தரம்பைமாதே யடிமைகொள்ளும்பெண்ணே
புத்திரனில்லாமல் பூதலத்தில்வாழ்வதற்கு
வரத்தினையுண்டானாலுந் தாழ்வல்லகண்டாயே
சேனைபலதாழச் சிறவனொருவனில்லை
மைந்தனில்லாவீட்டில் மறையோர்புசிப்பதில்லை
மக்களிலலாவிட்டில் மற்றொருவர்போகாமல்
ஆனனைநோக்கி யதிகதவஞ்செய்தாக்கால்
எல்லாப்பதமும் இயல்புமிகவுண்டாகும்
துய்யமதியுடையாள் சுந்தரியுமேதுரைப்பாள்
மைந்தனில்லாதே மழைகாணாவானபயிர்போல்
வாடிமிகத்தளர்ந்து பயங்கியேமுகம்வாடி
என்றுரைத்தசுந்தரிக்கு இந்திரனேதுசொல்வார்

விருத்தம்.

மங்கையேசொல்லக்கேளாய் மைந்தனில்லாமையாலே
சங்கையாய்வாழ்ந்திருந்துந் தரணியில்வசையுமாச்சு
மங்கைவேணியனார்பாதங் கண்டுமேவரத்தைப்பெற்று
இங்குநாம்வருவோமென்றே யேகினார்கைலைமீதில்

நடை-சென்றுசிவன்கயிலைசேர்ந்தே யேகினார்கைலைமீதில்
சந்ததியைவேண்டித் தவம்பெறவேணுமென்று
சங்கரனஞ்செழுத்தை தங்கள்மனதில்வைத்து

சிவனோடுமையாளைச் சிந்தையிலேதானினைந்து
இந்திரனுந்தேவியுமாய் ஈசுராபாற்போகலுற்றார்
இந்தப்படியே யிருப்போம்வாஒற்றுமையாய்
கயிலைதனைநோக்கிக் கடுகவேதானடந்தார்
கடிதாய்வழிநடந்து கயிலைக்குப்போனார்காண்
தென்கயிலைசேர்ந்து சிறந்ததிருபெரும்
நந்திதனைக்கண்டு நமஸ்கரித்தாரந்நேரம்
நின்றுகைகூப்பி நெடுமூச்செறிந்துநின்றார்
தடுமாற்றநீக்கித் தனக்காகவார்த்தைசொல்லி
தேவியுநீயும் தேடிவந்தகாரியமேன
தேடிவந்தகாரியத்தை செப்புமென்வுரைத்தார்
அவ்வார்த்தைகேட்டு அமரர்கோனேதுரைத்தான்
எவ்வார்த்தையென்று இயப்புவேனடியேன
சீராயுமைசெய்தார் சிறிப்பார்களெல்லோரும்
மசவாசையாலே வருந்திநடந்துவந்தோம்
புத்திரனுமில்லாமல் பொன்னுலகையாண்டிருந்தோம்
பொன்னுலகையாளப் புத்திரனேதானுமில்லை
சந்ததிக்காகத் தவம்பெறவேவந்தோங்காண்
எங்கள்தனைக்காத்து இரட்சிக்கவேணுமென்று
அந்தமொழிகேட்டு அருள்நந்தியேதுரைப்பார்
வந்ததுநன்றுநன்று மிகவுமுனக்குண்டாம்
சிவனோடுமையாளுஞ் சிந்தைமிகமகிழ்ந்து
தவமாய்மிகவுநல்ல தரையில்மிகஊசிவைத்து
ஊசிமேல்நின்று உற்றதவஞ்செய்தீரானால
சிவனோடுமையாளுஞ் சிந்தைமிகமகிழ்ந்து
சந்ததிபாக்கியமுந தந்தேயருள்புரிவார்
இந்தப்படிநந்தி யெடுத்துரைக்கஅப்போது
நந்தீசர்சொன்ன மொழிப்படியேநாம்செய்வோம்
நன்றெனவேயிந்திரனும நாயகியுமப்போது
ஆற்றில்முழுகி யஞ்செழுத்தைநெஞ்சில்வைத்து
ஊசிநிறுத்தியதில் ஒருகாலைத்தானூன்றி
நின்றார்தவசு திருமலனைதானினைந்து
இந்திராணிதானும் இருந்தாளருந்தவசு
இருபேருமொன்றாய் இருந்தார்நெடுந்தவசு
ஈசனைபிள்ளையருள் என்றேமனதில்வைத்து
உள்ளங்காலுச்சி யொன்றுந்தெரியாமல்
தள்ளாதபுற்றும் தானேவளர்ந்ததுகாண்
வேருகளோடி விபன்மரங்களுண்டாகி
பருக்குள்வேரோடிப் படாரத்தவசுசெய்தார்
அருந்தத்தவசருமை யாரறியவில்லை

ஆனபொழுதிந்திரனும் அவன்மனைவிதன்னுடனே
எந்தப்படிதவங்கள் செய்வோமெனநினைத்து
சுந்தரியாள்தன்னுடனே சொல்லிவிசாரமுற்று
பாதாளந்தோன்றவெட்டி பரப்பாயனல்வளர்த்தி
லேதாளஅக்கினிபோல் மேலேபடர்ந்தெரிய
ஈசனேபிள்ளையருளென்றேதவசிருந்தார்
தண்ணீரருந்தாமல் சருகும்புசியாமல்
இந்தப்படிதவசு இரண்டாயிரவருஷம்
அந்தத்தவத்தருமை யானுருந்தானறிந்து
பார்வதிக்குமப்போ பரமனருள்செய்தாரே
பெண்ணேயவாருமே போவோமெனவுரைத்து
கண்டார்சிவனுங் கனிவாயுமையாளும்
முப்பத்துமுக்கோடி தேவர்கள்போற்றிநிற்க
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும்நயந்துதொழ
தவத்தருமைபார்த்துச் சந்தோஷமுண்டாக
உமையாளுமங்கே யுத்தங்கள்சொல்லுகிறாள்
பொன்னுலகையாண்டுமிகப் போகம்படைத்தருளி
மன்னுமுடித்தேவரெல்லாம் வந்துதொழுதேத்த
இந்தப்படிபலத்தை யேதுக்குத்தான்கொடுத்தீர்
புத்திரனில்லாச்செல்வம் போதக்கொடுத்தீரே
புற்றுவளர்ந்து போதமரமுண்டாகி
கண்ணீரொழுகிறதும் கண்ணினுற்காணேனென்று
சிவனாரிடத்திலே செப்பினாள்பார்வதியும்
உள்ளபடிசொன்னாய் உமையவளேயென்றுரைத்தார்
கள்ளனிவனிந்திரனுங் கடுங்குற்றஞ்செய்ததுண்டு
மானேயவனுடைய மனதின்படிசெய்வோம்
தேனேயவன்செய்த தீவினைகள்மெத்தவுண்டு
ஒன்றுமறியாமல் உபாயமாய்சொன்னதென்ன
ஆனாலுனக்காக அருள்செய்வோம்கண்டாயோ
எனறுசிவனார் இரங்கியுரைத்தனர்காண்
உமையவளுமங்கே யேதுரைப்பாளுளம்நடுங்க
ஈசுரரேயுமமடியார் ஏதபிழைசெய்தாலும்
நேயமுடனதனை நீர்பொறுக்கவேண்டாமோ
என்றுமையாள்சொல்ல இறையோன்மனமகிழ்ந்து
மன்றல்செறிவேள்வி மலைதனிலேவீற்றிருக்க
நந்திதனையழைத்து நல்லதொருயிந்திரனை
கூட்டிவரச்சொல்லி கொ த்தார்காணுத்திரவு
வென்றிபுனைநந்தி விரைந்தோடியேயழைக்க
இந்திரனுந்தேவியுமாய் இன்பத்துடனெழுந்து
நந்தீசர்தன்பின்னே நன்றாய்நடந்தனரே
கந்தமலர்குழலுங் கடுகவேதானடந்தாள்

கூட்டியேதானும்வந்து கோமானைத்தேவியுடன்
தேடுபுசழ்நந்தி திருவாசலில்நிறுத்தி
எண்ணத்தொலையாத இடியேறுதான்முழங்க
வண்ணக்கடல்முந்த வகையாகத்தான்முழங்க
சிந்தைமகிழ்ந்து திருநந்திதான்கொலுவில்
வந்துபுகுந்து வலக்கைப்பிரப்பதினால்
இதங்களறியாமல் எதிர்நின்றதேவர்தம்மை
ஒதுக்கிவிலக்கி யொருபால்நிறுத்தினரே
நேரேவிலக்கி நிறுத்தினார்பஞ்சவரை
யுற்றப்பிரம்பால் பொதுக்கியொருபுறமாய்
சென்னிவணங்கித் திரண்டுதொழுந்தேவர்களை
யுன்னியடித்தங் கொருபால்நிறுத்தினர்காண
கனாதார்தம்மைக் கடிந்துநிறுத்தியபின்
காலவெமதூதரையுங் கடக்கநிறுத்தினரே
வருணன் தல்மற்றவரை வாகாய்நிறுத்தியபின்
ஈசனுக்குத்தோழனை யேற்றகுபேரனையும்
உருத்திரரையுப்பக்கத் துண்மையாய்தானிறுத்தி
ஆனைமுகத்தானுடைய ஆறுமுகத்தினையும்
சேனைநடுமத்தியிலே சிறக்கஇருத்தியவர்
பக்கத்திலேவீர பத்திரனைதானிறுத்தி
மேனகையினோடு விளங்கும் அரம்பையுடன்
ஆனஊர்வசியும் அந்தமுள்ளதிலோத்தமையும்
நாடகங்களாடுமந்த நாதன்சிவசபையில்
தேடுபுகழ்நந்தி சேர்ந்தபலகாதர்களை
மிஞ்சுநவக்கிரக வேடிக்கையுள்ளவரை
அஞ்சாமற்சொல்லி அடைவாய்நிறுத்தினர்காண்
காளிகளையெல்லாங் கலக்கநிறுத்தியபின்
சத்தமகாரிஷிகளையுஞ் சங்கையுடனேநிறுத்தி
மற்றுமுள்ளபேர்களும் வகையாகத்தானிருத்தி
விருப்பமுடன்நந்தி விண்ணவர்கோன்கிட்டவந்து
இந்திரனேநீயும் எந்திழையாள்தன்னுடனே
வந்தரனார்பாதம் வணங்குவாயென்றுசொல்ல
அந்தப்படியே யானைர்திருமுன்பு
சென்றுபுகுந்திந்திரனுந் தேவியிந்திராணியுமாய்
மன்றில்விழுந்து மலரடியைப்போற்றிசெய்து
சிந்தைமகிழ்ந்து சிவனைதொழுந்திரென்றார்
திருவாய்மொழிகேட்டு தேவியுடனிந்திரனும்
எழுந்துநின்றுகைகட்டி யெதிராகவேநிற்க
வந்தகருமத்தை வகையாகச்சொல்லுமென்று
இந்திரனுமப்போது இயல்பாகச்சொல்லுகிறார்
புத்திரனில்லாமற் பொன்னுலகையாண்டிருந்தேன்

புத்திரனில்லாததாற் போசிப்புப்புழுவலவோ
எத்தனைதான்வாழ்வு இலங்சப்பதம்பெற்றாலும்
புத்திரனுமில்லாதே புன்னரகில்போவேனே
சந்ததிதான் தாருமெனத் தார்வேந்தன்கேட்டதற்பின்
இந்திரனேசந்ததிதான் தந்தோமெனவுரைத்தார்
சந்ததிதந்த சங்கரனார்சொற்படியே
இந்திரனுந்தேவியுமா யின்பமுற்றமீண்டனரே
மீண்டுமோராக்கள் விரைந்துவரும்வழியும்
ஊரபதியைநோக்கி யுலாவிவந்தாரப்போது
காமதேனுநற்பசுவைக் கையிலேவரவழைத்து
பசுவின்முகம்பார்த்து பரமனருள்புரிவார்
சந்ததியில்லாமல் தவசுசெய்த இந்திரற்காய்
உன்னை அவர்களுடன் அனுப்புகிறோமென்றுசொல்வார்
அன்புடனேநீபோய் அருகிருந்துதான்வளர்ந்து
வந்துவிடுநீயு மாதேயிளம்பசுவே
என்றுசிவனார் இவ்வார்த்தைதசொல்லியபின்
நிமலன் கனைப்பார்த்து நெடுமூச்சுதானெறிந்து
தோத்திரங்கள்செய்து சொல்லுகின்றதப்பசுவும்
பூலோகம்போயிருந்து புத்திரனையீன்றபின்பு
எனக்குமேமோட்சகதி யெப்போவெனக்கேட்க
அப்போதேசிவபெருமான் அன்புமிகப்பெருகி
வாறாப்பசுவே வருந்திமெலியாதே
புத்திரனையீன்றவுடன் பூந்தேர்அனுப்புகிறோம்
உன்னைநாமும் உடனழைத்துக்கொள்ளுகிறோம்
என்றுசிவனார் எளிதாயுரைத்தபின்பு
அங்கே நற்பசுவும் அறிவுமி வு டாகி
போய்வருவேனென்று பொருந்திவிடைகேட்டதற்பின்
பசுவுமேயப்போது பரமனருட்படியே
இடியுங்கடலுமெத்த வங்குரமேதான்முழங்க
அவரடியிணைபின்னே யலரித்தொடர்ந்ததுவே
(விருத்தம்.) அத்தனார்கைலைவாசன் அருட்படி காமதேனு
இந்திரன்பின்னேநல்ல விளங்கன்றாய்வேடங்கொண்டு
பந்துபோற்குதித்துமெள்ளப் பாரினில்வந்துமேய
வந்ததோர்பசுவையிந்திரன் வரிசையாய்த்துதிகொள்வானே.

வசனம்.

அதெப்படியென்றால் சுவாமி கயிலையங்கிரிவாசரான பரமேசுரர் காமதேனுவாகிய பசுவை வரவழைத்துப் புத்திரதவஞ்செய்தஇந்திரனிந்திராணிக்கு நீபோயிருந்து ஒருபுத்திரனையீன்றுகொடுத்துவாவென்று விடைகொடுக்க அப்போபசுவானது எனக்குமோட்சகெதியெப்போவென்றுகேட்கபரமேசுரர் அப்போதுபுத்திரனைப் பெற் க்கொடுத்தவுடனே பூந்தேர்அனுப்பியுன்னை இவ்விடம்வரவழைத்துக்கொ

ள்ளுகிறோமென்றுவாக்குச்சொல்லிவிடைகொடுக்க அப்படியேவிடை வாங்கிக்கொண்டு இளங்கன்றேங்க வலங்கொண்டு அண்டபுவனங்களெல்லாம் இடியேறுமுழங்கத்தக்கதாகபந்துகுதித்ததுபோல்இந்திரன் இந்திராணி போனவழித்தடநோக்கி அவர்களிருவரையுங்கண்டவுடனே அவர்களிருவரும்பசுவாகியகன்றைக்கண்டுஇதுகாரணமாயிருக்குமென்றுயோசனைசெய்துசுவாமிகைலையங்கிரிவாசராகியபரமேசுரரும் உமையாளும் அனுப்பிவைத்ததாய்க்காணப்படுகிறதென்று இருவரும் ஆனந்தங் கொண்டாடிப் பசுவைக்கட்டிமுகர்ந்துதாங்கள்கூடவே கூட்டிவருகிறார்கள்அப்பால்நடக்கிற அதிசயங்களை யினிமேல் வெகு விஸ்தாரமாகச் சொல்லுகிறோம்.

(நடை)வந்ததொருகன்றை வாரியெடுத்தணைத்து
ஆவியெடுத்து அகமெல்லாந்தான்குளிர்ந்து
இன்றுநமக்கீசர் ஈந்தருளுஞ்செல்வமென்று
கன்றையெடுத்துக் கடுகவழிநடந்தார்
பூபாலரெல்லாம் பூமாரிபெய்தார்காண்
மற்றுமுள்ளாரெல்லா மனமகிழ்ந்துகொண்டாட
பிர்மாமுதலானோர் பிரியமுடன்பார்த்துநிற்க
நடந்தாரிருவருமே நல்லுலகந்தனைநோக்கி
ஒருவர்க்கொருவர் உகந்துவந்துதான்பேசி
சந்ததியாய்வந்தகன்றை தான்கொண்டுசென்றார்கள்
பட்டணத்திலுள்ள பரிஜெனங்களெல்லோரும்
இந்திரனிந்திராணி யிவள்வரவுகொண்டு
சந்தியப க்கியமுந் தான்பெற்றுவாரார்காண்
என்றுசொல்லியிப்போ இயல் ஈய்ப்பறைபறைந்தார்
தேசமெல்லாந்தானறிய சிறப்பாய்ப்பறைபறைந்தார்
பறையோசைக்கேட்டவர்கள் பாக்கியம்பெற்றோமெனவே
பட்டணஞ்சென்றபாதர் பதியுமிந்திராணியுமாய்
அம்பொற்பதியான அழகானகற்பகக்கீழ்
செம்பொற்பதியில் சிறப்புடனேதானிருக்க
நல்லதோரிந்திரியும் நன்றாய்மனமகிழ்ந்து
சங்கரனார்தங்களுக்குத் தயவாகக்கொடுத்தகன்றை
மங்காதகன்றை வளர்த்தெடுக்கவேணுமென்று
தாதியரையழைத்துத் தயவாயுரைத்தார்காண்
மனையீர்நீங்கள் மனமகிழ்ந்துகொண்டாடி
கானகத்திலோட்டாமல் கனமாய்வளர்க்கவென்று
சாற்றுமந்தவார்த்தைதனைத் தான்கேட்டுதாதியர்கள்
போற்றியெடுத்தணைத்து பொன்போல்வளர்க்கலுற்றார்
சீருடனேபோற்றித் திறமாய்வளர்க்கலுற்றார்
ஒருநாளுக்கொருநாள் ஓங்கிவளர்ச்சந்திரன்போல்
அருமையாய்க்கன்றுதனை அன்பாய்வளர்த்தனர்காண்
பெயரிடவேணுமென்று பெருமுகூர்த்தந்தான்பார்த்து

பஞ்சாங்கக்காரரையும் பாங்காயழையுமென்றார்
வேதபிராமணரை விரைந்தேயழையுமென்றார்
சாத்திரவாதியெல்லாந் தாயேயழையுமென்றார்
தபோதனரையெல்லாந் தானேயழையுமென்றார்
கட்டியக்காரர்கள் டிந்துமிகவோடி
பார்ப்பாரையெல்லாம் பாங்காயழைத்துவந்தார்
தபோதனர்கேட்டவுடன் சந்தோஷமாகவந்தார்
சாத்திரவாதியெல்லாந் தானேதபன்வந்தார்காண்
அருள்பெற்றரிஷிகளு மன்பாகவந்தனர்காண்
நாளுமுகூர்த்தமும் நல்லதினம்பார்த்தார்கள்
ஆர்பேரிடுவோமென்று ஆலோசனைசெய்தார்
அப்போதுவியாச பகவான் அருளினோடு
இந்திரன்தாயார் இளங்கொடியாள்தன்பெயரை
இடுமென்றுசொன்னபடி யெல்லோருஞ்சொன்னார்காண்
அந்தப்படிபெயரை அழைக்கவேவேணுமென்று
வைகாசிமாதம் வளர்ந்தஇருபத்தொன்றில்
சுக்கிரவாரமதில் சூழ்ந்ததிருவாதிரையில்
அமுர்தகனயோகம் அன்பாயிருக்குதென்றார்
அந்தப்படியே அவர்கள்மொழிதப்பாமலே
பட்டணமெல்லாம் பாங்காயலங்கரித்து
சோடித்தெல்லோர்க்குங் கொடுத்தாரே தக்ஷிணைகள்
தக்ஷிணைகொடுத்தவுடன் திருப்பெயரைத்தானழைத்தார்
மாவேந்திரியென்று வரவவழத்தாரப்பசுவை
அழைத்தவுடன்பசுவை யனைவோருந்தானமிட்டார்
மாதானங்கோதானம் வஸ்திரதானமுதல்
வாத்தியங்களெல்லாம் வரிசையாய்த்தான்முழங்க
பதினெட்டுவாத்தியமும் பாங்காய்முழங்கிடவே
நாடகசாலைப்பெண்கள் நாட்டியங்கள்தானாட
வோமங்கள்பூசைகள் ஒன்றுந்தவறாதபடி
அன்னதானங்கள்முதல் அன்பாய்கொடுத்தனர்காண்
பட்டுப்பாவாடைகள் பாங்காய்க்கொடுத்தனரே
இந்தப்படியே இருபதுநாள்வரைக்கும்
மைதவழுங்கன்றுக்கு வகையாய்ப்பணிபூட்டி
பொன்னூலேதும்பும் புரிகயரும்போட்டார்காண்
நாலுகாலிற்குழப்பும் நல்லதொருதங்கமாய்
மேனியெல்லாந்தங்கமதாய் விரைந்துமேதானழுத்தி
நவரத்னவைகளெல்லாம் நன்றாகதானழுத்தி
ஆபரணாதியெல்லாம் ஆணிமுத்துவயிரமதாய்

கொம்புக்குநல்ல கோமேதகமழுத்தி
நாலுகாலிற்சிலம்பும் நல்லதொருவயிரத்தால்
வாரியேபூட்டி வளர்த்தார்கள்நற்பசுவை
பாலமுதமூட்டி பதியாய்வளர்க்கையிலே
பூப்பந்தற்குள்ளே போற்றிவளர்க்கையிலே
இந்தவரிசையா யிதமாய்வளர்க்கையிலே
கண்ணாகப்போற்றிக் கருணையுடனேவளர்த்தார்
நாலிரண்டுநாளையிலே நற்பசுவுந்தான்வளர்ந்து
திங்கட்பிறைபோலச் சீர்பெற்றுத்தான்வளர்ந்து
பிள்ளையென்றுசொல்லிப் பெருமையுடன்தான்வளர்த்தார்
இந்திராணிசெய்யும்வகை யேதென்றுதான்கேட்கில்
நித்தப்படிநடக்கும் நியமநிஷ்டைசொல்லுகிறேன்
பொய்கைதனிற்சென்று போதவேநீராடி
சிவபூசைதவபூசை செப்பமுடன்செய்தபின்பு
தங்கச்செம்புதன்னிற் றனேஜலங்கோரி
புட்பாதிகளெல்லாம் போதவேகொண்டுவந்து
பசுவினிடபாதமதைப் பாங்காகச்சுத்திசெய்து
பத்திரபுட்பமதைப் பாங்குடனேதான்சாற்றி
சிவனைமிகநினைத்துத் தோத்திரங்கள்செய்துவந்தான்
இந்தப்படியா யிருக்குமந்தவேளையிலே
பசுவின்முகத்தை பார்த்துமனஞ்சலித்து
நெடுநாளுந்தானுச்சே நீயுமென்னைப்போலே
நிற்கும்வகையேதென்று நிமலனையேதான்றொழுவார்

விருத்தம்.

ஐயையோசிவனேநான்செய் யாத்திலுங்கொடுமையுண்டோ
வையகந்தன்னிலேதான் மலடியென்றென்னைவைத்து
துய்யநற்பசுவுங்கூடச் சுற்றிலாமலடாய்நிற்கச்
செய்யுமாரேதோவென்று சிந்தையுநொந்துசொல்வான்

வசனம்.

அதெப்படியென்றால் தேவேந்திரனும் இந்திராணியும் அதிகத் தவசுசெய்து வரம்பெற்று தங்கள்பதியைநோக்கி வரும்போது சுவாமி யுத்தரவு கொடுத்தனுப்பிய காமதேனுவாகிய பசுவானதுந் தங்களிடஞ்சேர்ந்ததைக் கண்டு சுவாமியும் உமையாளும் அனுப்பினாரென்று மகா சந்தோஷத்துடன் அவர்களும் போற்றி வளர நெடுநாட் சென்றும் நம்மைப்போல நாம்வளர்த்த பசுவானதும் மடலாய் நிற்கிற காரணம் என்னமோவென்று பின்னுமவள் நொந்து கொள்வாள் மலடன் மலடியென்று வையகத்திற்பேரெடுத்ததுமல்லாமல் தவசு செய்து கிடைத்த பசுவும் இப்படி நிற்குதென்று இந்திரனிடத்தில் நெடுமூச்செறிந்து அவர்களிருவரும் புலம்பித்தவிக்கிறார்கள். எ-று.

அப்பால்நடக்கும் அதிசயத்தை விபரமாகசொல்லுகிறோம்.

நடை.

நாம்தாமலடிருந்தோம் நாம்வளர்த்தநற்பசுவும்
தவத்தருமையால்வந்த காமதேனுவுந்தான்மலடாம்
மலடாகிநின்ற மயக்கமதைதான்பார்க்க
விதியோவிதுவும் விளம்பீரோவென்றுசொல்லி
இந்திரருங்கேட்டு யேங்கிமுகம்வாடி
நாகபடைந்தவரே நானென்றுசொ லுகிறேன்
இதுவரையும்பாலன் எமக்குவரக்காணோமே
இன்னமும்நான்போய் எங்கள்பரமேஸ்பரன்பால்
தபசுசெய்யநான்போவேன் தப்பாதிளங்கொடியே
சங்கரனைநோக்கி தவசுமிகச்செய்து
வண்மையுள்ளகானகத்தில் மகாதவமாய்நானிருந்து
பூங்காவனந்தேடி போகிறேனென்றுசொல்லி
கமண்டலமும்புலித்தோலும் கையிற்பிரம்புடனே
கப்பரையும்புத்தகமும் கையில்மழுவாளுடனே
பத்தினியக்கினியைப் பாங்காகத்தான்வளர்த்து
இந்திராணிதன்னிடத்தில் யியல்பாயனுப்பினன்காண்
வந்துமேகானகத்தில் வாய்த்தத்தவசுசெய்யச்
சிவனாரைநோக்கித் தெண்டனிட்டுதவசிருந்தாள்
இந்திரனுங்கானகத்தி லிசைவாய்த்தவசிருந்தான்
வாசிவையைநோக்கி வாகாகத்தவஞ்செய்தான்
அஞ்செழுத்தைநெஞ்சில்வைத்து அரனைமிகநினைத்து
ஆராலுமுடியாத அதிகதவஞ்செய்யலுற்றான்
சற்றுமசையாமல் தவஞ்செய்தானப்போது
முப்பத்துமுக்கோடி தேவர்களும்மூத்தோரும்
நிருபவருபேர நிருதிதிசைபாலகரும்
சந்திரருஞ்சூரியருஞ் சத்தமகாமுனியும்
தேவர்களெல்லோருஞ் சேரவேதான்கூடி
மூவரையுந்தெண்டனிட்டு முகன்மையாய்ச்சொல்லுகிறார்
சித்தமிரங்குமையா தேவேந்திரனாரும்
புத்திரவாஞ்சையினால் பூமிமறந்துவிட்டார்
மைந்தனை வேண்டி மகாதபசுசெய்கிறார்
மைந்தனவர்க்கருளென்று மகாமுனிகள்தெண்டனிட்டார்
அப்போதரனார் அகமகிழ்ந்துசொல்லுகிறார்
நந்தீசர்தன்னை நயமாகத்தானழைத்து

வள்ளுவனையிங்கே வரவழையுமென்றுரைத்தார்
வள்ளுவனையப்போ வரவழைத்தாரந்நேரம்
செய்யசிவனாருந் திருவாய்மலர்ந்தருளி
சித்திரபுத்திரனை தேடியழையுமென்றார்
சித்திரபுத்திரனைச் சிறப்பாகக்கண்டான்காண்
அத்தனாரும்மை யழைத்துவரச்சொன்னார்காண்
சித்திராபுத்திரருஞ் சிந்தையகமகிழ்ந்து
பாதமதில்விழ்ந்து பணிந்துகண்டார்புத்திரரும்
தேசம்விளையாடிவந்த சித்திராபுத்திரனே
கணக்காற்பெரியவனே காரியத்தில்வல்லவனே
தேவேந்திரனுமங்கே திகைக்கிறான்பிள்ளையன்றி
மைந்தனைவேண்டி வருந்துகிறானென்றுசொல்ல
சித்திராபுத்திரருஞ் செய்தியொன்றுசொல்லுகிறார்
அரியதவம்பண்ணினாலும் ஆவதுண்டோ இந்திரற்கு
மைந்தன்பிறக்க வழகில்லைநாயகரே
என்றருளிச்செய்ய இருந்தவர்களெல்லோரும்
சத்தியருள்கொண்டு தவஞ்செய்தஇந்திரற்கு
புத்திரனைத்தான்கொடுப்பாய் பூதனாதாவென்ன
சிவனாருமங்கே திருவாய்மலர்ந்தருளி
பூமிவிளையாடிவந்த புண்ணியரேநீருமொரு
தீமையைநீக்குமென்று திருவாய்மலர்ந்தருளி
பாலகராய்ப்போய்பிறந்த பரமனருள்கொடுக்க
புத்திராாகப்போய்ப் பிறப்பீரென்றுசொல்லி
தேவேந்திரன்வயிற்றிற் சென்மிக்கைதன்மமல்ல
இந்திரற்குப்பிள்ளை யெழுதவில்லைகணக்கிலென்ன
அந்தமொழிகேட்டு அரனாருந்தான்மகிழ்ந்து
எந்தவகையானாலும் இந்திரற்குஅன்புடனே
செந்தாமரைப்பூ நினம்பூர்க்கும்பொய்கையிலே
இந்திராணிதான்வளர்த்த இளம்பசுவுமப்போது
தண்ணீர்குடிக்கத் தான்வருமேயந்நேரம்
தாமரைப்பூவாகத் தண்ணீருடன்கலந்து
ஆவின்வயிற்றில் அவதரிக்கஅற்புதங்காண்
வளர்த்தபசுவயிற்றில் வருமாயெனவுரைத்தார்
ஆகிலடியேனருள்பெற்றேனென்றுசொல்லி
கூறப்பெற்றேனென்றுசொல்லி கும்பிட்டெழுந்திருந்து
தேவர்முனிவரையுஞ் சிறப்பாகவேயனுப்பி

வாய்புதைத்துநின் று மகவைமிகநோக்கி
செப்புகின்ருரீசுரரும் சித்திராபுத்திரற்கு

விருத்தம்.

அரனுடனேவாழுக்தேவ ரானதோர்வுயிர்கட்கெல்லாம்
பரமனுடன்பாவபுண்ய பத்திரமெழுதவேண்டிக்
கரமிசையுதித்தசித்திரக் காணிக்கையாகயென்முன்
றருமையாயவனையீசன் வரவழைத்தருள்செய்வானே. ௧

சித்திராபுத்திரரைச் சிவனுமேவரவழைத்து
புத்திரவரவிதன்னிற் பாங்குடன்பூவாய்சென் று
வச்சிரன்வளர்த்தஆவின் வயற்றினிற்சென் றுபுக்கும்
புத்திரனய்ப்பிறக்கப் போவெனவிடைகொடுத்தார். ௨

எழுதியகணக்கைநீயும் இறைவனம்மால்வசத்திலாக்கிப்
பழுதில்லாப்பூமிதன்னிற் பகுத்துரைதெரியாதப்பால்
வழுவில்லாதொழுகநாமும் வரமுனக்கருளிச்செய்தோம்
எழுமெனப்பூமியாக கணக்கையுமருபுக்கிர்தான். ௩

வசனம்.

அதெப்படியென்ருல் முன்கைலாசபருவதத்திலேயும் வைகுண்டத்திலேயும் பிரமலோகத்திலு முண்டானதேவர்கள் ரிஷிகள் தபோதனர்கள் முதலானவர்கள் செய்கிற பாவபுண்ணியக் கணக்குக் கருவேலமும் பார்த்துவரச் சிருட்டிசெய்த சித்திராபுத்திரரை ஈஸ்வராவரவழைத்துத் தேவேந்திரன் மாகாகொடூரமாய் அந்தரமான தவசுசெய்கிறதைப் பாருமென்றுசொல்ல அப்போது சிவன் எந்தவி ; ம: கிலும் நீயேபோய்பிறந்து புத்திர வாஞ்சையைத் தீர்க்கவேண்டுமென்று சொல்ல இந்திரன் வயற்றிற்பிறக்கக் காரணமில்லை யென்று சித்திரா புத்திரர்சொல்ல இந்தராணிக்கு நாமனுப்பிய காமதேனுவாகியபசுவின் வயிற்றில் ெசன்மிததால் குற்றமில்லை அதற்கு சம்பு மகாப்பொய்கையாகிய தடாகத் தாமரை புஷ்பமாய் அவதரித்தால் அப்பொழுது அந்தப்பசுவானது தண்ணீர் குடிக்கவரும் தண்ணீருடனேபோய்செனித்துப் பிறப்பாய் உடனே மகவாசைதீரும் பூமியிலுண்டாகிய முன்பாவபுண்ணியக் கணக்குகளுஞ் சீராகுமென்று கணக்கெடுத் தெழுதிக் கொடுத்து எழுத்தாணியுங் கொடுத்து அவிடத்திலுண்டானகணக்குக் கருவேலமும் மகாவிஷ்ணுவசம் ஒப்புவிக்கச்சொல்லி யுத்தாவு கொடுத்து அப்படி ஒப்புவித்தபின்பு சித்திரபுத்திரர் அவ்விடத்திலுள்ள

பெரியோர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு சம்புமகாபொய்கையில்வந்து அவதரிக்கிறகதையை இனிச்சொல்லுகிறோம். எ-று.

நடை.

ஈஸ்வரரும்ஈஸ்வரியு மின்பமுடன்மகிழ்ந்து
எந்தெந்தபுத்தகத்தை யெடுப்போனென்கோவே
ஆயிரம்போனாலும் அசைக்கவொண்ணாபுத்தகமே
ஞானநெறிநீதிமுறை நன்னூலின்நீடுபுகழ்
பூண்டவர்கள்புத்தகத்தை போயெடுத்துவாருமென
போயெடுத்துவந்து பொற்பலகைதன்னில்வைத்தார்
பொன்னெழுத்தாணியுடன் புத்தகமுங்கைகொடுத்தார்
முற்கணக்கும்பிற்கணக்கும் முன்னேற்றேறனுபடியும்
எக்கணக்கும்பார்த்து எழுதுமென்றார்புத்திரரை
எழுதிவந்தநாள்வரையில் எடுத்துகொடுத்தனர்காண்
ஏழுலோகக்கணக்கு மெழுதிமிகக்கொடுத்து
பாவிகணக்கும் பஞ்சபாதர்தன்கணக்கும்
நாகலோகத்திலுள்ள நன்மையுள்ளதன்கணக்கும்
பூமிதனில்மாயவனார் புண்ணியபாவக்கணக்கும்
எல்லாக்கணக்கும் எழுதிமிகக்கொடுத்து
ஆதிபரமசிவன் அண்டரண்டந்தான்வகுத்து
மூத்தக்கணபதியும் முதுகுவலமிருக்க
இளையகுமாரன் இடதுபக்கந்தானிருக்க
தேவாதிகளெல்லாஞ் சேரவேதானிருக்க
இருடிமுனிவோர்கள் எல்லோருந்தானிருக்க
சாதிபதினெட்டுந் தப்பாமல்தான்வகுத்து
எமதர்மராசன் இயல்பாகத்தூதருடன்
பல்லாயிரங்கோடி பகிரண்டந்தான்வகுத்துப்
புண்ணியபாவம் புதுமையாய்த்தான்வகுத்து
இந்தவரைக்கணக்கை யியல்பாகத்தானெழுதும்
வச்சிரகாயமாய் வகுந்துகணக்கெழுதும்
பத்திரமாயதிகாரம் பலநாளுமுந்தனுக்கே
தப்பாமலுந்தனுக்குத் தந்தோமெனவுரைப்பார்
சக்திரசூரியர்கள் தங்கவொளிபோலெனவே
குண்டலமுங்காதிலிட்டுக் கூந்தல்முடிசூட்டி
ஆபரணாதியெல்லாம் அழகழகாய்த்தான்பூட்டி

சிவனாரிடத்தில் தீர்க்கவிடைவாங்கி
அம்மையுமையாளிடத்தில் அன்பாய்விடைவாங்கி
அங்குமுள்ளபேரையெல்லாம் அன்பாய்விடைவாங்கி
எண்ணுபிரப்பூதம் எடுக்கவொண்ணுபட்டோலை
கூட்டிச்சமைத்துக் கொடுத்தார்களந்நேரம்
கட்டிச்சுருட்டிப் பக்கத்திற்றனிடுக்கி
தாங்குவாயென்று தானேவரங்கொடுத்தார்
தாமரைப்பூவாகத் தாயித்தாருத்தமரை
சித்திரைக்குட்சித்திரையிற் சிறந்தபௌரணையில்
அந்தத்தலைக்கீழமை யாதித்தவாரமதில்
சித்திராபுத்திரனுய்ச் சென்று அவதரிப்பாய்
புத்தகமும்மூந்தூலுங் கூடப்பிறக்குமென்றூர்
சிவனாருள்படிக்குச் சிறந்தவிடைவாங்கி
அயிராவதங்களென்னும் ஆனைகளைதான்பூட்டும்
ஆகாசத்தேரும் அப்போதுவானேறி
வாராரேயுத்தமனர் வாவிதனைநோக்கி
செண்பகங்களாடுமந்தச் சிறந்தவொருபொய்கையிலே
ஆணிப்பவளம் அடுக்கடுக்காய்த்தான்விளையும்
வயிரவைடூரியமும் வச்சிரகோமேதகமும்
புஷ்பராகங்களும் புரளுமந்தபொய்கையெல்லாம்
முத்துக்கள்வந்து முழங்குமந்தவாவிதன்னில்
சங்குகள்சூலங்கொண்டு தவழுமந்தப்பொய்கையிலே
கெருடனுமங்கே கிளைகூடுகொண்டாடும்
மயிலினங்களெல்லாம் மகிழ்ந்துவிளையாடும்
அன்னங்கள்தாராக்சள் அமர்ந்தாடும்பொய்கையிலே
வானரங்கள்பாடி மகிழ்ந்துவிளையாடும்
மாடப்புராக்களெல்லாம் வகைவகையாய்த்தான்விளங்கும்
புனுகுடன்பிள்ளை பொருந்தமிகவாழும்
சவ்வாதுடன்பிள்ளை தானுமிகவாழும்
கஸ்தூரிபிள்ளை கலியுமந்தபொய்கைதனில்
கவரிமான்வந்து கலந்துவிளையாடும்
காண்டாமிருகங்கள் கலந்தாடும்வாவிதனில்
புட்பாதிகளெல்லாம் பொலியுமந்தநீராவி
கனிவகைகளெல்லாம் காய்க்குமந்தபொய்கையிலே
செந்நெல்விளைந்து சிறந்திருக்குநீராவி

மல்லிகைமுல்லை வாய்த்தசிறுபிச்சிகளும்
இருவாட்சிபிச்சி யுடைந்துமிகவீசும்
மருவுமருக்கொழுந்து மணம்வீசும்பொய்கைதனில்
ஏலங்கிறும்பும் இலங்குமந்தநீராவி
சாதிக்காய்பத்திரியும் தான்விளங்கும்பொய்கைதனில்
மாங்கனிற்றேனருவி வந்துமிகப்பாயும்
வண்டுகள்தும்பிமுதல் மதவுண்ணும்பொய்கைதனில்
மந்திகள்பாய்ந்து மதுவுண்ணும்பொய்கைதனில்
செங்காமரைபூத்துச் சிறப்பிக்கும்வாவிதனில்
அல்லிமலரும் அப்படியேதான்பூக்கும்
சந்திரர்கள்சூரியர் தானுதிக்கும்பொய்கைதனில்
ஆதிப்பிரமாவும் அமர்ந்திடும்நீராவி
நாராயணர்முதலான நல்லரிஷிகளுமே
முனிவர்முதலான நல்லரிஷிகளுமே
முனிவர்முதலானோர் முழுகுமந்தபொய்கையிலே
கன்னியர்களெல்லாம் கலந்துவிளையாடுவார்
பழவினைகளெல்லாம் பரந்தோடுங்கண்டீரே
தீவினைகளெல்லாம் திடுக்கிட்டுத்தானோடும்
பிணிகள்முதலாகப் பிறக்கிட்டுத்தானோடும்
கிழவர்முழுகினல் பாலகராகிப்பிறப்பார்
இந்தவிதமா யிருக்குமந்தபொய்கையிலே
சித்திரபுத்திரரும் சீராகவந்துதித்தார்
தாமரைப்பூவாகத் தான்வந்தவதரித்தார்
இனிமேல்நடக்கும் மிக்கதையைக்கேளுமென்றார்
ஏலங்கருங்குழலாள் இந்திராணிதன்றனக்கு
சித்திராதேவி சிறையவேதான்பிடித்து
பஞ்சணைமெத்தையினில் சயனித்தாள்பைங்கொடியும்
அப்போதுசொற்பனங்கள் அழகாகக்கண்டனளே
கண்டுமகிழ்ந்துக் கடுகிட்டெழுந்திருந்து
தாதியரைதானழைத்து தானுமேயெடுத்துரைப்பாள்
இந்திரனைப்போலே பெந்தன்மடிமீதில்
சந்திரர்சூரியர்கள் தங்கள்ஒளிபோலச்
செம்பொன்னெழுத்தாணியுடன் சேர்ந்தமர்ந்தபிள்ளைகண்டேன்
பச்சுடம்புநல்ல பால்சுரக்கக்கண்டேனே
காயாதவாழை காய்க்கமிகக்கண்டேனே

இன்பம்பெருகி யிருதோளும்பூரித்தேன்
கொட்டைபலாமரமுங் கொழுந்துவிடக்கண்டேனே
பதினாலுலோகமுதல் பண்பாய்கணக்கெழுத
கண்டகனவும் கைமேற்பலிக்கவென்று
சிந்தித்துநின்று சிவன்பாதமேதொழுது
வேழமுகத்து விநாயகனைத்தெண்டனிட்டு
மயிலேறும்பெருமானை மனமகிழ்ந்துகொண்டாடி
மூவரையுமங்கே முழுதுமேதெண்டனிட்டாள்
சூரியபகவானைத் தோத்திரங்கள்செய்யலுற்றார்
கண்டகனாப்படியே காசினியிற்கொண்டாடி
குண்டலங்கள்மின்னக் குமரன்வந்துதோன்றுவதால்
பொற்கனகமாரி பொழிந்திடுங்களெல்லோரும்
என்றரணார்பாசம் ஏந்திப்பதித்துநின்று
இந்திராணிதான்வளத்த இளம்பசுவையந்நேரம்
தும்புதரித்துவிட்டார் சூரியனுமப்போது
கட்டவிழ்த்துக்கொண்டு கடுகிப்புறப்படவே
இந்திராணியம்மை இளங்கோதையோடிவந்து
முத்திமுகந்து முகத்தைமிகத்தடவி
நான்மலடியென்று நாடெல்லாந்தானறியும்
என்னோடேகூடவே நீயுமலடாகாமல்
இனத்துடனேகூடி யின்பமுறமேய்ந்திடுவாய்
வனங்கள்தனிலே வளர்மிருகமெத்தவுண்டு
இனத்தாரைவிட்டு இனம்பிரிந்துமேயாமல்
எல்லைகடாவாமல் இளம்பயிரைத்தின்னாமல்
ஈனாதசாலி யிளஞ்சாலிதின்னாமல்
குலையோடேயாமணக்கைக் கொழுந்தோடருந்தாதே
சோளமிருக்கக்கண்டால் சுற்றியேமேயாமல்
எலக்கடுகுநாய்க்கடுகு ஏறிட்டுப்பார்க்காமல்
கள்ளிகளைத்தின்னாமல் கறண்டபுல்லுமேயாமல்
இத்தனையும்நீக்கி யிதமாகத்தான்மேய்ந்து
மாலைகருகருத்து மையிருளாகுமுன்னே
எல்லைக்குவந்துவிடு என்மகளேவந்துவிடு
இந்தப்படியே யிசைந்தபுத்திதான்சொல்லி
மேய்ந்துவாவென்று விட்டாளேயப்பசுவை
மேய்ந்துவருவதற்கு மெய்குளிர்ந்தேயப்பசுவும்
சிலம்புகலகலெனச் செஞ்சலங்கையோசையிட
ஆபரணத்தோடே யசைந்தேவிளையாடி
அடிமேலடிவைத்து அன்னம்போல்தானடந்து
காடுடனேசென்று கடுகவேதான்மேய்ந்து
பொற்புல்லும்தின்று புனற்புல்லுந்தானருந்தி
தண்ணீர்தாகத்தை தான்பொருக்கமாட்டாமல்

கண்ணாயிரமுடைய காவலனார்சோலையிலே
இந்தப்படியே யிருக்கிறநேரமதில்
சிவனாருமங்கே சித்தமகிழ்ந்தன்னேரம்
அலைகடலிலேயுதிக்கும் ஆதிபகவானை
விரையவேதானழைத்து விடைகொடுத்தாரென்னவென்றால்
தேசமதையாளுந் தேவேந்திரன்தேவி
பிள்ளையாய்த்தான்வளர்த்த பெரியதொருபசுவும்
சம்புத்தலத்திற் றனிருக்குஞ்சோலையிலே
திக்குதிசைகள் தெரியாமல்நிற்குதுகாண்
வழித்தடங்காட்டி வரும்போதுவாவியிலே
தண்ணீர்குடிக்குந் தருவாயில்நீதானும்
செந்தாமரைப்பூவைச் சிறப்பாகமுன்னிடுவாய்
என்றரனார்சொல்ல ஏற்றபகவானும்
திகைத்தபசுவுக்கு தெரியவழிகாட்டிடவே
வழியின்படியே வந்ததுவேநற்பசுவும்
சம்புகாப்பொய்கை தன்னருகேவந்துநின்று
பொய்கைதனைக்கண்டு பூரித்துஆகமெல்லாம்
சுற்றிவலம்வந்து தய்யதிருநற்பசுவும்
பொன்னின்படுத்துயரைப் போதவேவந்துகண்டு
தங்கப்படுத்துரையைத் தான்கண்டேயங்குள்ள
புதுமைகளெல்லாம்பார்த்து பூரித்திருதோளும்
ஆவலுடன்தண்ணீர் அருந்துமந்தவேளையிலே
தப்பாமல்சூரியனும் தாமரைப்பூபரித்து
போடவேதான்திறந்து பொறிகலங்கிச்சூலாகி
வால்விசிறிக்கரையேறி மயங்கியேசூலாகி
முட்டுகளுந்தானசைந்து முகமுமிகக்குழைந்து
வாயில்நுரைதிரண்டு மயிர்க்குச்சுத்தான்தெரித்து
முட்டிமுனங்கி முன்வயிறுதான்தள்ளி
நாலுதிக்கும்பார்த்து நடுங்கிவழிநடந்து
காதுமடைத்துக் கண்ணுமிருளாகிச்
சிவனாரையங்கே தோத்திரங்கள்செய்துமெள்ள
எல்லைதனில்வரவும் ஏங்கிமிகத்தளர்ந்து
செட்டியார்கள்வீதியிலே சென்றுமேகால்மடித்து
படுத்துதேயப்போ பலபேருமோடிவந்து
காடாளுமிந்திரற்கும் நாகமடைந்தையற்கும்
தேடாதிரவியமே சிறந்தமகாதேவியம்மா
மயிலேநீபோமிடத்தில் மலைநாகர்தீண்டியதோ
மாயமிருகம் வளைந்துவெருட்டினதோ
நச்சுபல்லுத்தின்றதுவோ நாகங்கடித்ததுண்டோ
என்றுபுலம்பி எல்லோருமோடிவந்து
விஷத்துக்குமேல்பார்த்து தேவியுடனீறுமிட்டு

செட்டிச்சிகளெல்லோரும் சிறக்கவேவோடிவந்து
சந்தனங்குங்குமந் தானுமிகக்கொண்டுவந்து
ஆவின்மேலெல்லாம் அடைவாகத்தான்பூச
அப்போஒருதாதி யானதொருவார்த்தைசொல்வாள்
பசுவின்வடிவல்லப் பாலன்வடிவென்றுசொல்லிக்
கழுநீரும்புல்லும் கலந்துகுடிக்கவைத்துச்
சந்தனமும்பன்னீருந் தானுமிகப்பூசி
ஆலவட்டங்கொண்டு அருகிருந்துதான்வீச
சுற்றித்திரைகட்டி சூழவேகாத்திருக்க
தாகந்தெளிந்து தானவிழித்துப்பார்த்தவுடன்
பசுவின்வயற்றில் இருக்குமந்தபாலகனும்
சிறப்பாய்பிறந்திருக்க வேணுமென்றார்செட்டிச்சிகள்
என்றபொழுதே யெழுந்துதேநற்பசுவும்
செம்பொனமணிமண்டபத்திற் சேரவேவேணுமென்று
ஆசாரமேறி அசையாமணியடித்து
தங்கமணிதூணோடே சாய்ந்ததுகாண் அந்நேரம்
இந்திராணிதேவி யிளங்கோதைதான்கேட்டு
அசையாமணியை யசைக்கவந்தகாரியமேன்
இந்திரனும்போனார் தவத்துக்கேயென்றுசொல்லி
எந்தவிதமோ தெரியவுமாட்டுதில்லை
பாருங்களென்றுசில தாதியரைவிட்டார்காண்
போனார்கள்தாதியர்கள் பொற்கொடியாள்சொற்கேட்டு
வந்துமேபார்த்து மறுபடிதான்சொல்லலுற்றார்
நாகமடைந்தையரே நல்லதொருதேவியரே
வளர்த்தபசுவந்து மயங்கிகிடக்குதென
எண்ணத்தொலையாதே எற்றபசுக்களுண்டு
எந்தபசுவென்றுகண்டீர் ஏந்திழையீரசொல்லுமென்றாள்
கண்கள்பவளமுமாய் கண்டவர்க்குநல்லரவாய்
நெற்றியிலேவெள்ளையுமாய் நிறமெல்லாம்பொன்னிறமாய்
என்றமொழிகேட்டு ஏந்திழையுமோடிவந்து
சிங்காதனத்தைவிட்டு திரும்பியேயோடிவந்து
காராவினண்டையிலே கதறியேயோடிவந்து
தேனேமரகதமே தியக்கம்வந்தகாரியமேன்
மானேமரகதமே மயங்கிவிழுந்ததென்னவென்று
துயரத்துடனே சொல்லுவாளிந்திராணி

விருத்தம்.

அந்தணனடைத்ததுண்டோ வரனுரைத்தவிர்த்ததுண்டோ
பிந்தையாய்பெரியோர்முன் னூல்நெடுமுறைதவறினேமோ
கந்தனமாலபன்வேறென்று கருத்தினில்நினைத்ததுண்டோ
எந்தன்முன்னோர்கள்செய்த இகழ்வினைமுற்றவாறோ

நடை.

மானேயுனக்கு வஞ்சனைகள்செய்ததுண்டோ
கொள்ளிகண்ணியான கொடும்பாவிபார்த்தாளோ
மலைமீதிலேறி மலைப்புல்லுதின்கையிலே
விஷங்கள்கடித்ததுண்டோ விள்ளுவாயெந்தனிடம்
உந்தன் திருமேனி யுள்ளுடைந்துவாடுவதேன்
இந்தவிதிவருமென்று அறியேனேயென்றுசொல்லி
குங்குமமுஞ்சந்தனமுங் கூட்டிகுழம்புசெய்து
செங்கையால்வாரித் திமிர்ந்தாளேஉத்தமியாள்
அப்போதுகூடத் தீரவில்லைமதிமயக்கம்
காடிக்கழுநீருங் கஞ்சியுந்தான்கலந்து
விட்டபொழுதே குடித்ததேநற்பசுவும்
பாரக்களைதீர்ந்து பார்த்துதேயாநேரம்
கண்பொறிபறக்குங் காலசைத்துவால்சுற்றும்
மானத்தைப்பார்த்தும் மனைதையருவருக்கும்
பூமியைப்பார்த்துப் பொறிகலங்கிசீறிநிற்கும்
ஆனந்தமாகி யதிரநடனமிடும்
சிவசிவாவென்று திகைத்துநெடுமூச்செறியும்
அரகராவென்று அலறுவதைத்தான்கண்டு
தேவியுமங்கே திகைத்துமொழிசொல்வாள்காண்
பசுவுக்குவந்தநோய் பார்த்தறிந்துசொல்வோரை
கூட்டிவாவென்றாள் கோதைமயிலாளும்
ஆயர்இடையர்தம்மை யழைத்தோடிவந்தார்கள்
வந்தவர்களப்பசுவை மதியோடேதான்பார்த்து
சொல்லுவாரந்தத் தோகைமயிலாட்கு
ஆரமுலைப்பசு மடங்கிமிகசூலாகி
இன்றுநாளையினு மீற்றுமயக்கமது
என்றுதான்சொல்லி யேகினாரப்போது
பசுவினமயக்கத்தைப் பார்க்கமுடியாமல்
கோவிற்கால்தன்னிற் கொண்டுவாவென்றுரைத்தாள்
தாதியர்கள்கூடி தானெழுந்தாரப்போது
கொண்டுவந்துவிட்டார்கள் கோவிற்கால்முன்பாக
சூழநிறைந்து தூயயிடம்பண்ணுவித்து
வாய்த்தபரிகாரிகளை வரவழையுமென்றுரைத்தாள்
பரிகாரிகள்வந்து பணிந்துமெத்தெண்டனிட்டார்
கோவைப்பிழைக்கவந்தால் கோடிதனம்நான்கொடுப்பேன்
என்றமொழிகேட்டு ஏற்றபரிகாரிகளும்
காட்டுமருந்துங் கடைமருந்துமொருகோடி
கொடுத்திடுமயக்கங் கொஞ்சமுந்தீராமல்
பசுவின்மயக்கம் பார்க்கமுடியாமல்
சிவனைநினைந்து தோத்திரங்கள்செய்யுகிறாள்

அபயமபயமென்றார் அல்லலொழிப்பாயென்றார்
செங்கைசிவப்பத் திருவயற்றிலேயறைந்தாள்
அய்யோகோவென்று அடித்துவிழுந்தழுதாள்
அப்போசிவனும் அங்குள்ளதேவர்களும்
கயிலாசமீதிருந்து கண்டார்களந்நேரம்
வானுலகந்தன்னை வழித்திறந்துபார்க்கலுற்றான்
வைகுண்டலோகம் வழித்திறந்துபார்த்தார்கள்
அரியாயமோவென்று அலறியழுசகுரல்
மகாதேவர்தானும் மனதாரகேட்டதற்பின்
சிவபெருமானங்கே திருவாய்மலர்ந்தருளி
சிவபெருமாயீஸ்வரியைத் திரும்பிமுகம்நோக்கி
போய்நீயுமையே புகழ்ந்தகுறிசொல்லுமென்றார்
பதினியாய்ச்சென்று பகுந்துரைப்பாயென்றருள
அத்தியுமையவளும் ஆனாரருட்படியே
கொக்கிரகுருடிக் குறமாதுதன்னைப்போல்
பொற்கூடைபொற்பிரப்பு பெற்குடுக்கைதான்முழங்க
பாடியிருந்து பரமனிருதாள்பணிந்து
இருந்தாளைப்பார்த்து இறைசிவனார்சொல்லுகிறார்
குன்றுகல்லச்சி கொடிச்சிகொடையிடையாள
வள்ளிகுறமாது மலையரசன்மகளே
என்றன்றுகைபார்த்து எற்றகுறிசொல்லும்
குறிசளுமப்போது குறமாதுசொல்லுகிறாள்
மண்ணுஞ்சுமந்ததுண்டு மத்தாலடிப்பட்டதுண்டு
சிறுத்தொண்டர்பிள்ளைகறி சென்றுண்ணபோனதுண்டு
வண்டோதரியுடனே வாளரக்கன்மாளிகையில்
கூடியிருந்து குழந்தையாய்ப்போனதுண்டு
அருநாலச்சாழன அருமைமகனையன்று
தேரூர்ந்துகொன்றெழுப்பச் செய்ததுந்தானுமுண்டு
பிள்ளையாருமைந்தன பெருவயிறுந்தானுமவன
அன்னைபிதாவுக்கு முன்னேயவன்பிறந்தான்
இப்படிகல்லகுறி இசைவாகத்தோணுதென்றாள்
அப்போதுசிவனாரு மருளுவார்வுத்தமிக்க
கொச்சைக்குறத்தி குறிபார்க்குஞ்சிற்றிடைச்சி
கழுவிலிருந்துகை காட்டினர்தங்கையமோ
உழுதுதிரிந்தபன்றி யுன்களண்ணன் தானல்லவோ
ஆச்சியர்களவீட்டில் அடியுண்டுகட்டுண்டு
வெண்ணைதிருடியுண்ட வெறிக்காரன் தங்கையல்லோ
பு[illegible]தங்கையல்லோ
என்றேபிருபேரும் யேற்றபடிகொண்டாடி
சந்தோஷமாகி தாமேவிடைகொடுத்தார்
திருவாபரணமெல்லாம் பூட்டிச்சிவனாரும்

போய்வாரேனென்று புனிதர்விடைபெற்று
மாதாவுமந்நேரம் வானுலகுவிட்டிறங்கி
தேவேந்திரலோகஞ் சென்றாள்குறமாது
மைவாழ்குறத்தி வானவர்கள்கோவிலந்தான்
இந்திராணியம்மை யெழுந்துமேயோடிவந்து
வாராய்குறமாது வந்ததேனென்னவுரைத்தார்
பாராய்குறத்தியம்மா பசுவைப்பிழைப்பித்தால்
வேண்டியதெல்லாந்தருவேன் விதவிதமாய்கொடுப்பேனெனச்
சொன்னவுடனே சொல்லுவாள்குறமாது
குறமாதுதானுங் குறிசொல்லஇந்திராணி
ஆசனங்கள்போட்டு அடிபணிந்துகேட்கலுற்றாள்
குறமாதுதானுங் குஞ்சிப்புகொண்டருளி
விநாயகபூசைசெய்ய வேணுமென்றுதான்சொல்லி
விநாயகரையங்கே விரும்பிசிருஷ்டித்தால்
வேண்டியதெல்லாம் வேணபடிதான்குவித்து
விநாயகனைத்தானினைந்தாள் வெள்ளையலைக்குறத்தி
கணபதியுமங்குவரக் கணமாய்படைத்தவனை
உருட்டிதிரட்டியொரு வுண்டையாய்பிடித்து
கவளங்கொடுக்க கணபதியும்வாங்கிவிட்டார்
சிக்கியடித்துச் சிறித்தாள்குறமாது
கேளாயோவென்குறியும் கேவலமென்றெண்ணாதே
முன்வரவுபின்வரவு மொழிந்துகுறிசொல்லுகிறேன்
எந்தன்குறிதானும் எவ்வளவுந்தப்பாது
செங்கைவடிவேலனென் திருமைந்தன்கண்டாயே
மூத்தமகனுமந்த மூர்த்திவிநாயகன்காண்
கந்தமருமகள்வள்ளி நானுமவள்மாமி
ஆரூர்சடையீசர் அவருடையபத்தினியாள்
பரமேஸ்வருடைய பார்வதியும்தான்தான்டி
உன்னுடையசிந்தையிலே நினைத்தபடிசொல்லுகிறேன்
வானுலகமானமகன் வருவானேயுன்றனக்கு
அன்புடனேகேளாய் ஆனகுறிதானும்
இம்மையிலுமறுமையிலு மென்குறிகள்தப்பாது
ரத்னமுடிசூடி னல்லமைந்தனுவ்வருவேன்
பெற்றிடுவீரிப்போது பெருமான்திருவாளால்
கண்ணிறைந்தபாலகனுர் கணக்கெழுதந்தோன்றுகுது
நீலகண்டர்தம்மருளால் நினைத்தபடிகிடைக்கும்
வளர்த்தபசுவயற்றில் மைந்தர்வந்துதோன்றுகிறார்
கோவின்வயற்றிற் குமரன்வந்துதோன்றுகிறார்
சித்திரைச்சித்திரையிற் சிறந்தபௌரணையில்
அத்தன்தலைக்கிழமை யாதித்தவாரத்தில்
புத்தகமுப்பூநூலும் பொருந்தியபொற்குண்டலமும்

ஆயிரங்கிங்கிலியர் அசைக்கவொண்ணுபுத்தகமும்
எழுத்தாணிகைபிடித்து பிறப்பாண்டியென் மகனே
உத்தளமாய்வெண்ணீறும் ஒளிந்ததிருவழகாய்
சித்திரபுத்திரர்வந்து செனிக்கிறார்மாமயிலே
பூலோகமாளப் பிறக்கிறார்பொற்கொடியே
எறும்புகடையானை தலை யெல்லாமெழுதவல்லர்
புத்தகமுந்தன்னிற் புகழ்ந்தெழுதும்புண்ணியனார்
அருளுஞ்சிவனுக்கும் ஆனமகாவிஷ்ணுவுக்கும
வருகரும்பிரமாவுக்கும் வாழ்விக்கும்லட்சுமிக்கும்
கணக்கராய்தானிருந்து காரியமெல்லாம்பார்ப்பார்
துப்புகள்சொல்லநல்ல தூதாகவுமிருப்பார்
இப்படியாக இருப்பார்காணேந்திழையே
அரனார்கருவேலம் அவர்கையிலிருக்குதுகாண்
இந்திராணிமாதே யிக்குறிபொய்யாதென
இன்பத்தோடுகுளிர்ந்து இருதோளும்பூரித்து
கும்பல்கும்பலாகப்பொன் குவித்தாளேயேந்திழையாள்
அந்நேரம் தான்குறத்தி யவள்முகம்பார்த்துரைப்பாள்
உன்னுடைய அன்பு இருந்தாலும்போதமினி
பொன்னும்பணமும் புலைய படைக்கிலையோ
கிறைநாழிமுந்தை நேரேகொடுமென்றார்
மங்கையரேபோய்வாரேன் மகாதுயரமுந்தீர்ந்து
மனுடனேநீயு மகிழ்ந்துமேவாழ்ந்திருப்பாய்

விருத்தம்.

உமையவள்குறிகள்சொல்லி யுரைப்படிமுடியுமென்று
சமயநெல்லிந்திராணிக்குத் தானுமேமனதைத்தேற்றி
அமயவேவரத்தையீந்து அடைவுடன்றன்பாற்சென்று
உமையவள்நடந்ததெல்லா முறைத்தவனிடத்திற்றானே

நடை.

அப்பால்நடக்கு மதிசயத்தைகேளுமென்றார்
நாகமடைந்தயரும் நல்லகுறியெனறுசொல்லி
பசுவின்வயற்றிற் பாலன்பிறப்பதுதான்
நிச்சயமாயெண்ணி வினைவுகளைவிட்டுவிட்டு
கொலுச்செய்யுமண்டபத்திற் கோதையும்வீற்றிருந்து
வானம்புவலோக மண்பூமியுள்ளதெல்லாம்
சிறப்பிக்கவேணுமென்று சீரானவள்ளுவனை
யழையுமென்றபோதே யழைத்தங்கேவிட்டார்கள்
பசுவயற்றிலிப்போ பாலன்பிறக்குதென்று
ஏழுலோகத்திலுள்ள வெல்லோருந்தாமறிய
பறைசாற்றுமென்று பைங்கொடியாள்சொன்னவுடன்
வள்ளுவனுமப்போது வாகாய்ப்பறையறைந்தான்
தெருவீதிகளெல்லாஞ் சிறக்கவேபந்தலிட்டார்

முத்துகளைந்து முகப்பந்தலிட்டார்கள்
வயிரக்கால்நாட்டி வகைவகையாய்த்தானிருத்தி
பவளத்தால்காலும் பண்பாகத்தானிருத்தி
விதவிதமாய்ப்பந்தல் வேடிக்கையாய்செய்து
இந்திரன்நற்சபைக்கு எதிரானதென்புறத்தில்
அன்பதுரெதப்பரப்பில் அகலமுள்ளபந்தலொன்று
தங்கத்தால்கால்கள் சதுராகத்தானிருத்தி
வெள்ளியினாற்கால்கள் விதவிதமாய்த்தானிருத்தி
நவரத்தினத்தாலே நன்றாகத்தானிருத்தி
சித்திரவிஸ்தாரமாய்ச் செய்யவேணுமென்றால்
பத்திபத்தியாகப் பண்பாகச்செய்தனர்காண்
தேவாதிதேவரெல்லாஞ் சிறக்கவேவந்திருக்க
தபோதனர்களெல்லோருந் தானுமேவந்திருக்க
முனிவர்களெல்லோரு முக்கியமாய்த்தானிருந்து
அந்தணர்களெல்லோரும் அப்படியேதானிருக்க
சங்கீதமேழுமுதற் தப்பாமல்வந்திருக்க
டட்டணத்திலுள்ள பருசனங்கள்தானிருக்க
வகைவகையாய்பந்தி வகுக்கவேவேணுமென்றான்
பத்திபத்தியாகப் பண்பாகச்செய்யுமென்றாள்
அந்தப்படியே படைவாகச்செய்யுமென்றாள்
பிள்ளைபிறக்கப் பெமுகூர்த்தம்வந்ததென்று
ஏழுலோகமறிய இடிபோல்முரசடித்து
வாருமென்றபோதே வள்ளுவனும்பறைசாற்ற
தேவர்முனிவர் சிறக்கவேவந்தார்கள்
தபோதனர்கள்மூதறியோர் தப்பாமல்வந்தார்கள்
ரிஷிகள்முதலாக எல்லோரும்வந்தார்கள்
அந்தணர்களெல்லா மப்படியேவந்தார்கள்
பட்டணத்திலுள்ள பரிசனங்கள்வந்தார்கள்
கூன்குருடுவிசெவிடுமே கும்பலாய்வந்தார்கள்
அவரவருக்கெல்லா மயிராணியப்போது
தானங்கள்வாங்கத் தான்வந்திருந்தார்கள்
வந்தபேர்க்கெல்லாம் வடிதானங்கொடுத்து
திருமஞ்சனங்கள் சிறப்பாககொண்டுவந்தார்
மாணிக்கச்சங்கு வலப்புரத்தேயின்றாத
வேதப்பிராமணர்கள் வேதங்கள்தானோத
மங்கையர்கள்வந்து வாழ்த்திகுலவையிட
கன்னியர்களெல்லாங் காவலாய்சூழ்ந்துநிற்க
அங்கபர்கண்ணம்மை யருகிருந்துகைகொடுக்க
பார்வதியம்மை பண்பாகவந்தார்காண்
பொன்னின்கலயேந்தி புறப்பட்டாள்பூமாது
மன்னர்பெருமான் வருகிறஅதிசயங்கள்

நயினார்பிறப்பு.

ஆயிரங்கிங்கிலியர் அசைக்கவொண்ணுபுத்தகமும்
பொன்னினெழுத்தாணியுமே பொற்பாளைக்கைபிடித்து
காதிலிருகுண்டலமும் கனக்கவேதான்பூட்டி
அரனார் திருவருளால் ஆவின்வயிறுவிட்டு
பொன்னின்கலைத்திற் பிறந்தார் புகழ்வீரர்
மின்னலொளிபோலே வெளிப்பட்டாருத்தமனார்
பூமிவழிசிறக்கப் போர்வேந்தர்வந்துதித்தார்
பாவபுண்ணியங்கள் பசிர்ந்தெழுதவந்துதித்தார்
ஏடும்படித்து இடதுகையில்வெண்ணீறும்
காதிலேயிட்ட கவசமணிக்குண்டலனார்
காரிந்திரன்மைந்தர் கணக்கரிவரென்பாரும்
எந்தஉலகி லிருந்தவர்காணென்பாரும்
பிர்மாவோவென்று பெருத்தமொழியுரைத்தார்
இப்படியுஞ்சிலபேர் ஏற்றமொழியுரைத்தார்
திருவழகைச்சொல்ல தேவரால்கூடாது
எல்லாக்கணக்கு மெழுதவென்றுதான்பிறந்தார்
நமசிவாயாவென்கிற நன்னமச்சித்தமுட
நமனுக்கதிகாரி நானென்றசத்தமுமாம்
சித்திரபுத்திரருஞ் சிறப்பாகவந்துதித்தார்
தெய்வலோகப்பெண்கள் சிறக்கக்குறவையிட்டார்
பெண்களெல்லாங்கூடிப் பெருங்குறவையிட்டார்கள்
கன்னியர்களெல்லாங் கனக்குரவையிட்டார்சள்
பதினெட்டுவாத்தியம் பாரெங்குந்தான்முழங்க
பூமாரியெங்கும் பொழிந்தார்கள்தேவரெல்லாம்
தேவா அமுர்தங் திருச்சங்கில்தானேந்தி
சேனையுமங்கே சிவனுமையாள்தான்கொடுத்தாள்
இந்திராணிதானும் இளங்கோதையந்நேரம்
திருவாய்விளக்கித் தீர்த்தமுந்தானூடி
பட்டையுடுத்துப் பகவானைத்தெண்டனிட்டு
பிள்ளையைவாரி முகத்தோடுமுத்தமிட்டாள்
அப்போதுபச்சுடம்பா யாச்சுதவள்மேனியெல்லாம்
பாலுமுலையிரண்டில் சுரந்ததுகாண்பைங்கொடிக்கு
தான்பெற்றதுபோலே தானறையிற்போறார்காண்
அப்போவொருதாதி யறிவாயெழுந்திருந்து
காயங்கடைசரக்குக் கனமாகஉள்ளதெல்லாம்
கூட்டியேதானுங் கொடுத்தாரேகோதையற்கு
அப்போதரிவையரும் அங்கேதானோடிவந்து
மைந்தனைகையாலெடுத்து மடிமீதில்வைத்திருந்து
கால்காதுருவி காதிற்செவிமூக்கெடுத்து
சோணையெடுத்துச் சுரிகுழலாள்கைமாற்றி

தொப்புளருத்து குலைவமிசமுழுக்கி
ஈரந்துவட்டி யிணையாடைதான்போட்டு
பட்டாடைக்குள்ளே பாலகனைத்தானமர்த்தி
வேண்டுமுபசாரம் விதவிதமாய்ச்செய்தபின்பு
தேவேந்திரன்வரவை காணுமெனத்திகைத்து
யிந்திராணிதான்புலம்பி எங்கலுற்றாளங்நேரம்
பாலகனைப்பார்ப்பதற்கு பத்தாவைக்காணவென்று
இந்தப்படியா யிருக்குமந்தவேளையிலே
அப்போசிவனாரு மங்குள்ளதேவர்களும்
தேவேந்திரன் தவசை சேர்ந்தரியவேணுமென்று
அம்மையுமையவளு மானமுனிவோரும்
தவஞ்செய்யுங்கானகத்தில் தயவாகிவந்துசொல்வார்
தவம்புரியுமிந்திரனே நீசெய்ததவமதினால்
புத்திரனுந்தந்தோமே பூலோகந்தானறிய
அரியதவங்கண்டு ஆண்பிள்ளைதந்தனம்யாம்
என்றுசொல்லியீஸ்வரனார் இடபத்திற்றானேறி
தேவியார்தன்னுடனே திருக்கயிலைசேரலுற்றார்
இனிமேல்நடக்கின்ற இக்கதையைக்கேளுங்கள்
தவஞ்செய்தஇந்திரனுஞ் சந்தோஷபாகிவந்து
தம்மாளிகைபுகுந்துஞ் சமையமதைப்பார்தது
இந்திராணிதானறிந்து ஏற்றதொருதாதியரை
சோபனஞ்சொல்லுமென்று துடுக்காயனுப்பலுற்றார்
அப்படியேதாதியரு மன்பாகவேயெழுந்து
சென்றாரேதாதியருந் தேவேந்திரனிடத்தில்
தெண்டனிட்டுதாதியரும்செப்புவாள்சோபனங்கள்
இந்திரனேசோபனங்கா ணிறையவனேசோபனங்காண்
நாடுக்குஞ்சோபனங்காண் நல்லோர்க்குஞ்சோபனங்காண்
பொன்னுலகமாளவந்த புத்திரரேசோபனங்காண்
இங்கிருந்தஇந்திரற்கு மெல்லோர்க்குஞ்சோபனங்காண்
என்றுசொல்லுந்தாதியரை யிந்திரனார்பார்த்துரைப்பார்
என்னரசாள இனிபிள்ளையில்லையென்று
தவத்துக்குத்தானுமே தப்பாமற்போனபின்பு
இவ்விடத்திற்பிள்ளை யெவ்விதமாய்வந்ததென்ன
அப்போதுதாதி அடைவாகச்சொல்லலுற்றாள்
பத்தினியாரைப் பலமழியப்பேசுவாரே
மனையாள்வளர்த்த பசுமலடும்மிகநீங்கி
தாமரைபூவிழுங்கித் தானுங்கருவாகி
பசுவின்வயற்றில்நல்ல பாலன்வந்தானென்றுசொல்ல
இந்திரனார்கேட்டு இனிமையுடதாதியற்கு
கோடிதிரவியங்கள் கோணாமல்தான்கொடுத்தார்
ஆடைகொடுத்தார் ஆபரணந்தான்கொடுத்தார்
இட்டிருந்தஆபரண மெல்லாமுடன்கொடுத்தார்

பொய்கைக்கரையில்வந்து போதவேரோடி
அம்பொன்சிங்காதனத்தில் அமரர்கோன்வந்திருந்து
செம்பொன்மணிமாளிகையைச் சேரவேதான்வந்து
ஆனபரதேசியற்கும் அந்தணர்க்குத்தானமிட்டார்
பாற்பசுக்கள்கோடிநல்ல பார்ப்பாருக்குத்தானமிட்டார்
வகைவகையாய்த்தானம் வரிசையாய்த்தான்கொடுத்தார்
அப்போதுதாதியர்கள் ஆனதொருபாலகனை
பட்டாடைக்குள்ளே பாலகனைத்தானமர்த்தி
இட்டமுடன்தாதியர்கள் இருபுறமுஞ்சூழ்ந்துவர
முன்னெடுத்ததாதியர்கள் மூவாயிரம்பேர்கள்
பின்னெடுத்ததாதியர்கள் போராமலப்படியே
போற்றிக்குரவையிட்டுப் புத்திரனைக்கொண்டுவர
வந்தவுடனே மகனுரைத்தான்வாங்கி
தாங்கியெடுத்துத் தழுவிமுத்தந்தானுமிட்டு
கண்டான்மகன்முகத்தைக் கண்ணுபிரத்தாலே
உண்டானசந்தோஷ முரைக்கமுடியாது
அந்நேரமிந்திரனும் அழகானதாதியரே
சுந்தரியாளிடத்தில் கொண்டுபோமென்றுசொன்னர்
ஆவலுடன்வந்த அரியமகனர்க்கு
தெய்வபிராமணரைத் திரும்பியழைத்தார்கள்
பிறந்தவகைவிபரம் பிசகாமற்கேட்டவுடன்
நவக்கிரகமெல்லா நயமானநாளொன்றில்
பேரிடவேணுமென்று பெரியதொருஇந்திரனும்
சித்திரையில்வந்ததினல் சித்திரபுத்திரரென்றூர்
அப்படியேபேரை அழைத்தார்களந்நேரம்
சீரிட்டபாற்பசுக்கள் சிறப்பாய்கொடுத்தனர்காண்
தானதருமங்கள் தான்கொடுத்தாரந்நேரம்
மகனையன்றுபெற்றெடுத்து வாய்த்ததொருபசுவும்
மகனுக்குப்பாலமுர்தம் வாஞ்சையாய்த்தான்கொடுத்து
நிற்குமளவில் நினைவுமறந்தொருநாள்
பாலகன்நெஞ்சிற் பதிக்குளம்புபட்டவுடன்
இந்திராணிகண்டு ஏங்கிமிகப்பயந்து
மகனையெடுத்து மார்போடேதானணைத்து
கண்டேனேயென்று கன்றுசினம்பெருகி
இந்திராணிதானும் இளம்பசுவையந்நேரம்
திடமுடையபால்பசுவும் தெய்வமேசாட்சியென்று
சரணஞ்சரணமையா தற்காத்துக்கொள்ளவென்று
சிவனைநினைத்து தோத்திரங்கள்செய்ததுவே
அப்போசிவனும் அங்குமுள்ளதேவர்களும்
பசுவையடித்த பாதகத்தைதான்தெரிந்து
இந்திரவிமானத்தை யெடுத்துக்கொண்டோடிபோய்

இந்தக்ஷணம்பசுவை இங்கேயடையுமென்றார்
தேவர்கொண்டுவந்தார்கள் தேன்மொழியாள்வாசலிலே
வந்தவுடனப்பசுவு மகாதேவரைப்போற்றி
தேரின்மேலேறி சிவனாரிடஞ்சேர்ந்து
மகாதேவர்சீர்பாத மலரடியைப்போற்றிசெய்து
இந்திரற்குபிள்ளை கொடுத்துவாவென் றுரைத்தீர்
பாலனையீன்று கொடுத்தேன்பரிவுடனே
கொடுத்தவுடனென்னைக் கோசையாள்தானடித்தாள்
வந்துவிடேனென்று வருந்தியுரைத்ததுவே
சிந்தைமகிழ்ந்து சிவனாருக்கேதுசொல்வார்
உன்மகனையிங்கே உனக்கழைத்துநான்தருவேன்
வஞ்சகமில்லாமல் மனமகிழ்ந்துநில்லென்றார்
அப்படியேநற்பசுவும் ஆனந்தங்கொண்டதுவே
இப்பால்நடக்கின்ற இவ்வசனஞ்சொல்லுகிறேன்
தேசாருமிந்திரனுந் தேவியுந்தானேதுசொல்வார்
பாலன்பசித்து பதறியழுதவுடன்
பாலமுர்தம்வாங்கி பகவானைதேடுமென்றார்
பசுவைமிகத்தேடிப் பார்த்தார்களெல்லோரும்
காடெல்லாந்தேடிக் காணோமெனவுரைத்தார்
இந்திராணியான இளங்கோதைதானழுதாள்
இந்திரனுமப்போது ஏங்கிமிகவாடி
மாயையால்வந்து மாயையாய்ப்போச்சுதென்று
மற்றுமொருபாற்பசுவின் பாலமுதைமைந்தனுக்கு
குற்றம்வாராதபடி கொடுத்துவளர்த்தனரே
பாலகனைக்கார்க்குந்தொட்டில் பாங்காகச்செய்தார்காண்
சித்திரபுத்திரை சீர்சிறைந்ததொட்டிலிலே
வைத்துத்தாலாட்ட மன்னவருஞ்சொன்னவுடன்
ஆவின்பாலூட்டி யறியதொட்டில்மேற்கிடத்தி
தொட்டிலைத்தானசைத்து சூழநின்றதாதியர்கள்
பள்ளிகொள்ளுந்தொட்டிலில் பார்மகனேநித்திரைபோ
தேவேந்திரனமணியே செம்பொன்னேதானுரங்காய்
இந்திரனார்செல்வங்கள் ஈடேறவந்தவனே
வானுலகமாள வந்துபிறந்தவனே
மைந்தனாய்வந்து மகவாலசதிர்த்தவனே
எங்கள்துயர்த்தீர இன்றுவந்தபாலகனே
தேசக்கணக்கும் சிறந்தபெருங்கணக்கும்
மண்ணிற்கணக்குஞ் மகாதேவன்றன்கணக்கும்
விண்ணிற்கணக்கு விரைந்தெழுதவந்தவனே
சந்திரசூரியர்போல் சாய்ந்ததிருமகனே
ஆதிபரன்கட்டளையின் அவதரித்தபாலகனே
துட்டர்கணக்குந் துரோகியர்கள்தன்கணக்கும்

கண்டிரோமீருங் கண்ணயாழிமோதிரத்தை
இவ்வளவுவாழ்வுமுங்க ளிருவருடவாழ்வும்
புதிதானகாரியத்தைப் போய்பார்க்கவேணுமையா
போய்வருவேனையா பொருந்தவிடைதாருமென்ன
வாலவயசு வருமளவுமீயிருந்தால்
பாலனய்வந்த பலன்கிடைக்குமென்றுசொல்லி
அப்படியேனாலும் அவ்விடத்திலிருந்துவிட்டேன்
எப்படியுமென்தாயே யிங்குமங்குமாயிருப்பேன்
போகவிடையருளும் புண்ணியரேயென்றுரைத்து
மாதாவைத்தந்தையை வணங்கியிருபாதமதில்
புட்பமதுபோட்டுப் பணிந்தாரேபுண்ணியனர்
அருமைத்திருமகனே யன்னைபிதாதான்வாழ்த்தி
இந்திரனவன்றேறி லேறியேயுத்தமனர்

விருத்தம்.

சென்றனன்னீசன்றன்பாற் சீர்பாதந்தெண்டனிட்டு
நின்றனன் மகிழ்ச்சிகூர்ந்து நிகரில்லாஉமையாள்தானும்
வந்தனன்மகனேயென்று வாரியேமுகந்துகொண்டாள்
மைந்தனுமங்குவந்த வறன்முறைவிளம்பலுற்றன்.

வசனம்.

அகோதெப்படியென்றால் சித்திராபுத்திரநயினாரானவர் இந்திரன் இந்திராணியிவர்களை வணக்கத்துடனேயனுப்பிக்கொண்டு தேரின்மேலேறிச்சுவாமிகயிலயங்கிரிவர்சரான பரமேசுரனையும் பார்வதியம்மாளையுங்கண்டுநமஸ்காரஞ்செய்து சிந்தைகளிகூர்ந்துநிற்க பார்வதியம்மாளுமமகனைக் கட்டிவாரி முகந்துகொண்டவுடனேசித்திராபுத்திரநயினார்சுவாமி யிடத்திலும் அம்மாளிடத்தும் அவ்விடத்திலேநடந்த விருத்தாந்தமெல்லாஞ்சொல்லுகிறர்-எ-று.

நடை.

அப்பால்நடக்கு மதிசயங்களுள்ளதெல்லாம்
செப்பமுடனுனுஞ் சொல்லுகிறேன்சீராக
மாதாபிதாவை மறந்திருந்தேநித்தனைநாள்
ஈஸ்வரன்சொன்னவிடை யெள்ளளவுந்தப்பாமல்
தாமரைப்பூவாய்த் தடாகத்திற்சென்றிருந்து
ஆவின்வயிற்றில் அவதரித்தேனுதரவாய்
இந்திரனிந்திராணி யிவர்கள்மனங்குளிர
புத்திரனுகவென்னை போற்றியேதான்வளர்த்தார்
பிறந்தவுடன்றருமம் பெருக்கவேசெய்திடுவாள்
என்னையுமங்கே யீன்றதொருநற்பசுவை
என்னைமிதித்ததென்று இந்திராணிதானடித்தாள்
உடனேதானப்பசுவும் உன்கயிலைவந்ததுவே
மற்றுமொருபசுப்பால் கொடுத்தென்னைவளர்த்தார்கள்
நன்றாய்வளர்த்தார்கள் நாயகியும்நாயகனும்

இவடத்துச்சிந்தையினுல் ஏக்கமிகவுண்டாகி
போகிறேனென்றுசொன்னேன் போர்வேந்தனப்போது
பாலவயசு பருவமுனக்கில்லையென்றார்
இவ்விடத்திற்றானு மிறக்கவேவேணுமென்றார்
அரசன்கயிலைசென்று அவ்விடத்தில்நானிருப்பேன்
இங்குமங்குமாக இருப்பேனெனவுரைத்து
அவர்கள்விடைவாங்கி யடிபணிந்திங்குவந்தேன்
என்றுசித்திரபுத்திரனர் இரக்கமாய்ச்சொன்னவுடன்
சிவனருமங்கே சிந்தைமிகவுண்டாகி
பசுவைமிகவழைத்துப் பாலன்வந்தான்கண்டாயே
என்றானர்சொல்ல ஏற்றதொருநற்பசுவும்
சென்றுமகனர் திருமுகத்தைத்தான்பார்த்து
எழுந்துமிருகொம்பால இரங்கித்தடவினதே
இப்படியேதானும் இருக்கின்றவேளையிலே
இந்திரனிந்திராணி இவர்களிருபேரும்
மகனர்தான்போன வழித்தடத்தைதானேக்கி
வந்தார்கயிலை மலைதனிலேவானவர்கோன்
அப்பால்நடக்கு மதிசயத்தைகேளுமினி
சிவனரிடத்தில் தேவேந்திரன்புலம்பி
புத்திரனுஞ்சத்துருவால் போனனெனவுரைத்தார்
உரைத்தமொழிகேட்டு உமைபாகரேதுரைத்தார்
சத்துருவென்றுசொல்லி சலியாமல்சொன்னயே
தாயாருகே தன்பிள்ளைவந்துதென்றால்
பேயாஉனக்கினித்தான் பேசக்கணக்குமுண்டோ
பித்தரைப்போலே பிதற்றுகிறாய்நீதானும்
நாட்டுக்கணக்கும் நமனர்பெருங்கணக்கும்
நன்மையுந்தின்மையும் நடுவெழுதவேணுமென்று
எமதருமர்தன்னிடத்தி லிருந்துகணக்கெழுத
வேணுமென்றுசொல்லி விரும்பியேநாமழைத்தோம்
எங்கிருந்தாலென்ன ஏற்றதொருயிந்திரரே
போம்பிள்ளாயென்றுரைக்கப் போனரேயிந்திரரும்
ஈஸ்வரனர்தாமும் ஏற்றதொருபுத்திரரை
இப்போதுநீயும் இயமனுடவாசலுக்குச்
சித்தாந்தம்வேதாந்தஞ் செய்யுமுரைப்படியே
அத்தாந்திரக்கணக்கும் அடைவாயெழுதுமென்றார்
அப்படியேதானும் இயமனையுந்தானழைத்து
கலியன்உபத்திரத்தால் களறிகள்தான்மிகுத்து
அவையக்குரலுண்டாகு மானதாலிப்போது
எல்லாக்கணக்கு மியல்பாகத்தானெழுத
சித்திரபுத்திரரை சிறப்பாயருளினன்காண்

சிட்டர்கணக்குந் தெரிந்தெழுதவந்தானே
தேவேந்திரன் தவத்தால் சிரியவுயிர்செய்யும்
நன்மைகளுந்தீமைகளும் நன்றறியவந்தானே
சிராய்ச்சிவலோகஞ் சேருகின்றபுண்ணியரை
ஆராய்ந்துசொல்ல அறிவுடனேவந்தானே
ஆவின்வயிற்றில் அவதரித்தபாலகனே
எங்களரும்பொருளே யிந்திரனர்கண்மணியே
எங்கள்குலம்வாழ எழுந்தருளுநாயகமே
இந்தப்படியாக யேற்றிநின்றுதாலாட்டி
அந்தமகனை யரிதாய்வளர்க்குங்கால்
தாதிமார்தன்பாலைத் தானுண்கச்சொன்னர்கள்
உங்கள்முலைப்பாலை யுண்கவோநான்பிறந்தேன்
என்றறிந்துசொன்ன விளமைகுழந்தைக்கு
மந்திரதூபவேத மகாவறிவையுண்டாக்க
வாத்தியார்தம்மைவரவழைத்தாரந்நேரம்

விருத்தம்.

இந்திரன்புதல்வருக்கு இன்பமாயோதிவைக்க
தந்திரவாத்திமாரும் தான்அரிஓமென்றார்
மந்திரப்புதல்வனரும் வகைசொல்லுமென்றுகேட்க
மந்திரவுரைசொல்லாமல் மைந்தனும்உரைசெய்தானே.

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்திரன் இந்திராணி இவர்கள்நாளொரு மேனியும் பொழுதொரு வர்ணமுமாக வளர்த்த சித்திரபுத்திரனைவ ர்கு வேதங்கள் அப்பியாசம் பண்ணுவிக்க வேணுமென்று வாத்தியா ரை யழைப்பித்து பட்டணமெல்லாம் அலங்காரஞ் செய்துமகாதானம் கோதானம் வஸ்திரதான முதலானதானங்கள்செய்து ஓமம் எக்கியங் களெல்லாஞ்செய்து சித்திரா புத்திரருக்குவாத்தியார் அரி ஓமென்று சொல்ல அதற்குப்பயன் சொல்லுமென்று வாத்தியாரிடத்திற் கேட்க அவர்சொல்ல யேதுவில்லாமல் சித்திராபுத்திரர்தானே பயன்சொல்லி ப்பின்னடக்கிற காரியங்களைச்சொல்லுகிறோம்-எ-று.

நடை,

விநாயகர்பூசை விதவிதமாய்த்தான்முடித்து
ஆதிமுதலான அரிவையுங்கைகொடுத்து
அரியோமரியோமென் றுதரவாய்ச்சொன்னர்கள்
ஆயிரம்பார்ப்பார் அரியோநமோவெனவே
அரியென்றசொல்லுக்கு அருத்தங்களுரையுமென
அப்போதுவாத்தியார் அதன்பொருள்சொல்லாதிருக்க
நான்சொன்னபடிகேளுநல்லதொருவுத்தமரே
அரிக்குப்பொருள்சொன்னல் அண்ணாவிநீரெனக்கு
குருக்களுமாவீர் குற்றமில்லைகண்டீரே
எனக்குமோர்அண்ணாவி யீசனல்லால்வேறுமுண்டோ
மேலானஉங்களுக்கு வேதமதுசொல்லுவன்யான்

கிட்டியான்வாசிக்க சேனுங்களென் றுசொல்லி
நன்னெறிநூலவிழ்ந்து நற்பீடமீதேறி
சைவநூல்வேதந் தழைக்கவேவாசித்தார்
ஓரேட்டுக்குள்ளே யுலகமெல்லாம்வாழவென்று
தேவர்கள்வாழவென் றுதிருவோடும்வாசித்தார்
மூவர்கள்வாழவென்று முதலேடுவாசித்தார்
அயனரன்மால்செய்கை யானதொருசீவனமும்
நயனுநுமெந்தன் நடுக்கணக்கிலுள்ளவர்காண்
சங்கரநாராயணர் தான்கொடுத்தபட்டோலை
அட்டவணைப்பட்டோலை யனுப்படிவாசிக்க
வாத்தியார்தன்கணக்கு வந்துவெளிப்பட்டதுகாண்
தனதுமனையன் றித் தலைநாவில்நீருமொரு
அதிதிமனையை யடிமைபத்திக்கண்டீரே
உம்முடையசெய்கையும் உமக்கறியப்போகாமல்
உன்னுடையயேட்டி லெழுதிவைத்தேனென் றுசொன்னார்
அந்தஉரைகேட்டு அண்ணாவிதானபயர்ந்து
எந்தன்பிராணரே எனக்குநீர்அண்ணாவி
என்றுசொல்லிவாத்திமா ரிருகையாற்போற்றிசெய்து
ஈஸ்வரனார்கற்பனையோ வென்றுசொல்லித்தானிருக்க
இவ்வார்த்தைகேட்டு இந்திரனிந்திராணியுடன்
மைந்தனையங்கே மனமகிழ்ந்தமுத்தமிட்டார்
இப்படியேதானும் இருக்குஞ்சிலநாளில்
மைந்தர்பெருமாள் மனமகிழ்ந்தேதுசொல்வார்
பூலோகசோதனைக்குப் போய்வாரேமென்றுரைத்தார்
நகரங்கள்சோதனைக்கு நாம்போறேமிந்திரரே
அங்கேசிவன்வாச லருகிருக்கசம்பாபேரும்
என்றுகணக்கை யிதமுடனேதான்சுருட்டி
நன்றியுடனே புறப்பட்டார்கற்கணக்கர்
இட்டபடியே யீஸ்பரனார்தான்கொடுத்தார்
கட்டளையிட்டபடி கணக்கெழுதப்போறேமென்றார்
அத்தன்கயிலை யரனார்கருவேலம்
சித்தமெழுதிவர சிமலரருள்கொடுத்தார்
பத்திரமாயென்வசத்தில் பிறந்தொருபட்டோலை
சீருடனேயென்வசத்திற் சிறப்பாகவிருக்குதுகாண்
பரம்பொருளார்தான்கொடுத்த பண்டாரபொக்கிஷமும்
கொடுத்தவரிசைகளைக் கொற்றவரேகண்டீரோ
பொன்னுமே ட்டுமல்லோ புண்ணியரேநீரண்டீர்
நிரைந்தபுகழ்மாதாவு நீருமிகத்தவசிருக்க
உங்களுக்குப்பிள்ளையா யுகந்தளித்தார்கண்டீரோ
அண்டரண்டகோளமட்டும் அணுவளவுதப்பாமல்
எழுத்தாணிபட்டோலை யென்கையிற்றான்கொடுத்தார்
முத்திரைமோதிரமும் முன்விரலிலேயணிந்தார்

என்றுநமக்குச் சிவனுரிசைத்தப்பின்பு
நன்றுநன்றுஎன்று நமஸ்கரித்து அந்நேரம்
இருபேருமொன்றாகி யேற்றவிடை தான்வாங்கி
நின்றபொழுதேபிரமர் நிமலர் அருளாலே
இருபேரும்வாழவென்று ஏற்றமுள்ளபிர்மாவும்
கட்டகயிறுடனே கனத்தகண்டஞ்சூலமுடன்
குத்திடுங்கோல்கொடுத்து மேலக்கடாவளித்து
இவ்வளவுந்தான்கொடுத்து ஏற்றமுள்ளபிர்மாவும்
வாராய்சிவனுக்கு வழியடிமைசெய்வார்போல்
சிவனைநினைத்துத் திருத்தொண்டுசெய்வார்போல்
தவத்தைநினைத்து தான்பூசைசெய்வார்போல்
தருமங்கள்செய்வார்மேல் சற்றுமேசொல்லாமல்
புத்திகளுஞ்சொல்லிப் போகவிடைகொடுக்க
கருங்கடாமேலேதான் கள்ளனைத்தானும்வைத்து
வலக்கடாவேறி வாரார்எமதருமர்
சித்திரபுத்திரருஞ் சிரகத்தேறி
நல்லமுரசுசின்னம் நன்றாய்முழங்கிவர
இருபேருமொன்றாகி யிந்திரலோகம்புகுந்தார்
இருபேருந்தாங்கள் யிசையவேதான்பேசி
பாரிலுள்ளோர்தன்கணக்கைப் பார்த்தார்களப்போது
சிவகுருவேவென்று திருநீரணியாதார்
நாராயணாவென்று நாமமணியாதார்
பெற்றதாய்தந்தையைப் பேணாதபாவியர்கள்
மண்ணிலிருந்து வழக்கோரஞ்செய்தவர்கள்
அம்பலத்தில்நின்று அநியாயஞ்சொன்னவர்கள்
ஊரார்உடமைக்கு பேராசைகொண்டவர்கள்
கல்லாக்கசடர் கணக்குப்படியாதோர்
சிவனைவணங்காதார் திருக்கோயில்சூழாதார்
அயனைவணங்காதார் ஆலயத்தைமேவாதார்
பிச்சைக்குவந்தவரைப் பின்னைவாவென்பார்கள்
கன்றுவருந்தக் கறந்தபாலுண்டவர்கள்
சுற்றங்களிக்கச் சுகமாகவாழ்ந்தவர்கள்
போட்டநாழிமறக்காமல் போட்டளந்தபாவியர்கள்
பிள்ளைபழித்ததும் பேசமுறச்சொன்னவர்கள்
உள்ளபொருளை இல்லையென்றேவிரைத்தவர்கள்
தூரவழிக்குத் துணைவாரோமென்றுசொல்லிக்
ஆறமில்லாக்காட்டில் அடித்துப்பறித்தவர்கள்
குளிசிலையணறிக் குதித்திடும் பொல்லாதார்
கொண்டமனையாள்வருந்தக் கூத்தியர்கள்தன்னைவைத்து
மாதாபிதாவருந்த வயிறுவளர்த்திடுவார்

நீட்டும்பிழக்கையில் நின்றுமெள்ளகேட்டவர்கள்
சாவார்போர்செய்யுஞ் சண்டாளப்பாதகர்கள்
கொண்டகணவனுக்கு குறிப்பறிந்துசெய்யாதார்
இப்படியாக்கொன்ற விருதொருசெய்வோரையெல்லாம்
செப்பமுடன்நல்ல செந்தழலிற்றான்போற்று
பாசத்தைவீசிப் பற்றவேதான்பிடித்து
நாசிதனில்நஞ்சைவிட்டு நாக்கில்துறட்டிவிட்டு
உச்சிக்கலைதனிலே யோங்கிழுளையறிந்து
அச்சப்படக்கண்ணின் ஆணிதனைநிறுத்தி
கையிரண்டுபின்கட்டாய் கட்டியிருகால்பின்னி
மார்பைதுளைத்து மறுகதிரிருபுறமும்
கூறியநாராசங் கொடுஞ்சியிலூடேற்றி
ஆண்குறிபெண்குரியில் அடைவாய்த்திறத்திவிட்டு
பாரைதனிற்போட்டுப் பதறியிழுத்திழுத்து
வேறுவேறுயுடலைவெட்டிவெட்டிபோட்டிழுத்து
காரமுள்ளஉப்புகை கரைச்சதிலேதானெழுதி
முள்ளுநிலங்களிலே முகக்கீழாய்போட்டிழுத்து
பள்ளமேடென்ன பாராமற்றானிழுத்து
இவர்கள்தங்களையெல்லாம் ஏழுநரகத்திலே
தள்ளவென்றுபட்டோலை தானெழுதிகொண்டார்கள்
நல்லோர்பெரியோரை நடுங்கவேசொன்னவரை
வீதிவீதியாக விபரமாய்தானெழுதி
அவ்வீதிவிட்டு மறுவீதிவிட்டார்கள்
பெத்ததாய்சொத்தைக் களவுசெய்யும்பேதையரை
அரைத்தஅம்மிசாத்தாத அரும்பாவியானவரை
குத்துமுரல்உலக்கை யொதுங்கவையாக்கொற்றவரை
வாசல்படிகடக்கும் வழிசுத்திசெய்வாரை
எந்தப்பதார்த்தமும் ஏற்றசுத்திசெய்யாரை
கண்டபோதென்றுசொல்லிக் காணுமலொன்றுசொல்லிக்
குண்டுணிகள்சொல்லுங் கொடும்பாவியானவரை
பகலுறக்கஞ்செய்யும் பாவிகள்தங்களையும்
நரகத்திலேயந்த நடுவோலைதானெழுதி
கள்ளிகளோடு கடுகிவந்துசிக்கினதே
குண்டுணிகள்சொல்லி குறளிகள்தான்பேசி
சண்டையிட்டுமுன்னே சாலங்கள்சொல்வாரை
கணவனைப்பேணுமல் கன்னியவள்வீடுவிட்டுத்
தீர்த்தமுடியாடித் திருநாளும்பார்த்தவரைப்
பத்தாவிருக்கப் பசியாற்றிக்கொண்டவளை
அவர்களைப்போலே அனுக்கணுக்குத்தப்பாமல்
இட்டுண்டுவாழாதார் ஏற்றவர்க்குமில்லையென்போர்
செய்யவென்றநல்கணக்குச் சேரவேதானெழுதி

செட்டிகள்வீதியிலே சிறப்பாகவந்தார்கள்
அவர்களெல்லாமங்கே யடிபணிந்தவாய்புதைத்து
வில்லாச்சரக்கை விலைசரக்காய்விற்றிடுவோம்
செல்லாப்பணத்தை செலுத்துவோங்கண்டீரே
எல்லாப்பிழையும் பொருத்தருளுமென்றுசொல்ல
வெள்ளாளர்வீதியிலே விரைந்துமிகவந்தார்கள்
வெள்ளாளரெல்லாம் வேண்டியதெல்லாம்படைத்தும்
நெல்லுகளைநாங்கள் உலர்த்தாமல்விற்றிடுவோம்
கள்ளமரக்கால்நாழி கலந்துமிகவிற்றிடுவோம்
என்றுசொல்லிஎங்கள்குற்ற மெல்லாம்பொருமெனவே
இவர்களுக்குத்தக்க ஏற்றபடிதானெழுதி
பட்டமார்வீதியிலே பணிந்துமிகத்தொழுது
குளிக்காமல்சேவிப்போம் கோவிலையும்பூசிப்போம்
பால்தயிரும்நெய்யும் பசிக்கெடுத்துசாப்பிடுவோம்
ஏறுதமானதனை யேற்றிடுவோமென்றுசொல்ல
இவர்களுக்குமங்கே ஏற்றபடிதானெழுதி
அந்தந்தஜாதிதெரு அடைவாகத்தானபார்த்து
அவரவர்கள்செய்யும்வகை யதிர்க்கவேதானெழுதி
பாவபுண்ணியங்கள் புகுந்துமேதானெழுதி
புண்ணியங்கள்செய்வோர்க்குப் புதுமைகள்சொல்லுமென்றார்
புண்ணியஞ்சொய்வோரைப் புதுமையாயெடுத்தெழுதி
பசியாமலன்னம் பாங்குடனேகொடுத்தவரை
இடுக்கத்துடனே ஏமாசிவந்தவற்கு
உடுத்தபுடவை யுகந்தளித்தோர்தங்களையும்
பிச்சையுமிட்டுப் பெரியவிடங்கொடுத்து
மகேசுராபூசைகட்கு மடம்கட்டிவைத்தவரை
சாலைமாமுஞ் சத்திரமும்வைத்தவரை
சிவபூசைதவபூசை குருபூசைசெய்வோரை
நான்குதிசைவிளங்க நந்தவனம்வைத்தவரை
ஆலயங்கட்டி அன்னமிகக்கொடுப்போரை
இடித்தபழங்கோயி லெடுத்துபுதுப்பித்தவரை
தாகத்துக்காக தண்ணீர்கொடுத்தவரை
பொரிந்தவயர்தனக்குப் போதநீர்விட்டவரை
இராக்காலப்பட்டினியை யிதமாகத்தீர்த்தவரை
அந்தணர்க்குஅக்கிராரம் அடுக்காகசெய்தவரை
பஞ்சம்வருங்காலம் பகுந்தன்னமிட்டவரை
பெரியோர்கள்தங்களையும் பேணிநடந்தவரை
விருந்துகள்வந்தால் வேறுவைத்துஉண்ணாமல்
பந்திவகையில்வஞ்சங்கள் செய்யாரை
நெய்விளக்குமாவிளக்கு நேமமாய்ச்செய்தவரை
பூதானங்கோதானம் வஸ்திரதானம்முதலாய்

தானங்களெல்லாம் தயவாகச்செய்தவரை
வழக்கோரஞ்சொல்லாமல் மன்னருடன்சேர்ந்தவரை
சிவனைவணங்கிச் சிவபூசைசெய்தவரை
செருப்புகுடைமுதலாய்ச் சிறந்தபிராமணர்க்கு
கோடைகாலத்தில் கொடுத்தன்னமிட்டவரை
அதிதிபரதேசியர்க் கன்னமிட்டுவருபவரை
சூரியனையெந்நாளுந் தோத்திரங்கள்செய்வோரை
பவுரணையில்நல்விரதம் பத்திரமாயிருந்தோரை
பத்தாவில்மேலாசை பண்பாகவைத்தவரை
குருவையுமாதரையுங் கொலைகளவுசெய்யாரை
கணவனிடசொல்லைக் கட்டாய்நடந்தவரை
ஆறுகுளங்கள்தன்னி லணைக்கட்டிவைத்தவரை
வழிப்பறியாமல் வாகாகக்காத்தோரை
கன்றுக்குப்பால்கொள்ளுமட்டுங் கருத்தாகவிட்டவரை
தருமங்கள்சொல்வோரைத் தப்பாமலெழுதிவைத்தேன்
ஒளிவுமறைந்தவற்கு ஊன்றுகோல்தான்கொடுப்பார்
காய்ந்தலைக்கெண்ணைக் கட்டாகத்தானளிப்போர்
ஆவைவணங்கி யனுதினமுந்தான்தொழுவோர்
விநாயகர்பூசை விருப்பமாய்ச்செய்தவர்கள்
பள்ளிக்கூடங்கட்குப் பாங்காகவாத்தியர்க்குச்
சம்பளமும்உம்பணமுந் தான்கொடுத்தோர்தங்களையும்
கந்தனையெந்நாளும் கருதித்தாழ்ந்திடுவோர்கள்
மாதாபிதாவை மகிழ்ந்துநித்தந்தொழுவோர்
வேதங்களாசமங்கள் விதிப்படியேதானடப்போர்
குருநன்றிசெய்நன்றி குறையாமற்றானடப்போர்
விஷங்கள்தனைமீள விருப்பமாய்ச்செய்தவரும்
வண்ணான்நாவிதன்கூலி மகிழ்ந்துமேதான்கொடுத்தோர்
தருமங்கள்செய்வோரைத் தப்பாமற்றானெழுதி
இப்படிக்கொத்த வியல்புடையபுண்ணியரைக்
செப்பமுடனறிந்து செய்தபிழைபொருத்து
தப்பாமலீசுரனார் தன்னடியுந்தான்சேர்த்து
வைகுண்டலோகத்தில் வகையுடனேதான்சேர்த்து
அந்தவுலகத்தி லமரர்களைப்போலிருக்க
புண்ணியஞ்செய்தவர்கள் போதவேதானிருக்கக்
கயிலைக்குவடபுரத்திற் கனசனமுண்டாக்கி
பூங்காவனத்திற் புட்பங்களுண்டாக்கி
காய்கனிகளுள்ளதெல்லாம் கனக்கவேயுண்டாக்கி
எப்போதுஞ்சிவனை இன்பமாய்ப்பூசைசெய்யப்
பணிவிடைகள்செய்யவே பாங்காகயுண்டுபண்ணி

அவ்விடத்திலேயிருக்க அன்பாகச்செய்வித்து
வைகுண்டலோகத்துக்கும் வாழ்ந்திருக்கத்தானெழுதி
பாவியர்க்குத்துன்பப் பாவனேயெழுதுகிறுர்
அட்டைக்குழியும் அழுகுபுழுக்குழியும்
கிருமிவகைக்குழிகள் கிணற்றைப்போல்செய்தார்கள்
மிருகங்கள்வாழ்குழியில் வேருகச்செய்தார்கள்
அகில்கிடங்குவெட்டி யதிலேயனல்வளர்த்தி
முள்ளுவனங்களேயு மோசமாய்ச்செய்தார்கள்
நூற்பாலம்மயிற்பாலம் நூதனமாய்ச்செய்தார்கள்
காடுங்காடு கல்லுமிகவுண்டாக்கி
சற்றுமிழலில்லாமல் சலிக்கவேசெய்தார்காண்
நரகக்குழியும் நடுநடுங்கிச்செய்துவைத்தார்
மெத்தவேவுண்டாக்கி விபரிசையா ஆயுதமும்
ஆயிரங்கிங்கிலியர் அசைக்கவொண்ணுச்செக்குகளும்
இருப்புத்தூணுங்காய்ச்சிச் சேரவேதானிருத்தி
செவிகளுக்குநாராசம் சேரவேவுண்டாக்கி
உச்சிமுதலாயு யுள்ளங்கால்தன்வரைக்கும்
வகைவகையாயாணி வரிசையாய்த்தானடித்து
தொறண்டிவகைகள் தோற்றமிகவுண்டாக்கி
இந்தவகைப்படியே எள்ளளவுந்தப்பாமல்
பாவபுண்ணியங்களுக்குப் பகுத்துவகைசெய்தபின்பு
செப்பமுடனேநானுஞ் சொல்லுகிறேன்கேளுமென்றுர்
மாதாவிதன்னருகே வந்தார்பெருங்கணக்கர்
எமதர்மராஜனு மிவல்பாகஅமர்ந்திருந்தார்
தந்தையரைவணங்கித் தாயார்தம்பாதமதில்
நமஸ்கரித்துதன்மகனே நன்முகவேவாழ்வாய்
என்றுசொல்லியுத்தமரை இருகையாற்றுனெடுத்து
தன்னல்மொழியாள் கனிவாயில்முத்தமிட்டாள்
முத்தமிட்டப்போது முன்னின்றதாதியர்கள்
எண்ணெய்பலகைகளே யெடுத்தங்கேதான்போட்டு
பொற்கிண்ணந்தன்னிற் போதவேயெண்ணெவிட்டு
எண்ணெகாப்புச்செய்ய எழுந்தருளவேணுமென்றுர்
எண்ணெகாப்பிட்டபின்பு எற்றதலைதான்கோதி
தீர்த்தமுமாடி திருநீருந்தானணிந்து
சிவனேத்தொழுது சிவபூசைதான்முடித்து
தேவப்பிராமணருக்கு வேண்டியதானங்கொடுத்து
அதிதிபரதேசிபற்கு அன்னமிகக்கொடுத்து
மகேசுராபூசையை வண்மையுடன்செய்தபின்பு
ஆபரணமுள்ளதெல்லாம் அழகழகாய்தான்பூண்டு

புட்பாதிகளெல்லாம் போதவேதான்மடித்து
போசனச்சோலைக்குப்போயிருந்தாருத்தமனார்
நாடாளும்இந்திரரும் நாகமடைந்தையரும்
பூமிதனில்வைத்து பொன்னின்முக்காலிழைத்து
மாணிக்கவட்டிலை வைத்தாளேயன்பாக
கைக்குநீர்வார்த்துக் கறிவகைகளுள்ளதெல்லாம
சுற்றிக்கறிகளெல்லாம் சேரவேதான்படைத்து
தும்பைப்பூபோலமுது சொரிந்துமேநெய்வார்த்து
தம்பியரையுண்ணென்று தடவினார்முதுகதனை
அப்போதுஉத்தமனார் அவர்கள்முகம்நோக்கி
உன்வீட்டிலேயமுது சொரிந்துமேநெய்வார்த்து
உன்வயற்றில்வந்து பிறப்பேன்காண்மாதாவே
யென்றபொழுதில் இயல்பானமாதாவும்
நின்றுபரதவித்து நெடுமூச்சுதானெறிந்து
அகமகிழச்சந்ததிநான் அறியாதபாவியென்று
காதல்மிகவில்லாத கன்னியிருந்தென்னவென்று
போதமயங்கியே போய்ச்சேர்ந்தாள்பஞ்சணையில்
மாதாமயங்கியபின் மைந்தரெழுந்திருந்து
உண்ணவேவாருமென உவர்ந்துசிற்ச அப்போது
தண்ணீர்குடித்தவுடன் தாகந்தெளிந்தாற்போல்
கைதொழுதபாலனைக் கட்டியெடுத்துவைத்து
மைவிழியாள்தானும் மடியிலெடுத்துவைத்து
வருக்கைப்பலாச்சுளையு மற்றுமுள்ளநற்கனியும்
சருக்கரைநற்சீனி தாரணியிலுள்ளதெல்லாம்
திரட்டுப்பால்தன்னையும் சிறக்கவேதான்படைக்கப்
பாங்குடனேயுத்தமனார் பரிந்தமுதுசெய்யலுற்றார்
கைகழுவிச்சுத்திபண்ணிக் கனகமணியாசனத்தில்
அடைக்காயும்வெள்ளிலையும் ஆனபரிமளங்கள்
சிறப்பாகத்தான்கொடுத்து சிந்தைமகிழ்ந்தங்குரைப்பாள்
இயமலோகக்கணக்கு எழுதவேபோவாய்நீ
அற்பமாங்குற்றமதை அக்கணக்கிலெழுதாமல்
சொற்பமாங்குற்றமதை தொகைபடுத்தாமற்கணக்கை
எழுதிமுடித்திடுவாய் என்மகனேயென்றுசொல்ல
ஏதுகுற்றஞ்சொன்னீர் என்னுடையமாதாவே
தலைவாழையிலையறுத்துத் தானெனக்குப்போட்டதுவும்
குற்றமென்றுபட்டோலை கொண்டேனென்மாதாவே
யென்றுசொல்லிப்பேசி யிருக்கின்ற அந்நேரம்
இயமதன்மாரச னியல்பாகத்தானழைத்து
அந்தமொழிகேட்டு அந்நேரம்பலகாரம்
மைந்தர்பெருமாள் மாளிகையிலுட்புகுந்து

போகவிடைதாருமென்று பொருந்தவேதாமுரைத்தார்
வந்துதொழுத மகனைத்தான்பார்த்து
வாரியெடுத்து மார்போடேதானணைத்து
இந்திரனுடனே யிந்திராணிதான் மகிழ்ந்து
தருமராஜனிடத்திற் றமொருவார்த்தைசொல்வார்
புத்திரர்பின்வருவார் போமுன்னெனவுரைத்தார்
அந்தப்படிதரும ராசனும்போகலுற்றான்
போனார்எமதருமர் பூவுலகிற்சேனையுடன்
அப்பால்நடக்கின்ற அதிசயத்தைகேளுங்கள்
மிருகண்டன்நற்கதையை மெய்யாகச்சொல்லுகிறேன்
வருந்தியிடுகண்டன் மகனுமேவேணுமென்று
பாதாளந்தோன்றவெட்டிப் பதிவாயனல்வளர்த்தி
ஓமகுண்டமத்தியிலே யுயர்ந்தகம்பநாட்டியந்தக்
கம்பத்திலேறி கால்விரலைத்தானூன்றி
வேதாளஅக்கினி மேலேபடர்ந்தெரிய
ஈசனேபிள்ளை யருளென்றேதவமிருந்தார்
தண்ணீரருந்தாமற் சருகும்பொசியாமல்
இருந்தான்தவசில் ஈராண்டோடெட்டுடனே
வருந்தித்தபசிருந்தான் மன்னிமிருகண்டன்
அந்தத்தவத்தருமை யரனருந்தாமறிந்து
தவசிவடிவாகத் தானெழுந்தார்சங்கமரும்
அப்போதுஉமையாளு மப்படியேதானும்வந்தாள்
இருபேருந்தவசியரா யேகினார்தவத்தருகே
மிருகண்டன்செய்தவத்தை மெய்க்காகக்கண்டார்கள்
அப்போமிருகண்டன் அரனைத்தான்தொழுது

விருத்தம்.

அய்யனேபோற்றிபோற்றி யறம்வளர்த்தவனேபோற்றி
செய்யனேபோற்றிபோற்றி திருக்கயிலாயாபோற்றி
பையவேதவசியகப் பார்தனிலுதித்தாய்போற்றி
யுய்யவேயடியேற்கன்பா யொருமைந்தனருள்வாய்போற்றி
(நடை) என்றமொழிகேட்டுஇருவருமனமகிழ்ந்து
சிந்தைபுடனே திருவாக்குத்தானுரைத்தார்
வாராய்மிருகண்டா மதலையைநாந்தருவோம்
சீராகவேவயசு தீர்க்காயிசாயிருந்தால்
கல்வியறியாமல் கசடனாய்த்தானிருப்பான்
அல்லதுகல்வி யறிவுடையனாயிருந்தால்
பதினாறுவயசுதனிற் யறிந்தேயிறந்திடுவான்
ஆனதாலிந்த வகைதனிலேயானபிள்ளை
எத்தகையாகயிருக்கவேணுமுனக்கென்றார்
அப்போமிருகண்டன் ஆராயிரங்கல்வியனைத்
தவத்தினில்மிக்கோனைத் தந்தருள்வாய்பிள்ளையென்று

தெண்டனிட்டபோது திருமதலைதானருளி
அம்மையுமைமாவளும் ஆனபரமேஸ்வரரும்
இடபமதிலேறி யேகினார்கயிலைதனில்
மிருகண்டனாரு மிக்கதவமுடிக்க
நலம்பெறவேதானிருந்து நன்றாகவாழ்கையிலே
வந்துபிறந்தான் மகவரிஷிமார்க்கண்டன்
சாஸ்திரபுராணமெல்லாம் சதுராகத்தான்படித்து
வேதங்களோதி விளங்கினான்மார்க்கண்டன்
அப்பால்கடக்கு மதிசயத்தைக்கேளுமினி
வில்வந்துளசி வீருப்பமுடன் தானெடுத்து
செண்பகமுமல்லிகையுஞ் சேர்ந்த அலரியுடன்
புஷ்பவகைகளெல்லாம் போதவேதானெடுத்து
தீர்த்தமுமாடி திருநீறுந்தானணிந்து
கண்டியணிந்தைந்தெழுத்தைக் கருத்திதானணிந்து
சிவனைத்தொழுது சிவபூசைசெய்யலுற்றான்
அல்லும்பகலும் அரைநாழிபிரியான்
அந்தமுடன்சிவனை யன்பாகபூசைசெய்வான்
தோத்திரங்கள்தானும் துலங்கவேசொல்லலுற்றான்

விருத்தம்.

அண்டர்கட்கரியாய்போற்றி யடியவர்க்கெளியாய்போற்றி
வண்டமிழ்ப்பாடுநாடு வாழ்மண்சுமந்தாய்போற்றி
கண்டவர்க்கினிமேனி காட்டியென்சென்னிமீதில்
முண்டகத்திருநாள்வைத்த முக்தனேபோற்றிபோற்றி.
வேதநாயகனேபோற்றி விண்ணவர்தலைவாபோற்றி
மாதொருபாகாபோற்றி மறுசமயங்களமாளப்
போதகஞ்செய்வாய்போற்றி பிஞ்ஞகாபோற்றியான்செய்
பாதகமனைத்துந்தீர்க்கும் பராபராபோற்றி.

நடை.-இப்படிதோத்திரங்கள் இயம்பிமிசப்பணிந்து
பழுதுகள்வாராமல் பானையேகைதொழுவார்
இந்தப்படியே யிருக்குந்தருவாயில்
ஆண்டுபதினாறும் ஆச்சுதோபாங்கவர்க்கு
அப்போதுயமகநபர் அருகில்நின்றதூதுவரை
மார்க்கண்டமாமுனிக்கு வயதுபதினாறாச்சு
மார்க்கண்டன்றன்னை வரவழையுமென்றுரைக்க
அந்தமொழிகேட்டு ஆனதொருதூதுவர்கள்
சென்றவனைத்தேடி சீக்கிரத்தில்வந்தார்கள்
அப்போதுமார்க்கண்டன் ஆனபெருங்கோயில்நிற்க
நின்றமார்க்கண்டனையும் நீர்வாருமென்றுரைத்தார்
அப்போது-தூதரைப்பார்த்தார் தூதரோநீங்களென
இயமதர்மராஜன் இபல்தூதர்நாங்களெல்லாம்
எங்கள்அரசனும்மை யினிமையாய்த்தானழைத்தார்

உங்கள்வயது மொருபதினாறுச்சுதென்று
வந்தோமுமையழைக்க வாருமென்றுதாதுரைக்க
மார்க்கண்டனாரு மனம்நடுங்காதேயுரைப்பார்
தார்க்கொன்றைசூடுகின்ற சங்கரனைத்தானினைந்து
வந்ததொருதூதுவரே வார்த்தையொன்றுகேளுங்கள்
அந்தமுடனுங்களை யழைத்துவரச்சொன்னவனும்
முந்தியிருந்தவனோ முறைசெய்யவந்தவனோ
எந்தஇயம னென்னையழைக்கச்சொன்னவன்காண்
என்றபொழுதில் எமதூதரேங்கிநின்றே
இவருயிரைத்தான்பிடிக்க இசையாதென்றோடிவந்து
எமதருமராசன்பா லிசைக்கிறார்தூதுவர்கள்
மார்க்கண்டன்றன்னை வரவழைக்கச்சொன்னீரே
அவன்சொன்னவார்த்தை யடியேன்உரைக்கிறோம்
முந்தியிருந்தவனோ முறைசெய்யவந்தவனோ
உங்களியமன் ஒளித்தோடிப்போவான்காண்
வந்தபடியே வழிபார்த்துஓடுமென்றார்
உடனேபயந்து ஓடிவந்தோமென்றனரே
அந்தமொழிகேட்டு அப்போதியமதர்மர்
கோபித்துக்கண்சிவந்து கூற்றுருவம்அந்நேரம்

விருத்தம்

அரியுமயனுக்தெரியாத அரனைநோக்கித்தவம்பண்ணி
பிரியமுடனேமிருகண்டன் பெற்றபிள்ளையூர்சேர
எரியுங்குஞ்சியுளகூற்ற னெடுத்தான்சூலத்துடன்பாசம்
விரியுங்கடல்சூழுலகமெல்லாம் வெற்றிப்பிறக்கத்தோன்றினனே
கெரியுங்கடற்போற்கோபமுடன் சேனையெல்லாம்புடைசூழக்
கரியமலைபோல்செம்மலைபோலக் கடுகாடந்தார்வழியின்மேற்
பெரியதடாவின்மீதேறிப் பிறைபோல்வளர்ந்தஎயிருகளும்
எரியும்விளக்கும்சுடர்போலே இரண்டுவிழியும்பொறிசிதற

☞ வ-ம். அகோதெப்படியென்றால்மார்க்கண்டனுக்குவயதுபதினாறானவுடனே தூதர்களை யனுப்பிக்கூட்டிவரச்சொல்லமார்க்கண்டனானவன் சுவாமி கயிலையங்கிரிவாசர் கிருபையைத்தியானித்துக்கொண்டு வந்த தூதரைநிராகரித்து இயமதன்மராஜனையுஞ் சட்டைபண்ணமற் சொன்ன செய்தியைத்தூதரானவர் தருமராஜாவிடத்திற்போ யறிவிக்க தருமராஜன் மிகுந்தகோபங்கொண்டு கண்களிரண்டுநெருப்புப் பொறிபறக்கத்தக்கதாக அண்டங்கள் மலைகளெல்லா நடுநடுங்கத்தக்கதாகத் தேவர்களெல்லாம் வெருண்டோடத்தக்கதாக வயிரமுடிதரித்துப் புஜங்களிரண்டிலும் ஆயிரங்கால் தூக்கப்படா நின்ற உடைவாளும் பரிசையுங்கட்டி ஆயுதவரிசைகளிற்சில ஆயுதமும் இடுப்புகளில் வரைந்துகட்டிப் பாசக்கயிருந்தண்டாயுதமெடுத்து கருங்கடாவின் பேரிலேறிக்கொண்டு வெற்றிச்சங்கூதி வீரமுரசறைந்து இருபுறமுஞ் சேனைதளங்கள் சூழ்ந்துவர. ஆயிரங்காலாள் ஆயுதபாணங்களுடனே வரவும் ஒ

ரொருகொம்பு இரண்டு நாழிகைப்பாப்புநீளம்வளர்ந்து யிருக்கப்படா நிறை கருங்கடாவானது ஓராண்டாயிர வரவும் மீசைகள்படபடவென்று துடிக்கத்தக்கதாகவும் வலதிதுடைதட்டி மார்க்கண்டனை தேடிப் புறப்பட்டான.

கடை.

வாரார்எமதர்மர் மார்க்கண்டன்தனைத்தேடி
இயமதன்மன் அங்குவரும் இரைச்சலதிககேட்டு
மார்க்கண்டனதானு மனதுமிகநடுங்கி
யென்செய்வோமென்று ஈஸ்வரரைத்தானினைத்து
தஞ்சமென்றுசொல்லிச் சரணபணியலுற்றான்

விருத்தம்.

கண்டான்பாலன்காலனையுங் கண்டுகண்ணீர்மிகத்ததும்பி
அண்டர்பெருமான்தனைப்பார்த்தே யடியேனசெய்தகுற்றங்க
ளுண்டானும்பொறுத்தருள்வா யுற்றகாலனென்னுயிரைக்
கொண்டேயின்றுபோகாமற் கோவேகாத்துக்கொள்வாயே
என்றேபிரங்கிமாக்கண்டன் இறைவன்பாதமதர்பற்றி
நின்றேதொழுதுகும்பிட்டு நெடுமூச்செறிந்துநின்றிடலும்
நின்றேபுனதுபர்திபினி நமனுமுன்னைப்பற்றிடில்யானு
சென்றேதொலைப்போமார்க்கண்டா தெரிவாயென்றுசொல்லுகிறான்
அஞ்சாதுனைநாங்காத்திடுவோ மானைமுகவன்தன்னுணை
துஞ்சாபசமீயவனுடனே சொல்லலாமென்றும்பேசாதே
மஞ்சார்பொழில்சூழ்லசரிய மதியாதுன்மேல்வருவானேல்
நஞ்சார்கூர்வால் மூவாலே நமனைக்கொல்வோமெனச்சொல்ல
கோலஞ்செய்துமலர்தூவிக் குறித்துன்பாதம்வணங்கிடுவேன்
ஆலமுண்டமிடற்றனே யடியேநெஞ்சங்கலங்காமல்
சூலபாசங்கனுடனே சுற்றிநின்றுஎன்னுயிரைக்
காலன்கொண்டுபோகாமற் காத்துக்கொள்வாய்கொள்வாயே
அத்தனேபோற்றிபோற்றி யடிவர்க்கெளிவாய்போற்றி
பித்தனேபோற்றிபோற்றி பிறைமுடித்தாடிபோற்றி
நித்தனேபோற்றிபோற்றி நிருமலர்போற்றிபோற்றி
யுத்ததேர்கூத்தன்வந்தா லுதைத்துடன்கொல்லுவனே
ஆதிப்பொருளாயணுகடலா யணுவுக்கணுவாயாவருக்கு
நீதிப்பரனானிறகுணனைய் நினையுமடியார்க்கெளியோனாய்ச்
சோதிவடியாய்ச்சுடரொளியாய்த் தோன்றுஞ்சிவனேமாறமலி
மோதிப்பாசமெரியவங்கால் மூழுதநானுன்னடக்கலாமே.

வ-ம். இப்படி மார்க்கண்டன் தோத்திரம் பண்ணுவதைக் கேட்டு எமதருமராசன் சொல்லுகிறான்.

விருத்தம்.

வாடாகெடுவாய்மார்க்கண்டா மறந்தாலும்விடுவேனே
ஓடார்காத்தாரென்செய்வாருன்னைப்பிடித்துப்போம்பொழுது
சூடாமணிசேர்விழியிரண்டுஞ் சொருகச்சொருகச்சூலத்தாற்
கூடாவுயிரைப்பிடித்தேதான கொண்டேபோவேன்கண்டாயே

வ-ம். என்னடாமார்க்கண்டா என்னுடைய மனுஷன்வந்து உன்னையழைத்தால் அதற்குநீவாராமலிருந்து மேலானவார்த்தை சொன்னையல்லவா உன்னைவிடத்தக்கதில்லை கர்த்தாவானவர் உன்னைக்கொண்டோடும்போது தடுக்கமாட்டாரென்று வெகுசாய்த்தருமராஜன் மார்க்கண்டனைப் பயப்படுத்துகின்றான்-எ-று.

விருத்தம்.

ஈசன்றன்னலென்செயலா மிந்தப்பதத்தையினிளவரால்
வாசஞ்செய்துமலரிட்டு வணங்கினாலுமாலறிது
மோசப்போகேனுன்றனக்கு மூடிந்தநாளும்வந்ததுகாண்
பாசங்கொண்டேயுன்னுயிரைப் பற்றிமிகவும்பரிப்பேனே
ஈரெட்டொழியவயசுனக்கு எற்றாமுண்டோஎன்னுடனே
மார்பைத்தட்டிஎதிராடி வலிமைசொன்னாய்மார்க்கண்டா
பாரிப்போதேநானுனைப் பரமேஸ்வரரும்பார்த்திருக்க
கூழிட்டொளிமேல்தன்னாலே கொண்டேபோவேன கண்டாயே

வ-ம். அகோதெப்படி யென்றால் இயமதர்மராஜனானவன் மார்க்கண்டனைப்பார்த்து அடேமார்க்கண்டா நீ எத்தனைதலைத்தோடுங் கூடி பூசைசெய்தாலும் உனக்குபதினாறுவயசுக்குமேல் விருப்பில்லையே கர்த்தாதானென்னசெய்வார் அவர் பார்த்திருக்கக் கொண்டு போகிறேனென்று கருங்கடாவினைபேரில் ஏறியிருந்த தருமராசன கீழிறங்கி இன்றையதினம் உன்னுயிரைக்கொண்டு போகிறேனென்று தருமராஜன் கோபத்துடன்சொல்ல அதைக்கேட்டுமார்க்கண்டன் சுவாமியையப்பார்த்து அபையஞ்சொல்லப் போகிறான் எ-று.

விருத்தம்.

படியேழ்தொழுநாம்பனே யபயம்பரமேஸ்பரனேயபையம்யபையம்
துடிசேரிழையாள்குணவா அபயந் தூயநெல்லைப்பதியாயபையங்
கடிசேர்சூலங்கரத்தா அபையங் கருணாலயனே யபையமபையங்
கொடிதாகியகூற்றுவனைக்கொன்றுகொடுப்பா யெல்லாவரமெனக்கே

வ-ம். என்று அபையமிட்டுவருந்தின மார்க்கண்டனைப்பார்த்து சுவாமியருளுகிறார்.

விருத்தம்.

வந்துபயந்தேயபையமிட்ட மார்க்கண்டாநீயஞ்சாதே
யைந்துகரத்தன்றன்னாணை யந்தகனையணுகவொட்டோஞ்
சிந்தைமகிழ்ந்தேயிருவென்று திருவெண்ணீருகாப்பணிந்து
மைந்தன்றன்னைத்தன்பிறகே வாவென்றழைத்துவைத்தனரே

வ-ம். இப்படிக் கைலாசபதிமார்க்கண்டனைத்தன்கிட்ட வைத்ததைப்பார்த்து எமதருமராசன் சொல்லுகிறான்.

விருத்தம்.

கூசக்கடாவோவல்லவென்று கொடியகோபத்துடனியமன்
ஈசற்கெதிரேதழலெழவே யெரியஞ்செக்காகக்குஞ்சியுடன்
பாசக்கயிற்றாலவன்றன்னைப் பற்றிப்பிடிப்போமெனவெண்ணிப்
பேசிக்கொண்டுதான்வந்து பெரியவலைபோல்நின்றனனே.

நடைநின்றுனியமன் நேரமுள்ளபாசமதை
வீசியெறிந்தான்காண் விமலமார்க்கண்டன்மேல்
அப்போதுமார்க்கண்டன் அரனையேகட்டலுற்றான்
வீசினபாசமது விரைந்துசிவன்மார்க்கண்டனையும்
சிக்கவேதானிருக்கி சேர்த்துமேதானிழுத்தான்

விருத்தம்.

வட்டச்சடையார்திருமுதுகை வலுவலுவாய்மார்க்கண்டன்
கட்டிக்கொண்டான்கரமிருகக் கண்ணீர்நின்றுமிகத்ததும்பச்
சிட்டர்க்குரியபிரானருஞ் சிறுவன்றனுமகப்படவே
துட்டக்காலன்பாசத்தைச் சுழற்றியிழுக்கலுற்றானே.

வ-ம். அகோதெப்படியெனறல் யமதருமராஜனுக்குக் கோபமுண்டாக்கி மார்க்கண்டன்பேரிற் பாசத்தைதவீசியெறிய மார்க்கண்டனனவன் சுவாமியை தாவிசேர்த்துக்கட்டிக்கொள்ள அப்பாசமானது சுவாமியையும் மார்க்கண்டனையுஞ்சேர்த்து அதைக்கண்டு மார்க்கண்டனனவன் தன்னைப்பாசமிழுக்கிறதுந்தவிர நம்முடைய நிமித்தியஞ் சுவாமியையும் பாசக்கயிறு கட்டிழுக்கும்படியாச்சுதேயென்று கண்ணீரானது தாரைதாரையாக ஓடுகிறது சுவாமிக்குத் தெரிந்து கோபமுண்டாக்கி யமதர்மராசனை யாக்கினைசெய்யப்போகிறார்.

விருத்தம்.

வாழுமுலகினருள்போற்ற மார்க்கண்டனைத்தான்காத்திடவே
யேழைபாகரெழுந்திருந்து இடதுகாலைமிகநீட்டி
விழவுதைத்தார்நிலமபார்க்க விண்ணுமண்ணுந்தானதிர
ஆழியுடைந்தாற்போலியமன் அலறிவீழ்ந்தானவனியிலே
நடை—அப்பால்நடக்கும் அதிசயத்தைசொல்லுகிறேன்
பாதத்தாலேயுதைக்கப் பாதாளத்தேவிழுந்து
இறந்தான்இயமன் ஏற்றதொருஈஸ்வரரும்
மார்க்கண்டாநீயும் மயங்காதேயென்றுரைத்து
என்றும்பதினாறு யிருக்கவரங்கொடுத்து
ஒன்றுக்குமஞ்சாதே யுன்னைநாங்காத்திடுவோம்
என்றுசிவனு ரிவ்வசனஞ்சொல்லிடவே
மார்க்கண்டன்மனதுக் கச்சமில்லாமல்வாழ்ந்திருந்தேன்
அன்றுமுதலுலகிலுள்ள ஆருயிர்கள்இறவாமல்
இருந்ததினாலென்னசெய்வாள் யேற்றபுவிமாது
கன்னிமுகம்வாடி கண்ணிடத்துநீர்சொரிந்து
சாவார்களில்லாமற் றரைப்பாரமாச்சுதினி
பூமிபெருகாதிருக்கப் புனிதாருள்வேணுமென்று
பைங்கொடியாளபூமாது பாரஞ்சுமந்தலுத்து
இந்திரனுற்கம்பிடத்திற் போவோமெனநினைந்து
சித்திராபுத்திரரைச் செகறுகண்டேசெல்வமுண்டு
பூமாதுமங்கே புனிதமாயோடிவந்தாள்
வந்துநின்றுஇந்திரனர் வாய்த்ததிருமாளிகையில்
முறையிட்டுச்சொல்லுகிறார் முடிந்தான்காண்மறலியுமே

சாவன்றிபூலோகஞ் சனங்கள்பெருத்ததினல்
என்ஞற்சுமக்கக் கூடுதில்லையென் றுரைத்தாள்
அப்போதுசித்திர புத் ரஞ்தாவாய்
நாராயணரிடத்தில் நண்ணியேசொல்லுமென்ன
நின் றுசலித்து நெடுமூச்சுதானெறிந்து
ஆரமுலைமாது அலறியேசென் றுகண்டாள்
பாலன்செய்தநற்பாக்கியத்தால் பரமேஸ்வரனுர்பார்த்து
காலன்பட்டுவிழுந்திறந்தான் அதனுலுயிர்கள்காசினியிற்
சாலமிகுத்துச்சாவன்றித் தரணிபாரமாச்சுதென் று
ஞாலமடந்தையருமுற்று நாராயணனைபோற்றினனே
அப்போதுவிஷ்ணுவும் ஆனதொருபுவிமாது
உன்னுடையபார மொழித்தருள்வோநான் தானும்
போவென் றுசொல்லி யனுப்பினர்பூதமங்கை
அப்போதுதன்கணத்தை யழைத்தேயருள்புரிவார்
சம்புகாதலத்திற் றுனிருக்கவுத்தமரை
இங்கேயழைத்தோடி வாருமென்றுமந்நேரம்
கணங்களுமோடியே கணக்கரிடம்வந்துகண்டு
நாராயணரும்மை நன்றுயழைக்கலுற்ருர்
என்றமொழிகேட்டவுடன் யேற்றதொருபுத்திரரும்
சிந்தைமகிழ்ந்து சீக்கிரமாய்தானெழுந்து
நாடாளுமிந்திரற்கும் நாகமடந்தையாக்கும்
கூடவேதெண்டனிட்டு கூப்பிட்டெழுந்திருந்து
இனிதானனுப்புமென்று இணையடிகைதொழுதே
நல்லதென் றுயிந்திரரும் நாயகியுமுள்மகிழ்ந்து
போய்வாருமென்று புகழ்ந்துவிடைகொடுத்தார்
சேனைகள்சூழ்ந்துவரச் செம்பொன்னின்தேரேறிச்
சித்திரபுத்திரனுர் சிவன்கைலைபோய்ச்சேர்ந்தார்
முப்பத்துமுக்கோடி தேவர்களும்வந்துகண்டார்
நாற்பத்துநாற்கோடி ரிஷிகளுமவந்துகண்டார்
சந்திரருஞ்சூரியருந் தான்வரும்வானவரும
வந்தமுனிதேவரெல்லாம் வணங்கினுரப்போது
சித்திரபுத்திரருஞ் சிவனுரடிவணங்கி
அர்ச்சனைகள்செய்து அரன்பாதம்போய்பணிந்தார்
வந்துபணிந்த மகனுரைத்தானெடுத்து
நன்மையுந்துன்மையு நடுவெழுதவந்தீரோ
என்றரனுர்களிகூற யேற்றசித்திரபுத்திரரும்
பத்தினியுடன்பட்டோலை வாசித்தார்பாங்காக
அப்போதுவிஷ்ணுவும் அகமகிழ்ந்தேயடிவணங்கி
சிவன்கயிலைசென்று செப்புகிருர்நல்வசனம்
இயமதர்மாசன் யிறந்தினுற்பூமாது
சாவன்றிமிகுந்தவுயர் தனைசுமக்கமாட்டாமல்
அல்லல்படுந்துயர மாற்றவேவேணுமென்று

சிவனாரிடத்திற் செப்பினாரப்போது
எல்லோருங்கூடி யிசைந்தார்சிவனிடத்தில்
சிவனாருமங்கே சித்தமகிழ்ந்திடவே
பிரம்மாவுமங்நேரம் பெருமையாய்த்தா னுரைப்பார்
வயதுபதினாறாய்ச் சிருஷ்டித்தார்நமக்கு
கணக்குபடிசென்றாள் காலத்தையறிந்தநமன்
தவத்தைமிகபாராமற் றானேதான்மாண்டனன்காண்
புத்திகுறைச்சலினாற் போய்மாண்டாரந்தநமன்
பிள்ளைகள்செய்தகுற்றம் பொருத்தருளவேணுமென்று
ஆரிடத்திற்சொல்வோம் அரனேநீரல்லாமல்
வேறொருநவருண்டோ விண்ணப்பங்கேட்கவென்றாற்
இப்படியேவானவர்கள் யெல்லோருமுறையிடவே
சித்தமிரங்கிச் சிவனாருமேதுசொல்வார்
இப்படியேயியம னினிமேலுஞ்செய்யாமல்
சொல்லுகிறேன்கேளுங் சுருக்கமாயென்றுசொல்வார்
அன்னதானஞ்செய்வோர் அரன்கோயில்கட்டினவர்
கன்னிதானஞ்செய்வோர் கன்றுக்குப்பால்விட்டோர்
சிவன்பாதஞ்சென்றவர்கள் சிவன்பூசைசெய்திடுவோர்
அன்னைபிதாவை யனுதினமுந்தான்தொழுவோர்
கோயிலுக்குநித்தம்போய் கும்பிட்டுவருவோர்கள்
பார்வதிபூசை பத்தியாய்செய்வோர்கள்
வைகுண்டநாதருக்கு வழியடிமைசெய்தவர்கள்
நன்மையேசெய்தவர்மேல் நாடாதேயென்றுசொல்லி
இவ்வளவுபேரும் யின்பமுடனென்னிடத்தில்
கொண்டுவரவேணுமென்று கூறியேபின்புசொல்வார்
யேமனையெழுப்பி யின்பமுடன்தான்மகிழ்ந்து
கூப்பிடுங்களென்றுசொல்லி கோமான்விடைகொடுக்க
அருளளிப்பாரென்றுசொல்லி அந்தகனை தானெழுப்ப
தண்டாயுதத்தோடே எழுந்தானியமனுந்தான்
வாய்புதைத்துதெண்டனிட்டு வணங்குகிறான்தானியமன்
அப்போதரனார் அகமகிழ்ந்துபார்த்தவனை
நன்மைகள்செய்தவர்மேல் நாடாதேயென்றுசொல்லி
ஆயுதங்களெல்லாம் அன்பாகத்தான்கொடுத்து
தன்மக்கணக்கெழுதி தாங்வந்தவுத்தமரை
நன்மைதின்மையுள்ளபடி நமனருகேதானினைந்து
வாக்குடனேசொல்லுமென்று மகிழ்ந்துமேதா னுரைத்தார்
இருபேருமொன்றாய் யெல்லோரையுமனுப்பி
எமலோகபட்டணத்தை சேருகிறாரிருபேரும்
படைகள்மிகநெருங்க பாரக்கடலேறி
வெற்றிகுடைபிடிக்க வெண்சாமரைவீச
கணக்கரும்நல்ல கற்பகத்தேரேறி
இயமதன்மன்கூட யிசைந்துவந்தாருத்தமரே

எட்டுதிசையு மெங்குமே தான்முழங்க
திக்குதிசைகளெல்லாஞ் சிறப்பானபந்தலிட
கவிவாணர்பாடக் கட்டியங்களாடிவர
நாடகசாலைப்பெண்கள் நாட்டியங்களாடிவர
பதினெட்டுவாத்தியங்கள் பண்பாகத்தான்முழங்க
வாசங்கள்தான்வீச வான்கவரிதான்வீச
பொன்னுலகத்தாரும்போகவே சூழ்ந்துவரத்
தேவாதிகளெல்லாஞ் சிறப்புடன்தான்வரவே
இந்தப்படியே யிருபேரும்வந்திருந்தார்
புட்பமாரிபொழிந்து பொன்னுலகோர்வாழ்த்திவிட
வானும்புவியு மற்றுலகிலுள்ளதெல்லா
நன்மையுந்தின்மையு நன்றாய்க்கணக்கெழுதி
எமதருமன்மாளிகையில் இருக்கிறார்நற்கணக்கர்
நான்குவாசல்வழிக்கு நடுவேயோர்மாளிகையில்
சித்திரபுத்திரருஞ் சிறப்பாகத்தானிருந்து
பட்டோலைதன்னை பதிவாகவாசித்தார்
திருக்கவோசன்மைசெய்தோர் சிறந்தவழிவருவதற்கு
வடக்குவாசல்வழியை வருசையாய்ச்செய்யலுற்றார்
மாணிக்கஞ்சேர்ந்த வயிரக்கால்தானட்டி
இடம்பெறவேபந்தல் எழிற்காவணம்போட்டு
மாடங்கள்கட்டி வயிறவிளக்கேற்றி
கூடங்கள்கட்டி குளிர்ந்தமலர்ச்சாவுடனே
நல்லதண்ணீர்பந்தல்களை நன்றாகவுண்டுபண்ணி
புண்ணியஞ்செய்வதற்கு பொருத்தமிகவுண்டாக்கி
அதுக்கானபேரை யவ்வழிக்குகாவல்வைத்து
இதுதான்கைலைவழி என்றுமேபுண்ணியற்கு
சொல்லும்படிக்கு சுருதியுள்ளகாவலரை
திட்டங்கள்செய்து சிறப்புடனேவைத்தார்கள்
கீழ்வாசல்தன்னருகே கேசவனைதானோக்கி
ஞானநிஷ்டைசெய்தவர்கள் நல்லவழிவருவதற்கு
சிவஞானபத்தர் தெரிசித்தவருவதற்கு
பராசத்திபக்தர்கள் பண்பாயிருப்பதற்கு
மண்டபஞ்சூளிகையும் வகைவகையாய்த்தான்வகுத்து
மாடமாளிகைகூடம வகுப்பாகசெய்யலுற்றார்
வெள்ளிக்கதவுமிட்டு வேதியரைக்காவல்வைத்து
வைகுண்டநாதருக்கு வழியடிமைசெய்தவர்கள்
வருகிறவழியென்று வைத்தாரேதூதுவரை
வேறுமொழிவாசல் விரையவலிக்கவென்று
வந்துதெற்குவாசல் வழிதோறுமுட்பரப்பி
நெருப்புபரந்தெங்கும் நின்றெரியவுண்டுபண்ணி
சுண்ணாம்புஞ்சோறுங் சுடுமணலுமுண்டாக்கி
பேதெரியவெட்டி பங்கமுக்கள்தானட்டி

கூரைப்புரங்காவுங் குளிந்தநிழலில்லாமல்
நாயும்நரியும் பெருங்கடுவாயோநாயும்
கட்டெறும்புகொட்டுதேள் கடியதொருபாம்புடனே
அட்டைப்புழுக்குழியு மரணைப்புழுக்குழியும்
நரகக்குழியும் நன்றாகஉண்டாக்கி
அரியதொருபாதகரை யடித்திழுத்துவரச்சொன்னார்
கல்லுங்கரடுங் கடியாமணல்பரப்பி
பாலகரைதெண்டிக்க பாவிகளைகாவல்வைத்தார்
மேற்கேயொருவாசல் விதம்விதமாய்செய்யும்வகை
பார்க்கபயங்காட்டும் படர்தீதப்பிசாசுகளும்
கருநாயுஞ்செ நாயுங் கலந்துகட்டிநிறுத்திவைத்தார்
குரைக்குந்தலைப்பேய்கள் கூட்டமாய்நிறுத்திவைத்தார்
செக்குலக்கைகலந்திருகைச் சிறப்பாகவுண்டுபண்ணி
ெ ப்புதூணட்டியல்ல நீபெரியநிறுத்திவைத்தார்
இரும்பாலேதூண்டில்களை எங்குமேதானட்டி
நீரில்லாதரைதனிலே நெருப்பெரியசெம்புருக்கி
பஞ்சமாபாதகர்க்கு பரப்பியேசெய்துவைத்தார்
இங்கிலியர் அங்கே கெட்டியேகாவல்வைத்தார்
இப்படியேவாசல்க ளெல்லாம்வகுத்தபின்
செப்பமுடனிருபேருஞ்சிறப்பாகதானிருந்தார்
இங்கிதங்கள்பேசி யிருபேருந்தான்மகிழ்ந்தார்
வள்ளுவனுக்காள்விட்டு வரவழைத்தாரந்நேரம்
வள்ளுவனும்வந்து வலமாகதெண்டனிட்டு
அடியேனையிங்கே யழைத்ததேதுக்கெனவே
படியேழுஞ்சென்று பறையடிக்கநீகேளு
சீவசெந்துக்களெல்லாம் சிறப்பாகதானறிய
காயிருக்கபழமுதிரும் மடியேகடிமுரசை
அடித்துவாவென்றுசொல்லி வனுப்பினானந்நேரம்
அப்படியேவள்ளுவனும் யானைதனைக்கொண்டுவந்து
ஆனைக்குள்வரிசைகளை யானைதனைக்கொண்டுவந்து
ஆனைக்குள்வரிசைகளை யன்பாயலங்கரித்து
ஆபரணமுள்ளதெல்லாம் அடைவாகத்தான்பூட்டி
தம்பட்டம்வைத்து தனிக்கால்வழியேதான்
ஆனைதனிலேறிப் புறப்பட்டானப்போது
துற்கைதிருக்கோவிலில் தூரவேதான்தெரிய
துய்யகரிவிட்டிறங்கி துற்கையைத்தான்பணிந்தான்
மதுவுதனைக்கொடுத்தாள் மாகாளியப்போது
ஆரக்குமதுவு மளவின்றிதான்குடித்தான்
மதுகுடித்துவள்ளுவனும் மதகரிமேற்றானேறி
அரக்குகுடிவெறியால் அதிகப்பறைமுழக்கி
பதினாலுலகறியப் பறையறைந்துசொல்லுகிறான்
ஆண்சாதிபெண்சாதி ஆகியேதான்பிறந்து
நாலுவகைச்சாதிகளும் நன்றாகத்தான்தெரிந்து

பழமுதிரக்காயுதிர வென்றுசொல்லிபண்புடனே
வெய்யவிளங்கோளான் வீதியிலேவந்துநின்று
முறையிட்டுதான்மறைய முழங்கினானப்போது
இந்தமொழிகேட்டுடனே யெல்லோருந்தான்மகிழ்ந்தார்
அந்நேரஞ்சிறுபிள்ளைக ளனேகப்பேர்தான்கூடி
இறைச்சலிட்டுக்கொண்டு எதிராகநின்றதுவே
அப்போதுவள்ளுவனு யானைதனைநோக்கி
அடித்தானேபிள்ளைகள்மே லானதொருகோபத்தால்
அப்போதுபிள்ளைகளுக் கதிககோபமுண்டாகி
கையில்மணலெடுத்துக் காற்றிலேதூத்திவிட்டார்
கண்ணில்மணல்விழுந்து கசக்கியேவள்ளுவனும்
கோபம்பெரிதாகி குணக்கேடாய்சொல்லிவிட்டான்
குடித்தவெறியாற் குணந்தப்பிச்சொல்லிவிட்டான்
பூவுதிரப்பிஞ்சுதிரப் பொருக்கெனவேபொட்டுதிரக்
காயும்பழமுங் கலந்துதிரவேணுமென்று
தினம்பிறப்பாயிரம்பேர் கினமிறப்பாயிரம்பேர்
சனமிகுதியேராமற் றாணிபாரங்குறைய
என்றேமதுகுடித்த வெறியாலிரங்காது
அடியடியென்று அடித்தான்பெருமுரசை
அப்படியேதானடித்து அவ்விடத்தேவிட்டேகி
சித்திரபுத்திரர்பாற் சென்றேபடிபணிந்தான்
அந்தக்கொடும்பறைகேட் டவ்விடத்திலுள்ளவர்கள்
இந்தவகையேதென்றே வெழுந்துமேதான்பிறகே
எல்லோருமொன்று எமலோகப்புகுந்தார்
நல்லதர்மராஜனையும் நற்கணக்குநாதனையும்
வந்துமிகப்பணிந்து வள்ளுவனங்குவந்து
கருகுழியிற்பூமுதலுங் கருத்தரித்தபூமுதலும்
வடுப்பிஞ்சிக்காயுதிர வெனறுரைத்தேவள்ளுவனும்
வற்றதொருபறையடித்தா னெல்லோருந்தானகேட்க
என்றுதொழுதுசொன்னா ரிருபேருந்தான்பார்த்து
அந்நேரமவர்களுக் கதிககோபமுண்டாகி
சொன்னமொழியொனறிருக்க சொற்றவரியடித்தவனை
கோபம்பெரிதாகிக் கூட்டிவரச்சொன்னார்கள்
வந்துமேவள்ளுவனும் மலரடியைபோற்றிசெய்ய
வாராய்நீவள்ளுவனே வாய்மதங்களேதுரைத்ததாய்
அப்போதுவள்ளுவனு மடிபணிந்தங்கேதுரைப்பான்
இப்போதுவந்தமுறை யென்னாலேவந்ததல்ல
அரக்குமதுமாகாளி யம்மைமிகவார்த்தாள்
அரக்குவெறியால் முழங்கினேனமுரசை

பிள்ளைகள் துற்சனத்தாற் பிழைகேடாய்ச்சொல்லிவிட்டேன்
இந்தபிழையைப் பொருத்தருளவேணுமையா
குடித்தவெறியாற் குணந்தப்பிச்சொல்லிவிட்டேன்
உள்ளமொழிசொன்னதெல்லா முறிதியாமென்றுசொல்லி
வாய்மையதுசொன்ன வள்ளுவனைத்தான்பார்த்து
சாராயந்தான்குடித்தான் தவறுவந்துவிட்டதினால்
வள்ளுவனைச்சொல்ல வகையேதுமில்லையென்றார்
பிள்ளைகளாலே பிழைகேடுவந்ததென்று
வள்ளுவன்றானென்செய்வான் மற்றப்பேரேதுசெய்வார்
வள்ளுவன்சொற்படியே மானிடவரெல்லோரும்
வாழ்வுபெறவேவாழ்ந்து மகிழ்ந்திருங்கள்புவிமீதில்
என்றே[illegible]ரும் இன்பமாய்த்தானுரைத்தார்
பூலோகத்துக்குள்ளே புகழ்ந்தனவையெல்லாம்
அவரவரிடத்தில் ஏகினாப்போது
இருந்தாரிருவருந்தான் இரத்தினமணிமண்டபத்தில்
மணிமுடியைதான்சூட்டி வண்மையுடன்தானிருந்து
பட்டோலைதன்னைப் பரிந்துமிகவாசிக்க
அப்போதுசெட்டிச்சி யம்மையொருசீமாட்டி
அமராவதிப்பெருமாள் அன்னைபோற்காத்தளிப்பாள்
தர்மராஜாவின்தேவி தான்செய்தபுண்ணியங்கள்
அழகியபுத்தகத்தில் அகப்படவேயப்போது
இயமனார்தன்னிடத்தில் இயல்பாகவாசித்தார்
இந்தவிபரம் இனிமேல்விளம்புகிறேன்
இக்கதையைக்கேட்டவர்க ளிராசபதம்பெறுவார்
நன்றிபெருங்கதையை நாள்தோறும்படித்தவர்கள்
பாடிப்படித்திடவே பத்தியுடன்கேட்டவர்கள்
காடிஎழுதினவர் நல்விரதந்தானெடுத்தார்
செல்வமிகவுண்டாகிச் சேரவேவாழ்ந்திருப்பார்
ஆல்போல்தழைத்து அருகுபோல்வேரூன்றி
மூங்கில்போலனைசுற்றம் முசியாதுவாழியவே

சித்திரபுத்திர நயினார்கதை முற்றிற்று.

உ

கடவுள் துணை.

அமராவதி கதை.

செட்டிச்சியம்மையென்ற் சீமாட்டிதன்கதையை
காரணத்தால்நான்பாடக் கணபதிமுன்னருள்வாய்
தர்மாசாவின் தயவானதேவியென்பாள்

அமராவதியென்ற அழகானநற்பெயராள்
பூகவத்திற்செல்வம் பொருந்தமிகவுண்டாகி
மட்டில்லாச்செல்வம் வளர்ந்துமிக்வுண்டாகி
அன்னைசுற்றத்தோடே யருள்பெரவே தான்வாழ்ந்து
முத்தொட்டில்கட்டி முடிவாழ்வுவுண்டாக்கித்
தருமங்கள்தானே தவராமல்செய்துவந்தாள்
பாவங்களென்றுசற்றும் பக்கத்திற்கேட்டறியாள்
இந்தப்படியே யியல்புடனே தான்வாழ்ந்தாள்
நயினார்தனிநோன்பு நடுவிலெடுத்தறியாள்
கணக்கலென்றசெய்தி கனவிலுங்கேட்டறியாள்
முப்பாலுங்காய்ச்சி முடியாமல்வாழுகின்றாள்
சிவதலம் விஷ்ணுதலம் தெரிசனைகள்செய்தறியாள்
சித்திரபுத்திரநோன்பு சிந்தையிலேவைத்தறியாள்
இவள்செய்திதன்னை இயல்கணக்கர்தாமறிந்து
எமதருமராசனிட மின்பமாய்த்தானுரைக்க
அவள்தருமநற்கணக்கை யணுவளவுந்தப்பாமல்
கேட்டாரியமருந்தான் கிருபையுடனேயிருந்து
அவள்செய்தபுண்ணியங்க ளடைவாகச்சொல்லுமென்றார்
பட்டணமெல்லாம் பறைகட்டியாருய்ந்து
அன்னக்கொடிகட்டி யமுதுபடைத்திடுவாள்
அதிதிபரதேசியர்க்கும் ஆருமற்றார்தங்களுக்கும்
ஆருய்ந்துதேடி யமுதுமிகக்கொடுப்பாள்
அத்தாலங்கேட்டவற்கு அமுதுமேதான்கொடுப்பாள்
மகேசுரபூசைமுதல் மனமகிழ்ந்துசெய்திடுவாள்
கோடைக்குத்தண்ணீர் குளிர்ச்சிமிகவுண்டாக்கிப்
பாணக்கம்நீர்மோர் பதிவாகச்செய்துவைத்தாள்
சித்திரைமாதத்திற் சிறப்புடனேநற்குடையும்
விசிறியுந்தான்கொடுத்து வெப்பங்கள்தானுடுத்திடுவாள்
கன்னிகாதானங் கருதிமுடித்துவைப்பாள்
வேதியர்களுள்ளதெல்லாம் விரும்பியேகொடுத்திடுவாள்
ஆடையில்லாபேர்களுக்கு ஆடைமிகக்கொடுத்திடுவாள்
சனிவாரமெண்ணை தப்பாமல்கொடுத்துவந்தாள்
நந்தவனமுண்டாக்கி நற்பூக்கள்தான்பறித்து
ஆலயங்கள்தன்னி லடைவாகச்சாத்துமென்றாள்
தூரத்துக்குத்தூரஞ் சுமைதாங்கிகட்டிவைத்தாள்
காதத்துக்குக்காதம் கற்கிணறுகட்டிவைத்தாள்
பிள்ளைபாற்றினபண்டம் பெருக்கவேதான்கொடுப்பாள்
வெட்டுந்தலையைப் பொருள்கொடுத்துமீற்றிடுவாள்
வட்டியில்லாமற்கொடுத்து வாங்கிமிகவைத்திடுவாள்
வேந்தனுக்குஅஞ்சி விரும்பிவருவார்க்கு
ஆதரவுசொல்லி யடைக்கலங்கள்தான்கொடுப்பாள்

கன்னங்கள்குத்திக் களவுசெய்யவருபவர்க்கு
அஞ்சாதேபோவென்று ஆதரவுசொல்லிடுவாள்
ஏழைபரதேசியர்க்கு இல்லிடமுங்கட்டிவைத்து
கால்வாய்குளங்கள் கனமாகவெட்டிவைத்து
இடிந்தமடமுதலாய் எத்துமேபுதுப்பித்துப்
பூப்பயிர்கள்போட்டு பு எக்கனிகள்தான்கொடுப்பாள்
பிள்ளைப்பிணிமுதலாய் பெருமையாய்த்தான்பார்த்தாள்
அனாதிபிணத்தை யடக்கிவைப்பாள்கண்டீரோ
ஆயிரங்கோட்டையரிசி அன்றைக்கன்றுசெலவிடுவாள்
அதற்கானகாய்கறியு மப்படியேதான்கொடுப்பாள்
சம்பாரஞ்சொல்லுவைத்த தடையறவேதான்கொடுப்பாள்
இந்தப்படிதருமம் யெவ்வளவுந்தப்பாமல்
செய்துமேதானுஞ் சிறப்பாகத்தானிருக்க
விரதமுநோன்பும் விரும்பாதபாவியென்று
கணக்கருக்குமனமே கடுங்கோபமுண்டாகி
என்னதர்மஞ்செய்தாலு மேந்திழையாள்தன்னைவிடோம்
பூமிதனிலிருந்து பொருந்தியேவாழாமல்
அதற்கானபடிசெய்து அழைப்பிக்கவேணுமென்று
கணக்கருக்குக்கைகூலி கட்டுவாருலமதில
இந்தவசனமதை யெவ்வளவுமறியாமல்
இருந்தஅமராவதியை யிங்கழைக்கவேணுமென்று
ஏவினார்தூதுவரை யின்னமொருவார்த்தைசொல்வார்
அவளுடையவாசலிடையாளங்கேட்டீரோ
தென்னமரங்கமுகுகளுஞ் சேரவேசூழ்ந்துநிற்கும்
கப்பல்படகுமுதல் கரையருகேவந்துநிற்கும்
தீவுகளிலுள்ளவைகள் சேகரமாய்வந்திறங்கும்
பசுக்களொருகோடிநிற்கும் பைங்கொடியாள்வாசலிலே
அரதேசிபரதேசிக் கன்னம்வழங்கிடுவாள்
என்றுசொல்லிநற்கணக்கர் ஏவினார்தூதுவரை
அங்கோரந்தூதுவர்கள் அதிககோபமுண்டாகி
இருப்புத்தடியுடனே யேற்றதோராயுதமும்
பாசக்கயிறும் பருவலயந்தானெடுத்து
வந்துவளைந்தார்கள் மனையாட்டிவாசலிலே
வாசலிலேவந்துநின்று வளமையெல்லாங்கண்டார்கள்
பிள்ளைப்பால்பிள்ளைக்கஞ்சி பெருகவேவைக்கிறதும்
அதிதிபரதேசியர்க்கு அன்னங்கொடுக்கிறதும்
கூனர்குருடர் குறைக்கால்முடவருக்கும்
ஆராய்ந்துப்பார்த்து அமுதுகொடுக்கிறதும்
தருமங்களெல்லாந் தயவுடனேசெய்கிறதும்
இத்தனையுங்கண்டு இயல்பானதூதுவர்கள்
அமராவதியாளை யழைத்துவரச்சொன்னார்கள்

இவளையோநாமழைத்துப் போனோமேயாமாகில்
தருமங்களெல்லாந் தவிர்ந்துவிடுங்கண்டீரோ
பஞ்சானுங்குஞ்சும் பறந்துவிடுங்கண்டீரோ
அன்னக்குடைகளெல்லா மலைந்துவிடுங்கண்டீரோ
என்றுசொல்லிதூதவர்கள் ஏங்கிமனங்கலங்கிக்
கையில்தடியைக் கலக்கவேபோட்டுவிட்டு
கன்றுபெருமூச்சும் நெடுமூச்சுங்காவறிய
அந்நேரமோடிவந்தாள் அமராவதியாளும்
கண்டாளேதூதவரைக் கலங்கியிருக்கிறதை
அமராவதியாள் அவர்முகத்தைத்தானபார்த்து
வாருங்கள்மக்களே மயங்கியிருப்பானேன்
இத்தனைநேரமட்டும் இளைப்பாயிருந்தீரே
அடியாள்தன்பேரில் அபராதமுண்டுபண்ணீர்
என்றுசொல்லியிங்கிருக்க வினியமுதுகொள்ளுமென்றார்
அப்போதுதூதவர்கள் அடுத்தமொழியுரைத்தார்
இந்நேரம்நாங்கள் இனியமுதுகொள்வதில்லை
என்றுசொல்லிதூதவர்கள் இருந்துவிசாரமுற்று
வாருங்கள்மக்களே வருந்திமெலிவானேன்
கன்னமிடவந்தீரோ களவுசெய்யவந்தீரோ
வேந்தனுக்கஞ்சி வெருண்டுதான்வந்தீரோ
தாய்க்குத்தாயாகி தானருந்தஉங்களுக்கு
உண்டிருக்கஅன்னமுதல் உடுமடியுநான்றருவே
அஞ்சாமல்நீங்க ளன்னங்கள்தான்புசிக்க
வாருங்களென்று வருந்திமிகவழைக்க
இவ்விடத்தில்தானமுது பொசித்தோமேயாமாகில்
எங்கள்நயினார் எழுதுவர்பட்டோலையிலே
ஆனதினால்நாங்க ளமுதுபொசிப்பதில்லை
இருந்தரசாளுமென்று ஏகினார்தூதவர்கள்
வந்தகணக்கர் மலரடியைத்தெண்டனிட்டுச்
சித்திரபுத்திரரே சீயானேகேளுமையா
செட்டிச்சியாளெங்களைத் தீக்கழுவிற்போட்டதுவும்
செட்டிச்சியைநாங்கள் தீண்டோமொருநாளும்
என்றுசொல்லிதூதவர்க ளின்பபாய்த்தானுரைக்க
உங்களையுன்னா வுபசாரஞ்சொன்னாளோ
என்றுசொல்லிகணக்கர் இருகண்ணுந்தான்சிவந்து
மற்றுமொருதூதவரை வரவழைத்தேதுசொல்வார்
அமராவதியொருத்தி ஆனகன்மஞ்செய்துக்கொண்டு
ஏனநோன்புகொண்டாட வென்னையுநினையாமல்
பூதலத்திற்செல்வம் புகழ்பெறவேதானிருந்து
தனிக்குறும்புசெய்துக்கொண்டு தரணியிலிருப்பவளை
இந்நேரமிங்கே யழைத்துவாவென்றுசொன்னார்

என்றுசொல்லிதூதுவரை யியல்பாகத்தானனுப்ப
அந்நேரந்தூதுவற்கு அதிககோபமுண்டாகி
இருப்புத்தடியெடுத்தார் யேற்றமொருதூதுவர்கள்
பாசக்கயிறும் பருவலையுந்தானெடுத்து
வந்துவளைத்தார்கள் வாழ்வரசிவாசலிலே
நந்தவனம்வைத்து நறும்பூபரிக்கிறதும்
அன்னங்கொடுத்து ஆதரவுசொல்லுவதுஞ்
சத்திரங்கள்வைத்து தயவாய்நடக்கிறதும்
தருமங்களெல்லாம் தவறாமல்செய்கிறதும்
கண்டார்கள்தூதுவர்கள் கவலைமெத்தவுண்டாகி
கையிற்றடியைக் கடக்கவேவிட்டெறிந்து
தலையிலேகைவைத்துச் சலிப்பாயிருக்கையிலே
அந்நேரம்அங்குவந்தாள அமராவதியாளும்
வாருங்கள்மக்களே வாடியிருப்பானேன்
அமுதுகொள்ளவாருமென்று அழைத்தாளேயப்போது
பாணக்கம்வாங்கிப் பதிவாய்க்குடித்தார்கள்
இப்போதிவளை யழைத்துமேபோனக்கால்
தருமங்களெல்லாம் தவறிவிடுமென்றுசொல்லி
எதுகுறையென்று இவளையழைக்கவந்தோம்
இருந்தரசாளுமென்று ஏகினார்தூதுவர்கள்
சித்திரபுத்திரரே சீமானேகேளுமையா
எங்களைநீங்கள் என்னபழிசெய்தாலும்
செட்டிச்சியைக்கூட்டி வரமாட்டோமென்றுசொன்னார்
அந்நேரமக்கணக்க ரதிககோபமுண்டாகி
யுங்களுக்குக்கூலி கட்டினானோ காரி
பாணக்கம்வாங்கிப் பதிவாய்க்குடித்தீர்கள்
இதுக்கோயனுப்பிவித்தேனென்றேயுத்தமனார்
சினத்துமிகவிரைந்து சீறியேயப்போது
மற்றுமொருதூதுவரை வரவழைத்தரந்நேரம்
பெற்றதாயைக்கொன்ற பெரும்பாவிமொட்டையனைக்
கொண்டகணவனைக்கொன்ற கோலப்பிராமணியை
இவர்கள்தனையழைத்து ஏவினார்நற்கணக்கர்
அரைநாழிகைப்பொழுதி லழைத்தோடிவாருமென்றார்
அந்நேரமொட்டையனு மானபிராமணியும்
ஆயுதங்கள்தானெடுத்து நடந்தாரிருவருந்தான்
வந்துதலைப்பட்டார்கள் வாழ்வரசிவாசலிலே
மனையிலொருபுறத்தே மறைவாயிருந்தார்கள்
தானதருமங்கள் தயவாய்நடக்கிறதை
யித்தனையுங்கண்டு எடுத்துரைத்தான்மொட்டையனும்
இவளைத்தனைதரும மினிதாகசெய்தாலும்

நயினாருரைத்தபடி நான்விடுவதில்லையென்றான்
என்றுசொல்லிமொட்டையனு மிருகண்ணுந்தான்சிற
அந்நேரமேதானும் அமராவதியாளும்
தீர்த்தமுமாடித் தெருவீதிவருகையிலே
பூனையாய்வந்து குறுக்கிட்டானமொட்டையனும்
அப்போதுசெட்டிச்சி யனேகங்கவலையுற்றுத
துக்கமுண்டாகித் துடித்துதேவலதுகண்ணும்
மயக்கப்பிறந்து மதிமறந்து அந்நேரம்
யேதோகொடுமை யினிகேட்கவேணுமென்று
பூனைக்குறுக்கிடவும் போர்ந்தகூறல்லவென்று
தருமங்கள்செய்ததிலே தப்பிதமுண்டாச்சோ
என்றுசொல்லியம்மை யேற்றதொருபாத்திரத்தில்
அமுதுகரிகளை யப்போதேதானெடுத்து
சயகண்டியடித்துத் தெருவெல்லாந்தான்திரிந்து
ஆராய்ந்துதேடி யமுதுகொடுத்திடவே
திட்டசட்டமாகச் செய்வித்தாளந்நேரம்
ஒன்றுந்தவறாமல் உள்ளபடியேநடத்தி
வந்தாளரண்மனையில் வாழ்வாட்டிதானுமப்போ
இருக்கும்பதியில் யியல்பாகத்தானிருந்து
மக்கள்மருமக்கள் மகிழ்ந்தங்கோருலகத்தில்
பேத்திமார்பாட்டிமார் பிரியமுடனேயிருந்து
பாலோடுநெய்யோடும் பதிவாயமுதருந்திச்
சாந்துபுனுகுஞ் சவ்வாதுமுதல்தானணிந்து
புஷ்பாதிகளெல்லாம் போதவேதான்சூட்டிச்
சந்தோஷமாகவே தானிருக்கும்வேளையிலே
கொல்லவந்தகூற்றுவனுங் கோபாலபிராமணியும்
அவ்வேளைதான்பார்த்து அவள்நடையில்வந்தார்கள்
வாசற்படியில் வந்துநின்றாரந்நேரம்
கண்டமராவதியாளும் கன்மமோவென்றுசொல்லி
இத்தனைநேரமட்டும் யிளைப்பாயிருந்தீரோ
இருபேருந்நீங்கள் இனியமுதுகொள்ளுமென்றாள்
சத்திரத்தில்வாருமென்று தான்விரும்பிச்சொன்னாளே
அப்போதுகூற்றுவனு மானபிராமணியும்
இந்நேரம்நாங்கள் அமுதுகொள்வதில்லையென்று
பலகாரம்நான்றருவேன் பதிவாகக்கொள்ளுமென்றார்
பலகாரம்நாங்கள் பொசிப்பதில்லையென்றார்கள்
என்னத்திலிச்சையென்றாள் ஏந்திழையாள்தான்கேட்க
பாலின்மேலாசையென்றாள் பிராமணியுமப்போது
பாலும்பழமும் பரிவாகக்கொண்டுவந்தாள்
காச்சினபால்நாங்கள் கண்ணாரக்கொள்வதில்லை
கண்காணப்பால்தான் கறந்துதரவேணுமென்றார்

கருமமோவென்று காரிகையாள் தானினைந்தாள்
இதுவுமொருசோதனையோ வென்றுமனதிலெண்ணி
ஆறுற்சுறந்து அடைவாசத்தருவேனென்றாள்
அணைசயிருங்கடக்காலும் அன்பாகத்தானெடுத்து
காராவினண்டையிலே காரிலைகயாள்தான்வரவே
கொல்லவந்தகூற்றுவனுங் குடுகுடெனவோடிவந்து
கொம்பதனிலேறிக் கூற்றுவனுந்தானிருக்க
ஆணைபவென்றுதானும் அமராவதிதானும்
அப்போபசுவுக் கதிகோபமுண்டாக்க்
காடிகழுநீர் கலந்துவைப்பாரில்லையென்று
வைக்கல்பிடிங்கி வாரியேவைக்கையிலே
குத்தியெடுக்க கூறியகொம்பதனில்
இருந்தாள் அமரா வதியுமிகக்கலங்கி
கதரத்தொடுத்தாளே காரிகையாளந்நேரம்
ஏங்கியழுதாளே எமலோகந்தானறிய
தருமங்கள்செய்ததிலே தனக்குக்கேடுவந்ததுண்டோ
பொல்லாதகாலமாய்ப் பூனைக்குறுக்கிடவும்
துற்குறிகள்காட்டினதுஞ் சோதனையுமுண்டாச்சு
ஏதுகுறைகளுண்டோ என்னமோவென்றுசொல்லி
எண்ணுகதையெண்ணி யேங்கியுயிர்பிரிந்தாள்
கொல்லவேவந்த கூற்றுவனும்பிராமணயும்
பாசக்கயிரும் பருவலையுந்தானெடுத்து
கட்டிறைப்போது கண்மண்டைதான்பிதுங்க
இருப்புதடியில் யிரக்கமற்றுத்தானடித்து
பார்ப்பாத்திகள்ளியங்கு பாசக்கயிர்பிடித்து
அடித்தானேகூற்றுவனும் அமராவதியாளை
காமவல்லியென்றொரு காற்றுவந்துவீசிடவே
ஆகாரமின்றெளியு மதிகோபத்தோடுவந்து
இருப்புத்தடிமுறிந்து இரக்கத்தார்தானவிழவே
பாசக்கயிரும் பருவலையுந்தானதெரிக்க
அப்போதகூற்றுவனு மானபிராமணியும்
திடுக்கிட்டுநின்று தடுமாறியந்நேரம்
இத்தனைக்குந்தருமங்கள் யினிதாகச்செய்தாலோ
இவளைநாம்விட்டுவிட்டால் யியல்கணக்கேதுசொல்வார்
கோபித்துக்கண்சிறிக் கொலைக்கழுவிற்போட்டிடுவார்
எப்படியுந்தானிவளைக் கொண்டுமேபோகவென்று
இருபேருமாக நினைந்துமேதான் துணிந்து
வலைக்கயறுதானெகத்து வரியவேதான்பூட்டி
கட்டிவிழுத்தார்கள் காரிகையையந்நேரம
கண்கள்தெரித்துவிழக் கட்டியிழுத்தார்கள்
கொண்டுவந்துவிட்டார்கள் கொற்றவன்முன்பாகக்

சித்திரபுத்திரநுஞ் சீறியேயேதுசொல்வார்
தருமத்தைத்தானே தயவாகுபினைத்தாயே
என்றுசொல்லிநற்கணக்கர் இருகண்ணூர்தான்சிவந்து
காட்டிக்கொடுத்தாரே கடுந்தூதர்கிட்டவுந்தான்
பின்கட்டாய்க்கட்டிப் பிடரிபிலேகுத்துமென்றார்
செப்புத்தூணோடே சேரவேகட்டுமென்றார்
நாராசங்காச்சி நடுசெவியில்ஊத்துமென்றார்
உச்சிதனிலாணி வோங்கிபடியுமென்றார்
அமராவதிக்கு அதிகதாகமுண்டாகி
தண்ணீர்தவிக்குதென்றாள் தாமக்குழலாளும்
சித்திரபுத்திரனார் சீமானார்தான்கேட்டு
செம்பையுருக்கித் தெளிபவைத்துக்கொடுமென்றார்
அந்தப்படிதூதுவர்க ளமராவதியாட்கு
செம்பையுருக்கித் தெளியவைத்துத்தான்கொடுத்தார்
பாணக்கமென்று பதிவாகத்தான்குடித்தாள்
இதையுமறிந்தாரே யியல்பானநற்கணக்கர்
மழுவையுங்காச்சி வைக்கவேசொன்னார்கள்
சந்தனசோகத் தான்குளிர்ச்சியானதுவே
அப்போதொருகாற்று அவனிதனில்வந்தடித்து
கயிறுதெரித்துக் கடுந்தூதர்தான்விழவே
கணக்கருமப்போது கடுங்கோபமுண்டாகி
ஐந்நூறுகாத மகலமுள்ளகாட்டோடே
கல்லுங்கரடுங் காரைமுள்ளுதான்படவே
கட்டியிழுக்கவென்றார் கண்விழிகள்தான்பிதுங்க
இந்தப்படிகாடெங்கும் இழுக்கலுற்றார்தூதுவர்கள்
அந்நேரக்காட்டி லதிசயங்களுண்டாச்சு
பொல்லாதகாடெல்லாம் பூங்காவனமாச்சு
புட்பங்கள்தான்சொரியப் பூஞ்சோலையுண்டாச்சு
சந்தனகுங்குமமுந் தானுமிகவுண்டாகி
சாந்துபுனுகுஞ் சவ்வாதுமணந்தான்வீச
தாமரைத்தடாகங்கள் தானுமிகவுண்டாகி
இந்திரலோகம்போ லிருந்தாளப்பெண்கொடியும்
வாசம்பொருந்தியே மனமகிழ்ந்துதானிருந்தாள்
தருமங்களானதெல்லாம் தற்காத்துநின்றதுவே

காற்றுவந்துகூடிக் கயிறுந்தெரித்ததுவே
ஓடிவந்ததூதர் உரைத்தார்கணக்கருடன்
பொல்லாதகாடெல்லாம் பூங்காவனமாச்சு
ஆனையைக்கட்டும் கயிறுமருந்ததென்றார்
இத்தனையுங்கேட்டு இயற்கணக்கரந்நேரம்
செப்புத்தூணூட்டிச் சிறக்கவேதான்காய்ச்சி
செப்புத்தூணோடே சேர்த்துயிருக்குமென்றார்
கொல்லரைக்கூட்டிவந்து குறடுகள்தான்காய்ச்சி
காய்ச்சிப்பிடுங்கவுமே கம்மாளர்வந்துநிற்க
அமராவதியு பயமிட்டுக்கொடுத்தாள்
கண்கள்தெரித்துவிழக் கன்னத்திற்போடுமென்றார்
தண்ணீர்தவிக்குதென்றாள் தாமக்குழலாளும்
ஈயத்தைக்காய்ச்சி யிதம்பெறவேதான்கொடுத்தார்
அதையும்அறிந்தார்காண் ஆனதொருநற்கணக்கர்
இருப்புக்லகையாலே யடியுமென்றுருத்தமனார்
வாயிற்புழுச்சொரிய மழுக்காய்ச்சிவையுமென்றார்
கண்டதுண்டமாகவெட்டிக் கசத்திலேபோடுமென்றார்
அன்னேரஞ்செட்டிச்சி யானைபோல்வீறிடவே
வீறிட்டசத்தம் விமலனார்தானறிந்து
சிருட்டித்தாரந்நேரஞ் செட்டிச்சிக்குநோகாமல்
மின்னல்மழைகளையு மிகவேதானுண்டாக்கி
காற்றும்புயலுங் கனமாகவந்திடவே
செப்புத்தூணெல்லாஞ் சேரத்தணிந்ததுவே
கொல்லர்குறடுங் குளிர்ச்சிகளானதுவே
தாமக்குழலாளுந் தற்சொரூபமாயிருந்தாள்
மேனிவடுவில்லாமல் வேடிக்கையாயிருந்தாள்
இன்னமொருவுபாய மெடுத்தாரேவுத்தமனார்
அரையளவுகுழிகள் ஆழமாய்வெட்டியதில்
செட்டிச்சியம்மைதனைச் சீராகத்தானிருத்தி
கைகள்தனைப்பின்னிக் கட்டாகத்தானிருத்தி
உச்சிமயிரை யொருமிக்கத்தான்வகிர்ந்து
மூன்றுதிசைமரத்தில் மூன்றுவகையாய்முடிந்து
ஆனைதனைக்கொண்டிடற அடுத்துவிடுமென்றுரைத்தார்
இந்தமொழிகேட்டுடனே யேங்கினாள்பைங்கொடியும்

அப்போதூதுவர்கள் அமுதுசெய்யவந்தவுடன்
தருமங்கள்செய்வதெல்லாந் தழைத்துமிகவோடிவந்து
காற்றும்புயலுங் கடுகெனவேதானடித்து
எல்லாரையுந்தூக்கி யெறிந்ததேபூமியிலே
அதையுமறிந்தார்காண் ஆனதொருநர்க்கணக்கர்
அட்டைகுளத்தி லழுந்தவேதள்ளுமென்றார்
தாமரைதடாகமதாய்த் தானுமேயுண்டாக்கி
அட்டைக்குளத்தி லழுத்துகிறபாவிகளும்
செட்டிச்சியாலே சிவலோகஞ்சேர்ந்தார்கள்
வாசம்பொருந்தி மணத்ததேயக்குளமும்
செக்கிலேபோட்டுத் திருகுமென்றாரிழையை
வாணியரைக்கொண்டுவந்து வடங்களுந்தான்முறுக்க
அந்தச்சமயத்தில் அங்கொருவரில்லாமல்
தாயில்லாப்பிள்ளைநின்று தவிக்கிறதைக்கண்டாளே
பிள்ளைதனையெடுத்துப் புழுதியெல்லாந்துடைத்து
கண்ணீர்துடைத்துக் கடுகவனுப்பினளே
ஆதரவுசொல்லி யனுப்பினாள்பிள்ளைதனை
உடனேவடமுறுக்கி யோடிவந்தார்வாணியரும்
செட்டிச்சியம்மைதனைச் செக்கிலேதான்போட்டு
ஆட்டவேணுமென்று அங்குவந்தாரந்நேரம்
செட்டிச்சியுமப்போ சிவனைநினைந்தழுதாள்
அப்போதொருகாற்று அவனிதனிலுண்டாகி
செக்குத்தகர்ந்தருடன் செக்குலக்கைதான்முறிந்து
ஆனைகள்பட்டு அழுதவடந்தான்தெரிந்து
ஓடினார்தூதுவர்க ளொருவருமேகாணாமல்
அந்நேரம்வாணியர்கள் அதுசெய்திகண்டவுடன்
வந்துமேசொல்லுகிறார் வாய்த்தகணக்கருடன்
ஆகாசக்காற்று அதிககோபமாகவந்து
செக்குத்தகர்ந்து செக்குலக்கைதான்முறிந்து
ஓடினார்தூதுவர்கள் ஒருவருமேதான்காணோம்
அமராவதியாளு மன்னம்போலேயிருந்தார்
கணக்கரிதைக்கேட்டவுடன் கண்களிரண்டுஞ்சிவந்து
அமராவதியாளை யழுநரகில்தள்ளுமென்றார்
நகரத்தைக்கண்டாளே நல்லதொருமாதும்
நகரத்திலேகிடந்த பாவியர்களெல்லோரும்
செட்டிச்சியார்பார்த்தவுடன் சிவலோகஞ்சேர்வார்கள்

நரகக்குழிகளெல்லாம் நல்லகுழியாயினதே
அதையுமறிந்திரே ஆனதொருநற்கணக்கர்
எண்ணெயும்பிண்ணாக்கும் எடுக்கவென்றாரவள்தலையில்
விற்றுவரச்சொல்லி விடைகொடுத்தாரந்நேரம்
அந்நேரந்தூதுவர்கள் அவள்தலையிற்றானெடுத்து
எழுதெருவும் இயல்புடனேகூறிடவே
கொண்டுதிரிந்தாளே கோலப்பெருந்தெருவில்
கொள்வாருமில்லை கூப்பிடுவார்தானுமில்லை
பட்டணத்திலுள்ள பலபேர்களெல்லோரும்
புண்ணியரைச்சற்றும் புகழ்ந்தரியாப்பாவியுடன்
எண்ணெயும்பிண்ணாக்கு மினிவாங்கலாமென்று
செட்டிச்சியைக்கண்டவுடன் தெருக்கதவைத்தானடைத்தார்
தெருவுகளெல்லாஞ் சேரவே தான்சுமந்து
கழுத்துத்தெரிக்கத் கண்முண்டைதான்பிதுங்க
அமராவதியாளும் அனியாயமென்றழுதாள்
அய்யய்யோதெய்வமே அரும்பாவஞ்செய்தேனோ
இந்தவிதிகளெல்லாம் எனக்கோவரவேணும்
விதியைநினைந்தந்தணர் வீதியைவந்தவுடன்
அதிலொருபிராமணியும் அந்நேரமோடிவந்து
எண்ணெயும்பிண்ணாக்கும் இறக்குமென்றாளப்போது
அந்தட்சணமே யிறக்கினாளம்மாது
தண்ணீர்தவிக்குதென்றாள் தர்மக்குழலாளும்
நீர்மோர்பெருக்கி நிறையவேகொண்டுவந்தாள்
கொண்டுவந்தமோரை குடித்தாள்வயிறுமுட்ட
தாகந்தெளிந்து தகைதீர்ந்தாள்செட்டிச்சி
பிராமணியுமப்போ பெருத்தமொழியுரைத்தாள்
அமராவதியாள் அருகிருந்துகேட்கலுற்றாள்
அன்னமேதேனே யமராவதியாளே
நீஎத்தனைதருமம் நிலைபாகச்செய்தாலும்
சித்திரபுத்திரரைச் சிந்தையில்வையாமல்
புண்ணியவானென்று புத்திதனில்வையாமல்
இயமதன்மன்வாசலிலே யிருந்துகணக்கெழுதப்
பசுவின்வயிற்றில் பாலகனாய்வந்தவரை
தருமங்களெல்லாம் தவிடுபொடியாக்கிடுவார்
அண்டபுவனமெல்லா மறிந்துகணக்கெழுத

புண்ணியனார்வந்து பிறந்ததறியாயோ
இத்தனைபாடுபட்டும் எவ்வளவும்புத்தியில்லை
அவரைநினையாமல் அவதிமிகப்பட்டாயே
அவர்கோன்பிருக்க அறிவிக்கவேணுமென்று
உன்னாலேதானு முலகெங்குந்தானறிய
கூட்டிவந்தேயுன்றனைக் கோரணிகள்செய்யுமென்றார்
என்றேசிராமணியும் எடுத்துரைத்தாளந்நேரம்
அமராவதியாட்கு அறிவுமிகவுண்டாகி
சித்திரபுத்திரரே சிவனார்பெருங்கணக்கர்
பாவங்கள்புண்ணியங்கள் பகுந்தெழுதவந்தவரோ
காணாதகாட்சியெல்லாங் காட்டிவைத்தார்சீமானும்
அவரைநினையாம லல்லலெல்லாம்பட்டேனே
அறியாமல்நானும் அவதியுற்றேனென்றுசொல்லி
மண்ணில்விழுந்து மலரடியைதெண்டனிட்டு
அறிவெனக்குவந்ததையா ஆனதொருபாலகரே
செய்தபிழைபொறுப்பீ ரென்றுசொல்லிதெண்ணிட்டாள்
கணக்கருமப்போது கருணைமிகவுண்டாகி
சித்தந்திரும்பி திருவாய்மலர்ந்தருளி
மெத்தமனமகிழ்ந்து வேகமெல்லாந்தான்தணிந்து
என்னைநினைத்ததினால் என்னோடுடன்பிறப்பும்
இவளுக்குநற்பலனும் இனிகொடுப்போமென்றுசொல்லித்
தானங்கள்பண்ணிவரத் தானேயனுப்பினர்காண்
தானங்கள்செய்து தவக்குறையுந்தான்முடித்து
சிவனைநினைந்து திருநீருந்தானணிந்து
சித்திரபுத்திரரே சீமானேகேளுமென்று
கணக்கரிடத்திலே காரிகையாள்வந்துநின்றாள்
அந்நேரமுங்கணக்கர் ஆனையைவரவழைத்து
திருமஞ்சனங்கொண்டுவந்து சிறக்கவேதான்சொரிந்து
பட்டுமுதலுள்ளதெல்லாம் பண்பாகத்தான்கொடுத்தார்
ஆபரணமெல்லா மழகாகத்தான்கொடுத்தார்
எல்லாபதமு மினிமையாய்த்தான்கொடுத்தார்
அந்நேரமேதானும் அமராவதியாளும்
தருமத்தையெல்லாம்நான் தவறாமல்செய்திடவும்
என்னையிழுத்துவந்து இடருகள்செய்வானேன்
வகைவிவரமாக வசனிக்கவேணுமென்றாள்
அப்போதுநற்கணக்கர் அறிவித்தாருத்தமிக்கு

உன்னாலேயென்பே ருலகமெல்லாந்தானறிய
செய்துவைத்தேனுத்தமியே செய்தபிழைபொறுப்பாய்
என்னோன்பிருந்தவர்கள் இகபரங்கள்தானடைவார்
இந்தவிபரம் எடுத்திராபாவிபற்கு
நீபட்டதெண்டனைகள் கிலேபாகத்தானடக்கும்
அப்படிக்குவாராமல் உன்னையழைத்துவந்தோம்
உன்னாலேமோட்ச மடையவென்றேஉன்னைநாம்
கூட்டிவந்ததென்றவுடன் கொப்பனையாள்கேட்டிடுவாள்
அறிவித்தால்நானு மப்படியேநடப்பேனென
சொல்லுகிறேன்கேளாய் சுகமானவென்பிறப்பே
சித்திரைமாசம் பதினெட்டாந்தேதியிலே
பூதலத்திலுள்ள புகழ்ந்தமனுச்செந்துவெல்லாம்
ஆண்பெண்ணுடனே படைவாகநோம்பிருந்து
ஆறுகுளத்திலே யன்பாகத்தான்முழுகி
திருநீறணிந்து சிவனைமிகவணங்கி
சூரியநமஸ்காரந் தொழுதுமிகவணங்கி
புதியபணிகளெல்லாம் பூட்டியலங்கரித்து
சாந்தாற்றரைமெழுகிச் சந்தனத்தாற்கோலமிட்டு
வாழைக்கரும்பு வான்கமுகுதானிரைத்து
பழக்குலைகளாலே பந்தற்கால்தானிருத்தி
மஞ்சள்குலையும் மாலையுந்தான் தூக்கி
பலகைதனைப்போட்டுப் பாவாடைமேல்விரித்துப்
வேழமுகத்து விநாயகனை முன்வைத்து
பூரணக்கும்பம்வைத்துப் பொன்னின்விளக்கேற்றி
நிறைநாழிவைத்து நிறைமரக்கால்தானும்வைத்து
அடைக்காயும்வெள்ளிலையும் அன்புடனேதான்படைத்து
சருக்கரையெள்ளுருண்டை சகலபதார்த்தமுடன்
கனிவகைகளுள்ளதெல்லாங் கட்டுடனேதான்படைத்து
கடலைதுவரைமுதல் காராமணிப்பயறும்
பயிறுவகையுள்ளதெல்லாம் பாங்குடனேதான்படைத்து
பருப்பரிசிபாணக்கம் பாங்குடனேதானும்வைத்து
பொன்விமெனழுத்தாணியுடன் புத்தகமுங்கூடவைத்து
உப்புமுதற்கற்பூர முள்ளதெல்லாந்தான்படைத்து
எள்ளுபருத்தி பேத்தகொருமுத்துகளும்
இத்தனையும்நன்றாய் யியல்பாகவைத்தபின்பு
புதுப்பானைதன்னிலே பொங்கலிட்டுக்கீழிறக்கி
புத்துருக்குநெய்யும் பொரிக்கரியும்பாற்குழம்பும்

கறிவகைகளுள்ளதையுங் கட்டாகத்தான்படைத்து
தயிரும்உரைத்துவைத்துச் சகலகறிவர்க்கமுடன்
நேமட்டையாக நைவேத்தியஞ்செய்து
அரகராவென்று அடிபணிந்துதெண்டனிட்டு
தூபம்புகைகாட்டித் தோத்திரங்கள்செய்துநன்றாய்
சூடன்பணிமாறிச் சூழக்குலவையிட்டு
வாத்தியங்களெல்லாம் வகைவகையாய்த்தான்கேட்டு
ஆண்டவரேயென்று அடிபணிந்துதெண்டனிட்டு
ஆசாரியர்தன்னை யன்புடனேகூட்டிவந்து
கட்டாகநன்றாய்க் கதைகள்படிக்கவைத்து
இன்பமாய்த்தானிருந்து இக்கதையைத்தான்கேட்டுக்
கேட்டுமுடிந்தபின்பு கிருபைவரத்தெண்டனிட்டு
இப்படியேநோன்பு இயல்பாயிருந்தவர்க்கு
இந்தக்கதையை யெழுதிபடித்தோர்க்கு
எல்லாப்பலமுங் கொடுப்போநாமேந்திழையே
புத்திரசம்பத்தும் புண்ணியமுண்டாகும்
மங்கிலியம்வாழ்ந்து மக்கள்தழைத்திருப்பார்
இந்தப்படிநோன்பு எல்லோருந்தானிருக்க
பூலோகமெல்லாம் புகழ்ந்துபறைசாற்றிடென்று
இந்தப்படிகணக்க ரியல்பாயுரைத்திடவே
நயினாருரைத்தபடி நன்றாய்க்கருத்தில்வைத்து
தப்பாமல்நோன்பிருந்து தவம்பெருவோமுத்தமரே
சித்திராபுத்திரரே சீமானேநீர்கேளீர்
உயிரோடேசொர்க்கம் வரவழைத்துக்கொண்டாக்கால்
இப்போதேயென்னை யிங்கேவரவழைத்து
என்தருமமெல்லாந் தவிர்ந்துவிடுமென்றுசொல்ல
சித்திரபுத்திரற்குச் சிந்தைமிகவுண்டாகி
பூலோகத்திற்குப்போய் பொருங்கவேதான்வாழ்ந்து
தருமங்களெல்லாந் தப்பாமற்செய்திடவும்
போகவிடைகொடுப்போம் பொற்கொடியேகேளென்றார்
நூறுவயதிருப்பாய் நூறாண்டுசென்றபின்பு
உன்னையும்நானு முடனழைத்துக்கொள்ளுகிறேன்
ஆனதினால்நீயு மாக்கையழியுமுன்னே
பூந்தேரிலேரிப் போய்வருவாயென்றுசொல்ல
அப்படியேதேரேறி அமராவதிவருமுன்
அங்குநடக்கு மதிசயத்தைகேளுமினி
கூறியகொம்பதினால் கொன்றபசுதானும்
இவரையுமருந்தாமல் இனத்தோடுங்கூடாமல்
கண்ணீரொழுகிக் கதறுதேநற்பசுவும்
அமராவதிகளென் அன்னையிறந்தாளென்று
ஊராருறவுள்ளா ருற்றார்கள்தான்கூடி

கூப்பிட்டழுது கோவிந்தாவென்றிடவே
ஆண்டிப்பரதேசி யனியாயமென் றழவே
அமராவதிகூட்டை யன்பாகத்தானெடுத்து
செய்யுஞ்சடங்குகளைச் சீக்கிரமாய்த்தான்பார்த்து
மஞ்சளையும்பூசி மலர்களுந்தான்சூட்டி
பட்டுமுடுத்திப் பாவாடைமேற்போட்டு
மாலைகழுத்திலிட்டு மருக்கொழுந் துதானணிந்தார்
பூந்தேருங்கட்டிப் புட்பமலங்கரித்து
வாத்தியங்களெல்லாம் வரிசையாய்த்தான்முழங்கி
குரவைதனைமுழங்கி கோவிந்தாவென் றுசொல்லி
அமராவதிகூட்டை யாலதொருபூந்தேரில்
வைத்துமேதானெடுத்து வானமெல்லாந்தான்முழங்க
மயானக்கரையில் வகைவகையாய்ப்பந்தலிட்டு
சந்தனக்கட்டை சதிராகத்தானடுக்கி
கருமங்கள்செய்தார்கள் காரிகைக்குமப்போது
கொள்ளிகள்வைத்துக் குடமுமுடைத்தார்கள்
இந்தப்படியாக இருக்குந்தருவாயில்
வாய்க்கரிசிபோட்டார்கள் வந்தார்களெல்லோரும்
அமராவதியாளை யனுப்பினாரந்நேரம்
மயானகரைக்கு வந்தாளேதேரோடும்
கட்டையிலேயிட்ட கனத்தவுடல்புகுந்தவுடன்
செட்டிச்சியார்தனக்குச் சீவன்பிறந்ததுவே
நித்திரைதெளிந்ததுபோல் நினைவுமிசவுண்டாகிச்
சிவசிவாவென்று சிவனைமிகத்தொழுதாள்
திசைநோக்கித்தானும் தெண்டனிட்டாளுத்தமியும்
நன்மையுந்துன்மையு நடுவெழுதவந்தவரே
காணாதகாட்சியெல்லாம் காட்டிவைத்தீர்சீமானே
படாத்பாடெல்லாம் படுத்திவைத்தீர்சீமானே
இந்தப்படிநினைத்து ஏகினாளுத்தமியும்
அடுக்கினகட்டையெல்லாம் ஆல்போலதளர்ந்திடவே
அமராவதியாள் அகத்திலேவந்தவுடன்
உற்றாருறவுடையார் ஊராரைக்கூட்டிவந்து
போசனம்பண்ணுவித்து போகவிடைகொடுத்தாள்
தருமங்களெல்லாந் தப்பாமல்செய்திடுவாள்
நயினார்தன்நோம்பு நன்றாகவிருக்கவென்று
நாடகனார்தம்மிடத்தில் நன்றாகயறிவித்தார்
தருமராசாவுமப்போ தானுமிகப்பயந்து
ஸ்ரீபுருஷாள்தானுஞ் சிறக்கவேதான்பிறந்தார்
சித்திரைமாதம் பதினெட்டாந்தேதியிலே
சித்திரைக்குச்சித்திரையிற் சீராய்பவுரணையில்
பூலோகத்திலுள்ள புகழ்ந்தமானுடரெல்லாம்

நயினார்திருநோன்பு நன்றாகத்தானிருங்கள்
என்றுசொல்லிவள்ளுவனும் எடுத்துரைசான்றிடவே
பறையோசைக்கேட்டுப் பதம்பெற்றேமென்றுசொல்லிப்
பலகைகளைப்போட்டுப் பாவாடைமேல்விரித்து
நிறைநாழிவைத்து நிறைமரக்கால்தன்னும்வைத்து
தேங்காய்ப்பழமுஞ் சிறக்கவேதானும்வைத்து
சருக்கரைஎள்ளுண்டை சகலபதார்த்தமுடன்
பருப்பரிசிபாணக்கம் பாங்குடனேதான்படைத்து
கறிவகைகளுள்ளதெல்லாங் கடுகவேதான்படைத்து
பொங்கலுமிட்டுப்போதவேதான்படைதது
திருக்கண்ணமுதுஞ் சேகரமாய்த்தானும்வைத்தப்
புத்திருக்கன்னமதும் போதவேதான்படைத்து
தூபதீபங்காட்டித் தோத்திரங்கள்தான்செய்து
ஏங்கிப்பாதவித்து இருக்குந்தருவாயில்
உத்தமனார்தாமு முடனேயறிந்தார்காண்
இதற்கென்னசெய்வமென்று எற்றபடிநினைத்தார்
பார்வதியாளிடத்திற் பண்பாகச்சொல்லவென்று
சித்திரபுத்திரருஞ் சிறப்பாகத்தான்போயி
யெந்தன்பிறப்புள்ளா ரெல்லோருங்காமறிய
என்னோன்புநல்விரதம் எல்லோருந்தானிருக்க
வேணுமென்றேநினைந்து மேன்மையுள்ளச்செட்டிச்சி
அமராவதியாளை யன்புடையமாதரசை
வரவழைத்துநானும் வகைபடியேசொல்லிவிட்டேன்
சொன்னபடியவளுந் தோத்திரங்கள்செய்துமிகப்
பூலோகத்துள்ளே புகழ்ந்தமனுடர்க்குரைத்தாள்
விரதமிருந்து விஸ்தாரஞ்செய்துவைத்தாள்
எந்தன்பிறப்பை எடுத்துரைக்கயாருமில்லை
சிவனாருமப்போ சிந்தைமிகவுண்டாக்கி
பார்வதியம்மாளைப் பக்கத்திற்றானழைத்து
புத்திரநற்பிறப்பை பேராகமிகநீயும்
பூலோகந்தானறியப் போய்ச்சொல்லுமென்றுரைத்தார்
பார்ப்பாத்திவேஷம் புகுந்தாளேபார்வதியும்
கையிற்பிரம்புங் கனத்ததொருபுத்தகமும்
தானெடுத்துக்கொண்டு சதிராகவந்திருந்து

எதுக்குநீயும் இளைப்புடனேயிருக்கின்றாய்
என்னுடனேநீயு முரைத்திடுவாயுத்தமியே
அமராவதியாள் அறிவுமிகவுண்டாகி
நயினார்திருநோன்பு நாங்களிருக்கின்றோம்
அவருடையபிறப்பை யறிவிப்பாரில்லாவிடில்
கேளுங்களிக்கதையைக் கிருபையுடன்சொல்லுகிறேன்
நாட்டுக்கணக்கர் நமனார்பெருங்கணக்கர்
பூலோகத்துள்ளே புகழ்ந்தமனுடருக்கும்
நன்மையுந்துன்மையு நடுவெழுதவேணுமென்று
எமதர்மர்வாசலிலே யிருந்துகணக்கெழுதுவதும்
பிறப்பும்வளர்ப்பும் பேரானநல்வளமும்
தவத்தாலேவந்தகதை தானேயுரைத்திடுவாள்
தவத்தருமைகண்டு சங்கதியாய்வந்ததுவும்
சம்புசலத்திற் றாமரையிருந்ததுவும்
பசுவின்வயிற்றில் பாலன்பிறந்ததுவும்
எல்லாக்கதையும் எடுத்துரைத்தாள்பிராமணியும்
புத்தகமுந்தானும் பொன்னினெழுத்தாணியுடன்
கேட்டார்களெல்லோரும் கிருபையுடனிருந்து
தெண்டனிட்டுதான்பணிந்து திருநீறுவாங்கிவிட்டார்
சாந்துசவ்வாது சந்தனமுந்தான்கொடுத்தார்
அடைக்காயும்வெள்ளிலையும் அன்புடனேதான்கொடுத்தார்
மாலைகழுத்திலிட்டார் மண்டலமெல்லாமறிய
ஆபரணபூஷணமு மங்நேரந்தான்கொடுத்தார்
இப்படியேவரிசைபெற்று ஏகினாள்பார்வதியும்
சிவனாரிடத்தில் சேர்ந்திருந்தாள்பார்வதியும்
புத்திரனாரிடத்தில் போனதொருசேதியெல்லாம்
சிவனாருங்கேட்க சிந்தைகளிகூர்ந்து
செப்பினாள்பார்வதியும் செய்தியொன்றுந்தப்பாமல்
பூலோகந்தானறிய போந்ததெல்லாஞ்சொன்னவுடன்
புத்திரருமப்போ புகழ்ந்துமிகத்தொழுது
இயமரிடம்வருவதற்கு யேற்றவிடைவாங்கி
புத்திரரும்வந்து புகழ்ந்துமிகத்தொழுது
இந்தக்கதையைஇன்பமாய்க்கேட்டவுடன்
அமராபதியாட்கு அறிவுமிகவுண்டாக்கி
செல்வங்களெல்லாஞ் சேரவேயுண்டாக்கி
நாளுக்குநாளதிகம் நன்றாய்த்தழைத்ததுகாண்

கேட்டபேரெல்லோருங் கிளைகளுடன்வாழ்ந்திருந்தார்
நினைத்தபடிமுடிந்து நீடூழிவாழ்ந்திருந்தார்
அமராபதியாட்கு ஆண்டுதிகைத்ததுவே
நோன்புகள்செய்தாட்கு நூறுண்டுசென்றவுடன்
சித்திரபுத்திரருஞ் சிந்தைதனிலேதெரிந்து
நோன்புமறவாமல் நூறுண்டுதானிருந்தாள்
அவளையுமிங்கே யழைக்கவேவேண்டுமென்று
கூட்டோடேசொர்க்கத்திற் கூட்டிவரவேண்டுமென்று
பூந்தேரனுப்பினர் புண்ணியனாரன்புடனே
அந்நேரந்தானு மமராபதியாளும்
நூறுவயதளவுநோன்புவிடாதிருந்தேன்
சிவலோகம்போகிறேன் செகத்துள்ளேபுண்ணியரே
நோன்புவிரதத்தை நுணுக்கமாய்தானறிந்து
ஆண்டாண்டுகள்தோறு மன்பாகத்தானிருந்து
கிருபைபெறவேயிருந்து கேளுங்களிக்கதையை
பயபக்தியாயிருந்து பலன்பெறுங்கள்புண்ணியரே
என்றுமிகச்சொல்லி யேற்றதொருஉத்தமியும்
அந்தியகாலம் அடுக்கவேவந்திடவே
தானதருமங்கள் தயவாகத்தான்கொடுத்தாள்
பிராமணிபோசனங்கள் பிரியமாய்நடத்துவித்தாள்
சிவபூசைகுருபூசை செய்துமேதான்முடித்து
கூட்டோடேசொற்கத்திற் கொடுக்கிறேனென்றுரைத்தாள்
இந்தப்படிசொல்லி யிருக்குந்தருவாயில்
அந்நேரம்வந்ததுகாண் அழகானபூந்தேரும்
அமராபதியும் அவள்தர்மராசாவும்
இருபேருமொன்றாய் யேறினர்தேர்மீதில்
சிவகணங்கள்வந்து தேர்கொண்டுபோனர்கள்
பூமாரியாகப் பொழிந்தார்களன்னேரம்
பரமசிவனும் பார்வதியுமிதுகண்டு
சொற்கத்துவாசலையுந் திறக்கவேசொன்னார்காண்
சித்திரபுத்திரரை சென்றுமேதெண்டனிட்டு
சிவனோடுமையவளைச் சேரவேதெண்டனிட்டு
சிவனிடத்தில் செப்பினளுத்தமியாள்
தருமங்கள்செய்யவின்னந் தரணிதனிற்பிறக்க
புத்திரருமப்படியே பொருந்திப்பிறப்பதற்குப்
பிர்மாவைப்பார்த்துப் பிறப்பிக்கச்சொல்லினர்காண்

அந்நேரம்பிர்மாவு மகமகிழ்ந்துகொண்டாடி
தலைமகளாப் பிரப்பித்தாரந்நேரம்
தருமராசாவையுந் தலைமகனைப்பிறப்பித்தான்
ஒருவருக்கொருவர் ஒப்புறவாழ்ந்திருந்தார்
அந்தப்புறவீதிலும் புகழ்ந்துநடத்தினர்காண்
புண்ணியங்களெல்லாம் புகழ்ந்துநடத்தினர்காண்
அன்னக்கொடிகட்டி யடைவாகத்தான்வாழ்ந்து
தவறாமல்நோன்பு தானிருந்தாரப்போது
எல்லோருமன்னேன்பை யிருந்தார்காண்கண்டீரோ
ஆனபடிவாழ்ந்தே ஆண்டுநூறானபின்பு
சித்திரபுத்திரருஞ் தேரையனுப்பினர்காண்
கூட்டிவந்துவிட்டார்கள் குற்றமில்லாவிருவரையும்
இன்னமுந்தான்பிறக்கவேணுமோவேந்திழையே
என்று-சித்திராபுத்திரர்யிதமாகத்தான்கேட்க
இறப்பதுவும்பிறப்பதுவும் யினியெனக்காகாது
கலியுகங்கள்வந்து கலந்துதேபுண்ணியரே
அதன்மங்கள்வந்து அழிக்குமேபுண்ணியரே
நட்சேத்திரப்பதவி நலமாகவருளுமென்று
சிவனரிடத்திலவர் செய்திகள்தானுரைத்து
அன்னேரமேபிர்மா அப்படியேசெய்துவைக்க
நட்சேத்திரப்பதத்தில் நன்குடனேவாழ்ந்திருந்தார்
இந்தக்கதையை யெடுத்துரைக்கக்கேட்டவர்கள்
ஆல்போல்தழைத்து அருகுபோல்வேரூன்றி
மூங்கில்போலன்னைசுர்ற முசியாவல்வாழியவே
பூலோகமெல்லாம் பொருந்தவேவாழியவே
எல்லோரும்நன்று யினிதாகவாழியவே
சித்திரபுத்திரனர் சீமானும்வாழியவே
பொன்னினெழுத்தாணியுடன புத்தகமும்வாழியவே
நெல்வலிநாதர் நெடுங்காலம்வாழியவே
காந்திமதியம்மாளுங் கணபதியும்வாழியவே.

அமராவதிகதை.

முற்றிற்று.